

பிறகென்ன...
கம்மன்பில அண்ணனுக்கு
அவலென்ன பொரியே
கிடைச்ச மாதிரித்தான்!


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை:20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 320 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 25, செவ்வாய்க்கிழமை 11.10.2016


## சமாதானம், பாதுகாப்பு மேம்பட ஆசிய ஒத்துழைப்பு மாநாடு உதவும்

*தாய்லாந்தில் கூறினார் ஜனாதிபதி*

கொழும்பு, ஒக். 11

ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் தொடர்பான இரண்டாவது உச்சி மாநாட்டின் பெறுபேறுகள் ஆசிய ஒத்துழைப்பு பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கிடையே சமாதானம், பாதுகாப்பு மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்துவதற்கு உதவும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

பக்.04

### அரசு - கூட்டமைப்பு இடையே

# பௌத்தத்தால் முரண்பாடு

*ரணிலின் கருத்துக்கு சுமந்திரன் மறுப்பு*

கொழும்பு, ஒக்ரோபர் 11

புதிய அரசமைப்பிலும் பௌத்த மதத்துக்கான முக்கியத்துவம் வழங்கப்படும். அதில் எவ்வித மாற்றங்களும் கிடையாது, இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்கம் தெரிவித்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்தைக் கூட்டமைப்பு மறுத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதைப் போன்று பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் இணங்கவில்லை எனக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற பௌத்த விகாரையொன்றின் கட்டடத் திறப்பு விழாவில் வைத்தே பிரதமர் ரணில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

தற்போதைய அரசமைப்

பக்.05



# டென்மார்க்கில் மாலதி நினைவு

டென்மார்க், ஒக். 11

விடுதலைப் புலிகளின் முதல் பெண் போராளி 2ஆம் லெப். மாலதியின் 29ஆவது வீர வணக்க நிகழ்வும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் விழித்தெழுவோம் என்ற நிகழ்வும் டென்மார்க்கின் ஸ்ரூர் நகரில் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

பொதுச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. 2ஆம் லெப். மாலதி, லெப்.கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் திரு

பக்.04

## கல்வியைக் கைவிட்டது வடக்கு மாகாண அரசு

*உறுப்பினர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஒக். 11

வடக்கு மாகாண சபை தனது மூன்றாண்டு காலத்தைப் பூர்த்தி செய்துள்ளபோதும் கல்வித்துறை வளர்ச்சிக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயற்றிட்டம் ஒன்றை இதுவரை முன்மொழியவில்லை. அதிபர், ஆசிரியர்களின் நலன்களில் சங்கங்கள் அதிக கவனத்தைச் செலுத்துகின்றன.

பக்.06

## 13 ஆவது நாளாக தொடர்கிறது போராட்டம்

கொழும்பு, ஒக். 11

1000 ரூபா சம்பள உயர்வு கோரி மலையகமெங்கும் தோட்டத்

பக்.05

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்

கொழும்பு, ஒக். 11

இலங்கைக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்யும் வகையில் கடலுக்கு அடியில் மின்சார பரிமாற்ற கட்டமைப்பு ஒன்றை

பக்.06



## கொழும்பு வந்தார் ஐ.நா. அதிகாரி

கொழும்பு, ஒக். 11

உத்தியோகபூர்வ பயணமாக நேற்றையதினம் கொழும்பு வந்தடைந்த ஐ. நாவின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசேக் நடியா, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது அவர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல

பக்.23

### குளவிக் கொட்டுக்கு இலக்காகி

## பனையிலிருந்து வீழ்ந்த குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 11

பனை ஓலை வெட்டும் போது கருங்குழவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பத்தலைவர் மரத்தில் இருந்து கையை விட்டு கீழே விழுந்து பரிதாபமாக சாவடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று மாலை 5

பக்.23

### சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை

## 14 படையினருக்கு இருவார மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 11

சிறுப்பிட்டியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த 14 இராணுவத்தினரையும் இம் மாதம் 24 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கு மாறு யாழ். நீதி

பக்.04

## மருதனார்மடத்தில் பிரபாவின் சுவரொட்டி



யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். மாவட்டம் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள பஸ் நிலையத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் உருவப் படம் மற்றும் தமிழீழ தேசிய அடையாளங்கள்

பக்.04

## தமிழர்களின் புரிந்துணர்வை வேடிக்கை பார்க்கிறது அரசு

*ஜேர்மன் தூதுவரிடம் முறையிட்டார் முதலமைச்சர்*

யாழ்ப்பாணம் ஒக் 11

தமிழ் மக்களின் புரிந்துணர்வை வேடிக்கை பார்க்கும் நிலையில் தான் தற்போதைய அரசு செயற்படுகின்றது. மாகாண சபைகள் மீதும் அது தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது.



இவ்வாறு இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ன் ரோதேயிடம் வடினார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கைக்கான ஜேர்மன்

பக்.04

## எஸ்.பியால் 8 இலட்சம் வருமானம்

யாழ்ப்பாணம், ஒக். 11

எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் யாழ். வருகையால் மாநகர சபைக்கு சுமார் 8 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக மாநாகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

தென்

பக்.06

## ஒழுக்கமீறலில் ஈடுபட்டது ராணுவம்

*உண்மையைப் போட்டுடைத்தார் முன்னாள் கடற்படை அதிகாரி*

கொழும்பு, ஒக். 11



இராணுவத்தினர் போரின்போது ஒழுக்க மீறல்களில் ஈடுபட்டனர் என்று, ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியான கொமடோர் அஜித் போயகொட தெரிவித்துள்ளார்.

'நீண்ட அவதானிப்பு: போர், அடிமைத்தனத்திலிருந்து

பக்.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பில் அனைத்துக்கும் தீர்வு

## சுவிஸ் சபாநாயகர் நம்பிக்கை



கொழும்பு, ஒக் 11
இலங்கை அரசு தயாரித்து வரும் புதிய அரசமைப்பு நாட்டில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வை வழங்குவதாக அமையும் என சுவிற்சர்லாந்து சபாநாயகர் கிறிஸ்டா மார்க்வெல்டர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை வந்துள்ள சுவிற்சர்லாந்து சபாநாயகர் நேற்று முன்தினம் கண்டி சிறி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மல்வத்து பீட மகாநாயக்க தேரரரையும் சந்தித்துப் பேசினார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர், அரசமைப்பு மறுசீரமைப்புப்பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட முக்கிய பிரமுகர்களுடன் இடம்பெற்ற சந்திப் புக்களின்போதும் அரசமைப்பின் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரசமைப்புத் திருத்தப் பணிகளின்போது, அனைத்து அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் தமது கருத்துக்களை வெளியிட்டு அவை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடுவதற்கான களமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கமைய இலங்கையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடியதும், அனைத்து மக்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு, நாட்டை முன்னோக்கி நகர்த்தக்கூடியதுமான சிறந்த அரசமைப்பொன்று உருவாக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏராளமான புலம்பெயர் மக்கள் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருவதால் இலங்கைக்கும் சுவிஸுக்கும் இடையில் நல்ல உறவுகள் இருப்பதாகவும், பொருளாதார ரீதியாகவும் இருநாடுகளுக்கிடையில் சிறந்த உறவு நிலவுவதாகவும் அவர் மேலும் கூறினார். (த)

## நீர் மின் உற்பத்தி பெரும் வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 11
நீர் மின் உற்பத்தியின் அளவு குறைவடைந்து வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக, நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளமையே இதற்குக் காரணமெனச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை- மின்னுற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ள தாக மின்சக்தி எரிசக்தி அமைச் சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இந்த நிலையில் மின் சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் வேண்டு கோள் விடுப்பதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறெனினும் நாட்டில் மின்வெட்டை செயற்படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## எரிந்த நிலையில் மூதூரில் இரண்டு சடலங்கள் மீட்பு

திருமலை, ஒக். 11
திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலிம்நகர் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து எரிந்த நிலையில் ஆணொருவரினதும், பெண்ணொருவரினதும் சடலங்களை நேற்றுக் காலை மீட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

காமீல் பைரூஸ் (வயது - 32), ஜுனைதீன் ஆயிஷா (வயது - 25) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

குறித்த ஆண், ஏற்கனவே மூன்று திருமணங்கள் முடித்து அத்திருமண உறவுகளை முறித்து வாழ்ந்து வந்தார். அதேவேளை, குறித்த பெண்ணும் கணவருடனான தொடர்பைமுறித்து, சடலமாக மீட்கப்பட்ட ஆணுடன் தொடர்பை ஏற்படுத்தி வாழ்ந்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தற்கொலையா அல்லது கொலையா என்பது குறித்த விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# இலங்கைப் பொருளாதாரம் உயர்வுக்கு ஈரான் பங்களிப்பு

## மைத்திரியிடம் கூறினார் அந்த நாட்டு ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 11
ஈரான் இலங்கைக்கு எண்ணெய் வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்கின்றது. எதிர்காலத்தில் இந்தச் செயற்பாடுகள்மேலும்சீரடையும். இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரொஹானி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்துக்கு நான்கு நாள்பயணம்மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஈரானிய ஜனாதிபதி கலாநிதி ஹசன் ரொஹானிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பகல் பாங்கொக் நகரில் இடம்பெற்றது.

இரு நாட்டு உறவுகளையும் மேலும் பலப்படுத்துவதற்கு இந்தச் சந்திப்பு பெரும் உந்துசக்தியாகுமென்று கூறிய ஈரானிய ஜனாதிபதி, விரைவில் ஈரானுக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுத்தார்.

ஈரான் இலங்கைக்கு எண்ணெய் வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்வதுடன் எதிர்காலத்தில் அந்தச் செயற்பாடுகள் மேலும் சீரடையும் என்று கூறிய ஈரான் ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளுக்குப் புதிய வாய்ப்புகள் வழங்கப்படுமென்றும் கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையில் இரு தரப்புக் கொள்வனவுகளை அதிகரிப்பதற்குச் சந்திப்பின்போது ஈரானிய ஜனாதிபதி யோசனை வெளியிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஈரானும் இலங்கையும் உள்நாட்டு முரண்பாடுகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வுடன் செயற்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் உமா ஓயா அபிவிருத்தித் திட்டத்துக்காக ஈரானிய அரசு வழங்கும் உதவிகள் தொடர்பில் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளிலும் அபிவிருத்தித் துறையிலும் ஈரானும் இலங்கையும் ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார். (த-5)

## திருமலை சிறையில் வாணிவிழா

கொழும்பு, ஒக் 11
திருகோணமலை சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் வாணிவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

சிறைச்சாலை அத்தியட்சகர் பிரசாத் ஹேமந்த தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறைச்சாலை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் கைதிகள் பங்குபற்றினர். (த)







நவராத்திரி விழாவின் ஆயுத பூசை நிகழ்வு உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் உதயன் குழுமத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவனும் ஊழியர்களும் கலந்துகொண்டனர். நிகழ்வில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகள் இசைவிருந்து வழங்கினர் (த-ரி7)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். பிரதேச செயலகத்துக்கு முன் முஸ்லிம்கள் நேற்றுக் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஒக். 11
யாழ்ப்பாணம் பரச்சேரி வெளி காணியில் தற்போது குடியிருக்கும் முஸ்லிம் மக்கள் யாழ்.பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
யாழ்.பொம்மைவெளிக்கு அருகில் பரச்சேரி வெளி பிரதேசம் உள்ளது. அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் தாம் நீண்டகாலமாக வாடகைக்கு குடியிருந்த நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பரச்சேரி வெளி 24 குடும்பங்கள் தனி நபர் ஒருவரிடமிருந்து காணிகளைக் கொள்வனவு செய்துள்ளோம். தற்போது அந்தக் காணிகளில் தற்காலிக வதிவிடங்களை அமைத்துவாழ்ந்துவருகின்றோம். இந்திய வீட்டுத்திட்டத்துக்கான பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளை எமது காணி உறுதிகளில் நெற்பரப்புக் காணிகள் என பதியப்பட்டுள்ளதனால், அவற்றில் வீடுகள் அமைப்பதற்கான அனுமதிகளை கமநல சேவைகள் திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளுமாறு எமக்குப் பணிக்கப்பட்டது. நாம் இது தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளவதுக்காக குறித்த திணைக்களத்துக்கு சென்றிருந்த வேளை, இது வயற்காணி பிரதேசமாக காணப்படுவதாலும் மழைகாலங்களில் அதிகளவில் நீர் தேங்கிநிற்கும் பிரதேசமாக காணப்படுவதாலும் நாம் அனுமதி தரமுடியாது என்று எம்மிடம் அதிகாரிகள் தெரிவித்தனர். எமது பிரச்சினைகள் தொடர்பில் நாம் அதிகாரிகளையும் திணைக்களங்களையும் அணுகிய போதும் எந்தவித பலனும் இன்றுவரை எமக்கு கிடைக்கவில்லை. எமது காணிகள் விவசாயத்துக்கு உகந்தது அல்ல என விவசாய சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட கடிதம் எம்மிடம் உள்ளது.
அத்துடன் அந்தப் பிரதேசத்தில் நீண்டகாலமாக விவசாய நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்தப்பிரதேசத்தில் முன்னைய காலங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் இருந்ததுக்கான அடையாளங்கள் உள்ளன. இவை எல்லாம் தெரிந்தும் இவர்கள் எமக்கு அனுமதிகள் தரமறுக்கின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
(வ-4,ரி1)

## துமிந்தவுக்கு மஞ்சள் காமாளை

கொழும்பு, ஒக் 11
பாரத லக்ஸ்மன் கொலை தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வா, தொடர்ந்தும் வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
மஞ்சள் காமாளை காரணமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும், ஆணையாளருமான துசார உப்புல்தெனிய குறிப்பிட்டுள்ளார். (கு)

# கைதான 7 சிறுவர்களையும் சீர்திருத்தப்பள்ளியில் சேர்க்க கிளிநொச்சி நீதிமன்று உத்தரவு

கிளிநொச்சி, ஒக். 11
சட்ட விரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட 7 சிறுவர்களையும் சிறுவர் சீர் திருத்தப் பள்ளிகளில் இணைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் திருட்டு முயற்சி மற்றும் சிறுவர் தொழில் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக தெரிவித்து மாவட்டதின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த 7 சிறுவர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
கிளிநொச்சி நகர்ப்புறத்தில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் அத்துமீறி நுழைந்து அங்கு வீட்டின் உரிமையாளரால் வளர்க்கப்படும் பறவைகளைத் திருட முயன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டு அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 3 சிறுவர்கள், மற்றும் நேற்று முன்தினம் பரந்தன் பகுதியில் கொழும்பு செல்லும் நோக்கில் தனித்து நின்றதாகக் கூறப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 4 சிறுவர்களுமாக 7 சிறுவர்களே இவ்வாறு நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இந்த வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்ட சிறுவர்கள் 7 பேரையும் யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் இணைக்குமாறு பொலி ஸாருக்கு உத்தரவிட்டார்.
(வ-21,101,ரி3)

## சிறுமி மீது துர்நடத்தை முயற்சி; 3ஆவது சந்தேகநபர் கைதானார்

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி எட்டு பேரால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்ட குற்றச்சாட்டு வழக்கில், 3 ஆவது சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மேலும் 5 சந்தேகநபர்கள் பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.
கைதான சந்தேகநபர் நேற்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்குத் தயாராக சந்தேக நபரை கொண்டு வருமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டார். சம்பவம் தொடர்பில் கடந்த மாதம் 9ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. சிறுமியிடம் இருந்து பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் 8 சந்தேக நபர்கள் இனங் காணப்பட்டனர்.
இந்த நிலையில் இரண்டு சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மன்றின் உத்தரவுக்கு அமைய கடந்த 3ஆம் திகதி அவர்கள் பருத்தித்துறை நீதிவான் மன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். சிறுமி இருவரையும் அடையாளம் காட்டினார். அவர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,109)

## திருத்த வேலைகளால் மின் தடை ஏற்படும்

யாழ்ப்பாணம், ஒக்.11
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ். பிரதேசத்தில் சாமியன் அரசடி, சம்மந்தர் கடை, கிழவி தோட்டம், யாக்கரு, கப்பூது, கலிகை, வலிக்கந்தோட்டம், துன்னாலை, தாமரைக் குளத் தடி, இந்திர அம்மன் கோயிலடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பெரியார் குளம் (பூந்தோட்டம்), சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மன்னார்ப் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து ஆண்டாங் குளம்வரை, அடம்பன், அரிப்பு சவேரியார் குளம், சி.ஈ.சி.பி. ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோ கம் தடைப்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார். (வ-ரி)

# தென்மராட்சி முன்பள்ளிகளின் ஆசிரியர் தின விழா இன்று

தென்மராட்சி, ஒக்.11
தென்மராட்சி கல்வி வலயத்தினால் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) த.கிருபாகரனும் கலந்துகொள்வர்.
நிகழ்வில் ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியைகள் சேவையில் உள்ள 85 முன்பள்ளிகளைச் சேர்ந்த 157 ஆசிரியர்கள் கௌரவிப்பும் முன்பள்ளி ஆசிரியைகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறுமென வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தெரிவித்தார்.
(வ-9)

# யோகர் சுவாமி கூறியதைப் போன்று தமிழ் மக்கள் அனுபவித்துவிட்டனர்

## கிளிநொச்சியில் தெரிவித்தார் அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், ஒக். 11
தமிழ் மக்கள் சிங்கள மக்களின் அட்டூழியங்களுக்கு உட்படுவார் என்றும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு அடிமைப்பட்டு வாழும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் தமிழ் மக்கள் அடிவாங்குவார்கள் என்றும் யோகர் சுவாமிகள் தன்னுடைய காலத்திலேயே கூறியிருக்கின்றார். அவர் சொன்னது போல தமிழ் மக்கள் கொடூரமான போரை சந்தித்து எல்லாவற்றையும் அனுபவித்து விட்டார்கள்.
இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு சிறைசாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன்.
போர்க்காலத்தில் வங்கி ஆவணங்களை தொலைத்த கிளிநொச்சியைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் 54 பேருக்கு அவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது மீள்குடியேற்ற அமைச்சர் தெவித்ததாவது:
வடக்கு மாகாணம் வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. இன்னும் நான்கு ஐந்து வருடங்களில் இந்த மாவட்டங்கள் முன்னேற்றம் அடையும். அதற்கு எங்களுடைய அரசு முன் வந்திருக்கிறது. ஜனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை முன் வந்து செய்து வருகின்றார்கள். அதனை நான் கூற விரும்புகின்றேன். அதனை தமிழ் மக்கள் மறுக்க முடியாது. அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களை கைவிடமாட்டார்கள் என்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். நாங்கள் முற்போக்காக எங்களுடைய வேலைகளைச் செய்யும் போது அரசியல் ரீதியான தடைகள் பல இருக்கின்றன.
ஆனால் தமிழ் மக்கள் இந்த அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அரசு பிழை செய்தால் அதனை மக்கள் தாராளமாக கூறலாம். ஆனால் அபிவிருத்திப் பணிகளை செய்கின்றபோதும் அதனை எதிர்க்கிறதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் - என்றார்.
இந்த நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டி சில்வா, முகாமையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
(வ-4,ரி3,34,35)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 561
சீட்டிழுப்பு திகதி 10.10.2016
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
06 18 55 73 B
சுப்பர் ஜக்பொட்
ரூ.54,785,840/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 31
சீட்டிழுப்பு திகதி 2016.10.10
வெற்றி இலக்கங்கள்
01 03 36
50
10,868,700/-
102
2481415

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1304
சீட்டிழுப்பு திகதி 2016.10.10
வெற்றி இலக்கங்கள்
14 31 44 57 I
ரூ. 26,494,400/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம், பாதுகாப்பு மேம்பட

நம்பிக்கை வெளியிட்டார். தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நேற்று நடைபெற்ற ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடலின் இரண்டாவது உச்சி மாநாட்டில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் வருடங்களில் ஆசியா ஒரு புதிய நிதிக் கேந்திர நிலையமாகவும், நிதிச் சேவை தொழிற்றுறைக்கான மையமாகவும் மாறும். ஆசிய ஒத்துழைப்பு உரையாடலின் பங்கை ஒரு செயற்றிறனான மன்றமாக மேலும் கட்டியெழுப்பும் நோக்குடன் 'ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் தொலைநோக்கு 2030' மற்றும் ஆசிய கூட்டுறவுக் கலந்துரையாடல் பிராந்திய ஒத்துழைப்புக்கான விதிவரைவையும் ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் நாடுகளின் தலைவர்கள் அங்கீகரித்துள்ளனர்.

ஒரு உயர்ந்த வருமானம் பெறும் அபிவிருத்தி அடைந்த நாட்டின் நிலையை அடைவதே, வளர்ந்து வரும் இலங்கையின் நோக்கமாகும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான பல்வேறு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆசியக் கூட்டுறவுக் கலந்துரையாடல் பிராந்தியத்தில் சுற்றுலாத் துறைக்கு வாய்ப்பாக உள்ளது. இது எமது நாடுகளில் நிலையான சமூக, கலாசார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கை வகிக்கலாம். இலங்கையின் பொருளாதாரத்தை இயக்கும் ஒரு முக்கிய துறையாக சுற்றுலாத்துறை இருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு விஞ்ஞான தொழில்நுட்பத்துறையின் அபிவிருத்தியை ஒரு முக்கிய அம்சமாக நாம் கருதுகிறோம்-என்றார். (த-5)

## ஒழுக்கமீறலில் ஈடுபட்டது ராணுவம்

### உண்மையைப் போட்டுடைத்தார் முன்னாள் கடற்படை அதிகாரி

மீண்ட இலங்கை' என்ற புத்தகத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

காரைநகரில் 1991 ஆம் ஆண்டு தாக்குதலின் பின்னரான சம்பவம் தொடர்பில் அவர் தனது புத்தகத்தில் குறிப்பிடுகையில்,

நான் இராணுவத்தினரின் பல்வேறு விதமான அராஜகங்களையும் நேரில் பார்த்தேன். அதாவது ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் நிற்குமாறு இராணுவத்தினரால் அறிவுறுத்தப்பட்ட போது பெண்கள் எவ்வாறான அச்சத்துக்கு உள்ளாகினர் என்பதை என்னால் உணர முடிந்தது. இராணுவத்தினர் காரைநகரில் மக்களின் பொருள்களை அபகரிப்பதற்கான முயற்சியில் இறங்கினர். இவர்கள் இவ்வாறு செய்தால் பிரச்சினையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதை உணர்ந்துகொண்டோம். படையினரைக் கட்டுப்படுத்துமாறு அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் கூறினேன். இராணுவத்தினர் திட்டமிட்ட வகையில் கொள்ளையில் ஈடுபட்டனர். அதாவது சாமி அறையிலேயே மக்கள் தமது பெறுமதிமிக்க பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பார்கள் என்பதை இவர்கள் அறிந்திருந்தனர். இதனால் சாமி அறைகளை இராணுவத்தினர் உடைத்து அங்கு நகைகளைத்தேடினர். நான் ஏற்கனவே இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களைக் கேள்வியுற்ற போதிலும் நேரில் காண்பது இதுவே முதற்தடவையாகும்.

உங்களது வீடுகளுக்கு நீங்கள் ஒன்று அல்லது அதற்குச் சில வாரங்களுக்குப் பின்னால் திரும்பிச் செல்லும்போது அவை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் அனைத்தும் சூறையாடப்பட்டிருந்தால் அந்தச் சூழலை ஒரு தடவை கற்பனை செய்து பாருங்கள்.

உங்களது குடும்ப ஒளிப்படங்கள் அடங்கிய அல்பம் அந்நியர் ஒருவருக்கு ஒருபோதும் தேவைப்படாது. ஆனால் அது உங்களுக்கு மிக அரிய பொக்கிசமாகும். இதற்குள்ளே பல அரிய நினைவுகளை நீங்கள் பாதுகாத்து வைத்திருப்பீர்கள். தற்போது அந்த அரிய நினைவுகள் எல்லாவற்றையும் நீங்கள் இழந்திருப்பீர்கள். இது எவ்வளவு வேதனையானது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

நான் ஒரு சில இளம் இராணுவ அதிகாரிகளிடம் ஏன் இவ்வாறான கொள்ளைகள் இடம்பெறுகின்றன எனக் கேட்டிருந்தேன். இது புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குச் சாதகமாக அமையாதா? என்று நான் அவர்களைக் கேட்டேன்.

அதற்கு இராணுவ அதிகாரிகள், கண்ணிவெடியின்போது தமது கால்களை இழந்த இராணுவத்தினருக்குக் காப்புறுதி தேவைப்படுவது தொடர்பாக எனக்கு நீண்ட கதைகளைக் கூறினர்.

"இங்கே பாருங்கள், நீங்கள் உங்களுடைய இராணுவத்தினரின் கால்களைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். அதற்காக அரசு இருக்கிறது. அமைச்சு இருக்கிறது. அவர்களிடம் உங்களது இராணுவ வீரர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான பொறுப்புள்ள ஆள்கள் உள்ளனர். உங்களது இராணுவத்தினரின் நலன்களுக்காக மக்களின் பொருள்களைக் கொள்ளையிட வேண்டாம்" என நான் அவர்களிடம் தெரிவித்தேன். இந்தக் கதையை இராணுவத்தினரிடம் எடுத்துக் கூறுமாறும் நான் அவர்களிடம்கூறினேன். போரின்போது இவையெல்லாம் இடம்பெறுவது வழமைதான் என அவர்கள் என்னிடம் விவாதித்தார்கள்.

இருக்கலாம்.

இராணுவத்தினர் கொள்ளையில் ஈடுபடுவதை என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால் படையினர் தம்வசம் வைத்திருந்த களவாடப்பட்ட பொருள்களுடன் காரைநகரை விட்டு வெளியேறுவதை என்னால் தடுத்து நிறுத்த முடிந்தது. அதாவது இந்த சிப்பாய்கள் எமது கடற்படைப் படகுகளின் மூலமே வெளியேறிப்போக வேண்டியிருந்ததால் அவர்கள் தம்முடன் தமது இராணுவப் பொருள்களை மட்டுமே கொண்டு செல்ல முடியும் என்று நான் கட்டளை பிறப்பித்தேன்.

இந்தச் சிப்பாய்கள் தம்வசம் வைத்திருந்த பொருள்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றை ஓரிடத்தில் குவித்தனர். அவற்றில் திருமண ஒளிப்படங்கள் சிலவும் இருந்ததை நான் பார்த்தேன். இவை அந்நியர்களின் ஒளிப்படங்கள். அதாவது இவை அந்நியர்களின் வீடுகளிலிருந்து எடுக்கப்பட்ட அந்நியர்களின் ஒளிப்படங்கள். ஆகவே இது பணம் சம்பந்தப்பட்டதல்ல. இவ்வாறான விடயங்களை எவ்வாறு விளங்கிக் கொள்ள முடியும் என்பது எனக்குத் தெரியாது.

களவாடப்பட்ட பொருள்களில் சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்கள், ஈருருளிகள் போன்றனவும் காணப்பட்டன. இது சாதாரண கொள்ளை. ஆனால் பின்னர் இதுவே போரின் சின்னங்களைக் களவாடும் அளவுக்கு விரிவடைந்தது. பொருள்களை அழிக்குமாறு கட்டளையிடப்படும்போது, நீங்கள் எவ்வித வேறுபாடுமின்றி அனைத்துப் பொருள்களையும் அழிக்கும் அளவுக்கு உங்களது மனநிலை வளர்ந்திருக்கும் -என்றார். (த-5)

## தமிழர்களின் புரிந்துணர்வை

தூதுவர், யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட வடக்குமாகாண முதலமைச்சர், எமக்கான சுய நிர்ணய உரிமை, மக்களின் அபிலாசைகள் என்பன இன்னும் ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழியில் தான் இருந்து வருகிறது.

வடக்கு மாகாணத்தில் ஜேர்மன் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள், மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள், மீள்குடியேற்றங்கள், சுகாதார, கல்வி, வீடமைப்புத் திட்டங்கள், சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாகத் தூதுவர் என்னிடம் கேட்டறிந்தார். நடுவண் அரசு மாகாண சபைகளின் மீது தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது. இதனால் எங்களால் செய்யப்படுகின்ற பல செயற்பாடுகளுக்கும் பல இடையூறுகள் காணப்படுகின்றன என்பதை தூதுவரிடம் விளக்கிக் கூறினேன் -என்றார். (த-4-ரி)

அறிவித்தல்

ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
தரம்- 6 அனுமதி - 2017

எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 11.10.2016 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

விடுதியில் தங்கி கற்க விரும்பும் மாணவர்கள் அதற்குரிய விண்ணப்ப படிவங்களை தரம் 6 விண்ணப்ப படிவத்துடன் இணைத்துக் கையளிக்கவும்

**விண்ணப்ப முடிவுதிகதி 31.10.2016**

விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்.

Vacancy
at CANE HOSPICE

No.5, Sabapathippillai Road, Uduvil, Chunnakam.

Wanted

1. Nursing Officer / Health Promoter for the home based Palliative Care programme.
2. Health care worker with ability to drive a three - wheeler vehicle

Both will be working at the CANE Hospice

Salary : Negotiable.

Application Should be sent to The Chairman, CANE Hospice on or before 18.10.2016

0/5283 (11.17)

## டென்மார்...

வருவப்படத்துக்கு ஈகச்சுடர், மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மக்கள் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் டென்மார்க்கில் வாழும் ஈழத் தமிழ்மக்கள் பலர் உணர்ச்சிபூர்வமாகக் கலந்துகொண்டனர். (த-4)

விற்பனைக்கு

கடை பாவனைக்குரிய போத்தல் குளிரூட்டி, இரண்டு லாச்சி மேசை, கண்ணாடி அலுமாரி ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 314 8249

வாடகைக்குண்டு

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணத்தில் 3 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

076 575 5267

வேலையாள்கள் தேவை

கொழும்பு நகரில் வேலை செய்வதற்கு மேசன்மார், உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: 072 494 6075

மணமகள் தேவை

பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையுடன், பெற்றோருடன் வசிக்கின்ற, 23 வயது மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை.

075 486 9335 - மாமனார்

## சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை

வான் மன்று நேற்று உத்தரவிட்டது.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரியில் புத்தூர்ப் பகுதியில் இளைஞர்கள் இருவர் காணாமற்போகச்செய்யப்பட்டுக்கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்தக் காலப் பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய லெப்ரினன்ட் வீர சிங்க உட்பட 14 இராணுவத்தினர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக சட்ட மா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து யாழ். நீதிமன்றால் அந்த இராணுவத்தினருக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் 5 இராணுவத்தினர் கடந்த மாதம் 26 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. ஏனையவர்களுக்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 9 இராணுவத்தினரும் 6 சட்டத்தரணிகளூடாக மன்றில் முன்னிலையாகி பிணையில் விடுமாறு கோரினர். எனினும் அவர்களுடைய விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் சி.சதீஸ்தரன், 14 இராணுவத்தினரையும் இம்மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இதேவேளை இந்த வழக்கில் 16 இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அதில் இருவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-103)

## மருதனார்மடத்தில்

ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டியால் அங்கு நேற்றுச் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

தலைவர் பிரபாகரனின் படமும், தமிழீழத் தேசிய அடையாளச் சின்னங்களான புலி, செண்பகம், வாகை மரம் ஆகியவற்றின் படங்களும் அடங்கியதாக இந்தச் சுவரொட்டிகள் அமைந்துள்ளன. தமிழீழத் தேசிய துயர நாள்களும் அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. (த-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 பனடோல் அருந்திய மாணவன் சிகிச்சையில்

ஆசிரியரின் சிறிய தண்டனையை ஏற்க மறுத்த 16 வயது மாணவன் புத்தகங்களை பாடசாலையில் எறிந்துவிட்டு வீட்டுக்குச் சென்று 22 பனடோல்களை ஒரே தடவையில் அருந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் வடக்கில் நடந்துள்ளது.

வீட்டுப் பாடங்களை எழுதி வராததால் வகுப்பில் எழுந்து நிற்குமாறு ஆசிரியர் கூறியதால் ஆத்திரமடைந்த மாணவன் பாடம் முடிந்ததும் பாடப் புத்தகங்களை வீசிவிட்டு சென்றார் என்றும், இரவு வீட்டில் 22 பனடோல்களை ஒரே நேரத்தில் அருந்தி மயங்கிய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ரூ.5 லட். வரையான பிணக்கை நடுவர் சபைகள் கையாளலாம்

அச்சுவேலி, ஒக்.11

நடுவர் சபைகள் கையாளும் பணம் தொடர்பான பிணக்குகள் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் இருந்து ஐந்து லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நடுவர் சபை ஆணைக்குழு தெரிவித்தது.

சில இடங்களிலுள்ள நடுவர் சபையினர் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பணத்தொகை பற்றிய வழக்குகளை விசாரிக்கவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட் டியிருந்த நிலையில் ஆணைக் குழு இவ்வாறு தெரிவித்தது.

இது தொடர்பாக நடுவர் சபைகளின் தவிசாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைமைப் பீடம் வங்கிகளின் தலைமைப் பீடங்களுக்கு அறிவித்துள்ளது.

நடுவர் சபைகள் நாடு முழுவதும் பிரதேச செயலக பிரிவு வாரியாக செயற்படுகின்றன. இரண்டு தரப்பினர் இடையே ஏற்படும் பிணக்குகள் தொடர்பாக நடுவர் சபைக்கு முதலாம் தரப்பினர் விண்ணப்பிக்கும்போது இரண்டு தரப்பினரும் நடுவர் சபைக்கு அழைக்கப்பட்டு பிணக்குத்தொடர்பாக இரண்டு தரப்பினரும் இணைக்கப்பாட்டுக்கு வருவதற்கு வகை செய்யப்படுகின்றது.

இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாத போது இணக்கப்பாடு இன்மை" தொடர்பான சான்றிதழ் நடுவர் சபையால் வழங்கப்படுகிறது. இணக்கப்பாடு இல்லை என்ற சான்றிதழைப் பெற்றுக் கொண்ட நிலையில் முறைப்பாட்டாளர் மேல்நடவடிக்கை எடுக்க முடியும்.

நீதி அமைச் சின் கீழ் செயற்படும் நடுவர் சபைகள் ஆணைக் குழுவின் வழிப்படுத்தலில் செயற்படுகின்றன. (ஐ-4,11)

## பௌத்தத்தால்

பில் பௌத்த மதம் தொடர்பில் காணப்படும் முக்கியத்துவம் மற்றும் அதனைப் பாதுகாப்பது தொடர்பான சரத்துக்கள் எவ்வித மாற்றமும் இன்றிப் புதிய அரசமைப்பிலும் உள்ளடக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த யோசனைத் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அரசியல் கட்சிகள் மட்டுமன்றி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்து மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்கள் ஆகியோரும் இதற்கு இணங்கியுள்ளனர்-என்றார்.

ஆனால் பிரதமரின் இந்தக் கருத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக மறுத்துள்ளது.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்,

பிரதமர் கூறுவதுபோன்று பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கக் கூட்டமைப்பு ஒருபோதும் இணங்கவில்லை. புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து நியமிக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவில் இது குறித்துக் கலந்துரையாடப்படவில்லை.

இந்த வழிநடத்தல் குழுவில் சில முக்கியமான விடயங்களைக் கையாள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதில் சமயமும் ஒன்றாக உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இதுவரை 3 விடயங்கள் மட்டுமே இந்தக் குழுவில் பேசப்பட்டது. தேர்தல் சீர்திருத்தம், நிறைவேற்று அதிகாரம், அதிகாரப் பகிர்வு ஆகியன குறித்தே பேசப்பட்டது. மற்றைய விடயங்கள் குறித்து எதுவுமே பேசப்படவில்லை.

ஆகவே இதற்கு அனைத்துக் கட்சிகளும் சம்மதம் தெரிவித்துள்ளன என்று கூறுவது தவறான கூற்று.

## ஜேர்மன் தூதுவர் நேற்றுக் கிளிநொச்சி பயணம்

### ஜேர்மன் தொழிற் பயிற்சி நிறுவனத்தைப் பார்வையிட்டார்

கிளிநொச்சி, ஒக். 11

கிளிநொச்சி ஜேர்மன் தொழிற் பயிற்சி நிறுவனத்துக்கு நேற்றுப் பயணம் செய்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர், ஜேர்மன் நாட்டு முதலீட்டு நிறுவனம் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் செயற்பாடுகள் என்ன? எவ்வாறான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன? அவற்றுக்கான முதலீடுகள் எவ்வாறு உள்ளன? என்பது சம்பந்தமாகக் கலந்துரையாடினார்.

நிறுவனத்தின் கட்டட அமைவிடங்கள் கற்கை நிலையங்கள் என்பவற்றைக் குறித்த குழுவினர் பார்வையிட்டதுடன், மாணவர்களிடமும் பயிற்சி நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகள் மற்றும்



இருப்பிட வசதிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினார். அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் மென்பானமாக இளநீர் வழங்கப்பட்டது. (ஐ-4,35)

## 13ஆவது நாளாக

தொழிலாளர்கள் மேற்கொள்ளும் போராட்டம் 13ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

பெருந்தோட்டத் தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டு வழமைபோல் தொழிலுக்குச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் பொகவந்தலாவ, கொட்டியாகலை கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, என்.சி. மற்றும் செல்வகந்த, ஜேப்பல்டன், கெம்பியன் போன்ற தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலா



ளர்கள் தொழிலுக்குச் செல்லாது தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று இவர்கள் தெரிவித்துள்ளனர். (த்)

North Lanka IIT

Master of Philosophy [M.Phil.]

பட்டதாரி கற்கைநெறியை நிறைவு செய்த சகலருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
முதுதத்துவமானி [M.Phil.]
காலம் : 2 - 3 Years
பாடங்கள்:
பொருளியல் , அரசியல் விஞ்ஞானம் , தமிழ், ஆங்கிலம் , IT , இந்து நாகரிகம் , கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம் , வரலாறு.
ஆகிய பாடங்களில் முதுதத்துவமானி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
*மானிய ஆணைக்குழு அங்கீகாரம்
*உள்ளூர் பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள் வழிகாட்டி
*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
மேலதிக தொடர்புகளுக்கு : Dr.B.Thanabalan
0770681958

Diploma in IT

சகல அரச உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுக்குமான Diploma in IT கற்கைநெறி
காலம் : 9-12 மாதங்கள்
வகுப்புகள் யாவும் வார நாட்களில் மாலையில் நடைபெறும்
*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
*விரிவுரைகள் யாவும் விஜயதசமி அன்று ஆரம்பமாகும்
மேலதிக தொடர்புகளுக்கு:
Mr.S.Mugunthan Reading Ph.D. - 0777880330
Director - 0767504535

D.Ed. , M.Ed. , B.Ed. , Degree in Physical Education & Sports ,
B.Sc. in Comp. Sc. , Top Up in B.Sc. in Comp. Sc. , Top Up in B.Sc. in Civil Engineering
வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

People's Bank Bulilding, Top Floor, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ்.பியால் 8 இலட்சம் வருமானம்

னிந்தியக் கலைஞர்களான எஸ்.பி. பாலசுப்பிரமணியம், கங்கை அமரன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து இசை நிகழ்வு ஒன்றை நடத்தியிருந்தனர். இந்த வருகையின் மூல மாக யாழ்ப்பாணம் ம ாநகர சபைக்கு சுமார் 8 லட்சம் ரூபா வருமா னம் கிடைத்துள்ளது. மாநகர சபைப் பிரதேசத்துக்குள் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வு மூலம் சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மாநகர சபைக் குச் சொந்த மான இடத்தைப் பயன்படுத்திய வகையில் 3 நாள் வாடகையாக நாள் ஒன்றுக்கு 11 ஆயிரம் ரூபா வீதம் 33 ஆயிரம் ரூபாவும், இதற்கான 13 வீத வரிப் பணமும் மாநகரசபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒருநாள் நிகழ்வினால் யாழ்ப் பாணம் மாநகர சபைக்கு சுமார் 8 லட்சம் ரூபா வருமானம் ஈட்டப் பட்டுள்ளது என்றார். (த-101)

இரண்டாம் ஆண்டு ஈரவிழி அஞ்சலிகள்

ஜனார்த்தனன் அச்சுதன்

திதி: விஜயதசமி
(11.10.2016) செவ்வாய்



ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்ததுவோ?
மாண்டாய் என நினைக்க மனது
மறுக்குதையா ஆண்டு பல சென்றாலும்
அருமை மகனே உன் நீண்ட பெரு நினைவு
நெஞ்சைவிட்டகலாதையா

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
முத்தையா
நாகராசா
(பத்தர்)

தோற்றம்
28.04.1937

மறைவு
11.09.2016

கடந்த 11.09.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.10.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
சேருகன் நகைத் தொழிலகம் - சின்னக்கடை (மகன்)
சஞ்சிகா ஜுவலறி - சாவகச்சேரி (மகன்)
நகைத் தொழில் - க.விஜயகுமார் (மருமகன்)
இத்தியடிப்பிள்ளையார் கோயில், சங்கத்தானை.

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
24.01.1959
விண்ணில்
25.10.2012
திருமதி
தவராணி
(தேவி)
தவராசா

அகிலமதை நீர் பிரிந்து ஆண்டுகள் நான்கு ஆனதம்மா
ஆழ் மனதை உம் நினைவு ஆழமாய் வருடுதம்மா...
இனிமையான உங்கள் முகம் இனியெங்கு
காண்போமம்மா...
இதயத்தில் குடி கொண்ட இணையில்லா தெய்வம்
நீயம்மா... உம் சிரித்த முகம் காண எம்
உள்ளமெல்லாம் ஏங்குதம்மா..... உத்தமியே
மீண்டும் நாம் உம் மடிசேர வேண்டுமம்மா...

இல. 115/2, ஆலடி வீதி,
தோணிக்கல் வவுனியா.

என்றும் உம் நினைவோடு வாழும்
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கல்வியைக் கைவிட்டது வடக்கு மாகாண சபை

செயற்றிட்டம் ஒன்றை இதுவரை முன்மொழிய வில்லை. அதிபர், ஆசிரியர்களின் நலன்களில் சங் கங்கள் அதிக கவனத்தைச் செலுத்துகின்றன. மாணவர்களின் கல்வித் தரம் பற்றிய கவனம் இரண் டாம் பட்சமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப் பினர் க.சிவநேசன்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

ஏனைய மாகாணங்களைப் போலல்லாது போரால் சிதைவுற்ற வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக் கான நடவடிக்கைகள் யாவும் பரந்துபட்ட ஆலோ சனைகளைப் பெற்றவையாகவும், மிகவும் வெளிப் படைத் தன்மை கொண்டவையாகவும், பாரபட்சமற்ற இறுக்கமான நடைமுறைகளைக் கொண்டவையாக வும் அமைய வேண்டும்.

அண்மையில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தி னருக்கும் வடமாகாண கல்விச் செயலாளருக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் அரசியல் தலையீடுகள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் இடமாற்றங்களின்போது மேற்கொள்ளப்படுகின்ற அநாவசியமான, அநீதியான அரசியல் தலையீடு களை உடனடியாகவே சபையினதும் முதலமைச்சரி னதும் கவனத்துக்குக் கொண்டுவருவது அதிகாரி களினதும், ஆசிரியர் சங்கங்களினதும் கடமையாகும். கவனத்துக்குக் கொண்டுவரப்படும் விடயங்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது சபையினது கடமை.

வடக்கு மாகாணத்தின் கல்வி வலயங்கள் சிலவற் றில் ஆசிரியர்கள் அளவுக்கதிகமாகவும், அதேநேரத் தில் குறித்த சில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. சில பாடசாலைகளில் சில பாடங்களுக்கு வருடக்கணக்கில் ஆசிரியர்கள் இல்லாத துர்ப்பாக்கிய நிலைமை உள்ளது. நியமனம் கிடைத்தால் போதும் என்ற மனநிலையுடன் பின்தங் கிய பகுதிகளுக்கு வரும் ஆசிரியர் கள் ஐந்து வருட காலத்தில் அல்லது இயலுமாயின் மிகக் குறுகிய காலத்தில் மாற்றல் பெற்று நகர்ப் புறங்களை நோக்கி சென்று விடுவதே இந்த நிலமைக்கு அடிப்படையான காரணமாகும்.

மேலதிகமான ஆசிரியர்களைக் கொண்டுள்ள வலயங்களுக்கு புதிய நியமனங்களை வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர் களுக்குரிய பாடங்கள் இல்லாத நிலையில், பாட சாலைகளில் இணைத் துக் கொள்ளப்பட்ட ஆசிரியர் களை அவர்களுடைய தேவைகள் உள்ள அரு காமையான கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டும்.

சமூக நீதிக்கும் மன சாட்சிக்கும் புறம்பாக மாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களின் நியமனங்கள் பாட சாலைக்கு அவசியமில்லை எனில், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர், அதனை நிராகரிக்க வேண்டும். அதனை வலயப் பணிப்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2019 ஆம் ஆண்டில் வடக்கின் சகல மாவட்டங்களுக் கும் தேவைப் படக்கூடிய ஆசிரிய ஆளணி பற்றிய முழுமையான அறிக்கையைப் பெற்று, அதற்கேற்ற வகையில் கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதிக் கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் தீர்மானிக்கக் கல்வி அமைச் சுக்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

மாற்றலாகி செல்லும் ஆசிரியர்களின் இடங்கள் முறை யாக நிரப்பப்படாதவிடத்து இடமாற்றங்கள் வழங்கப் படக்கூடாது. பின்தங்கிய பகுதி பாடசாலைகளி லும், பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள முக்கிய பாட சாலைகளிலும் விடுதி வசதிகள் போதிய அளவில் உருவாக்கப்பட வேண்டும்.

மாகாண அதிகாரிகளினதும், ஆசிரியர் சங்கங் களினதும் அதீதமான பங்களிப்பானது, மேற்கூறப் பட்ட விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். மாகாண சபைச் சட் டங்களை நடைமுறைப்படுத்துவதில் அதி காரிகள் அதிகமான கவனத்தை செலுத்துகிறார்கள். மாகாண கல்வி அதிகாரிகள், ஆசிரியர் சங்கங்கள் இருதரப் பினரும் இணைந்து இறுக்கமான நடை முறைகளைக் கொண்டு வருவார்களாயின் வட மாகாணத்தினது குறிப்பாக வன்னி மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களினது கல்வித்துறை வீழ்ச்சி அடைந்து செல்வதை இயன்றளவு விரைவாக தடுத்து நிறுத்த முடியும் - என்றுள்ளது. (ற-4)

## இந்தியாவிலிருந்து...

உருவாக்கும் திட்டம் குறித்து பரி சீலிக்கப்பட்டு வருவதாக இந்தியா வின் மின்சக்தி அமைச்சின் செயலர் பி.கே.புஜாரி தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்நாட்டுத் தேவையை ஈடுசெய்ய 500 மெகாவாட்ஸ் மின்சாரத்தை இலங்கை இந்தியாவிடம் கோரியுள் ளது. இரண்டு நாடுகளுக்கும் இடை யிலான மின்சார இணைப்பு வசதி கள் இல்லாமையால் இது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

துணை-கடல் சக்தி இணைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து வது குறித்து இந்திய மின்சக்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

'தற்போது நாம் பங்களாதேஷ், நேபா ளம், மியான் மார், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்கிறோம். கடலுக்கடியிலான மின் இணைப்பு கட்டமைப்பின் மூலம் இலங்கைக்கும் மின்சார விநியோ கத்தை மேற்கொள்வது குறித்து தற் போது ஆலோசிக்கிறோம். இன்ன மும் இதற்கான திட்டங்கள் ஆரம்பிக் கப்படவில்லை. ஆனால், நாம் துணை கடல் இணைப்பு தொடர்பான புதிய தொழில் நுட்பத்தைக் கண்ட றிந்துள்ளோம்.

இலங்கைக்கு மின்சார விநியோகம் செய்வது குறித்து முன்னர் இந்தியா ஆலோசனை நடத்தியது, ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில் லை. அந்தத் திட் டம் சாத்தியமானதாக இருக்கவில்லை என்பதே அதற் குக் காரணம். அப்போது நல்ல தொழில் நுட்பம் இருக்க வில்லை. அது செலவு மிக்கதாகவும் இருந்தது.

இப்போது தொழில்நுட்பம் பெரும ளவில் உயர்ந்துள்ளது. புதுப்பிக்கத் தக்க சக்தியை இறக்குமதி செய்வ தற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து கின்றன. இலங்கைக்காக இதனை நாம் மீளப் பரிசீலிக்கிறோம். கடலுக் கடியில் மின் இணைப்பு கட்ட மைப்பை ஏற்படுத்துவது சாத்தியமா என்று ஆராய்கிறோம். இது நல்ல தொழில் நுட்பம் மாத்திரமன் றிச் செல வும் குறைவானது - என்றார். (த-5)

## அச்சுவேலி தபால் நிலையம் இடமாற்றம்

அச்சுவேலி தபால் நிலை யம் அச்சுவேலி பழைய கொழும்பு ஸ்ரூடியோ ஒழுங்கையில் உள்ள கட்டடத்துக்கு இடம் மாற் றப்பட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலை யம் இதுவரை காலமும் பருத்தித்துறை பிரதான வீதி இலுப்பையடிச் சந் திக்கு அருகில் உள்ள கட்டடத்தில் செயற்பட்டது. கடந்த வாரம் தொடக்கம் பழைய கொழும்பு ஸ்ரூ டியோ ஒழுங்கை லிபேட்டி சினிமாவுக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் உள்ள கட்டடத்துக்கு மாற் றப்பட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலை யத்துக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்குப் பொது மக்க ளின் நிதி உதவியு டன் பத்து வருடத் துக்கு முன்னர் கொள்வனவு செய்து அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக் கப்பட்ட காணி வெறுமனே உள்ளது. தபால் நிலையம் வாட கைக் கட்டடத்தில் இடத்துக்கு இடம் மாறிக்கொண்டி ருக்கின்றது. தற் போது செயற்படும் இடம் நான்காவது இடமாகும் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ற-11)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
மலர்வு 26.11.1920
உதிர்வு 22.10.2015

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி
மலர்வு 18.11.1918
உதிர்வு 01.02.2011





அமரர் முத்தர் பசுபதி
திருமதி பாக்கியம் பசுபதி

அப்பா எனும் சொல்லிற்கு அர்த்தமாய் - அம்மா என்ற சொல்லிற்கு அன்பின் அருவிளக்கமாய்
இல்லத்தின் ... இன்பங்கள் குவிப்பீர்களே
இருவரும் இருந்த நொடிகள் எல்லாம் இன்பமாய்
... எங்கே இப்போ? ஆண்டுகளாய் தேடுகின்றோமே.

ஐங்கரன் வீதி.
சுதுமலை தெற்கு, மானிப்பாய்

குடும்பத்தினர்
0776209669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு நகரில் நேற்றுக் கவனவீர்ப்பு

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக.



மட்டக்களப்பு, ஒக் 11
தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று ஈரோஸ் ஜனநாயக முன்னணி கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்து.
ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் ஜி.சவுந்தரநாயகம் தலைமையில் மட்டக்களப்புநகர மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவளையில் இந்தப் போராட்டம்நடத்தப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கம்பனி முதலாளி மாரே தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்காதே, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை ரூபா 1000 உடன் வழங்கு போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திபிருந்தனர்.(த)

# மருந்துகள் உற்பத்தியில் ரஷ்யா, இந்தியா முதலீடு

## இரண்டு தொழிற்சாலைகளை இலங்கையில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, ஒக் 11
இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவவுள்ளன. 10 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த இரண்டு திட்டங்களிலும், ரஷ்யாமற்றும் இந்தியநிறுவனங்கள் முதலீடு செய்யவுள்ளன.
நாட்டின் தேவையை ஈடுசெய்யும் மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவத் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவும் உடன்பாட்டில் ரஷ்ய மற்றும் இந்திய நிறுவனங்கள் உள்ளூர் அதிகாரிகளுடன் உடன்பாடு செய்துள்ளனர்.
இலங்கையில் மருந்து உற்பத்தித் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள 28 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
அவற்றில் ரஷ்யா, இந்தியா, இஸ்ரேல் நிறுவனங்களும் அடங்கும் என்றும், இந்த நிறுவனங்கள் ஆயுள்வேத மருந்துகளையும் உற்பத்தி செய்து இலங்கையில் தேவையை ஈடு செய்து கொண்டு மிகுதியை ஏற்றுமதி செய்யவிருப்பதாக அரச மருந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் சயூர சமரசுந்தர தெரிவித்துள்ளார். (த)

# சபாநாயகர் தலைமையில் சீனா பயணமாகியது குழு

கொழும்பு, ஒக் 11
சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர், உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொண்டு சீனாவுக்கு நேற்றுமுன்தினம் பயணமாகியுள்ளனர்.
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெகுசன ஊடக மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கயந்த கருணதிலக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோரும் இதில் பயணமாகியுள்ளனர்.
மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவுமான அநுர குமார திஸநாயக்க, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். (த)



# 453ஆவது பொலிஸ் நிலையம் நுவரெலியாவில் திறப்பு

நுவரெலியா, ஒக் 11
நுவரெலியா பட்டிபொல நகரில் 453ஆவது புதிய பொலிஸ் நிலையத்தை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார்.
இந்த வைபவத்தில் மத்திய மாகாணசபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த)

## சரத் வீரவன்ச, சமரவீரவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக் 11
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் சகோதரரான சரத் வீரவன்ச, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர ஆகியோரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு - கோட்டை நீதிவான் மன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த ஆட்சிக் காலத்தின் போது, அரச வாகனங்களை முறை கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில், பொலிஸ் நிதிக்குற்ற மோசடிப் பிரிவுக்கு வாக்குமூலமளிக்க கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி சென்றிருந்த சரத் வீரவன்சவை, பொலிஸ் நிதிக்குற்ற மோசடிப் பிரிவினர் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஆளுநர், முதல்வர் மீது நீதிமன்றில் விசாரணை

## 25 கோடி ரூபா குத்தகையில் முறைகேடு நடந்ததாக வடமத்திய மாகாணத்தில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக் 11
25 கோடி ரூபா பெறுமதியான அரசின் நிர்மாணக் குத்தகையொன்றை சட்ட விரோதமான முறையில் அரசியல் நண்பர்களுக்கு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் வடமத்திய மாகாண ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை, மாகாணப் பிரதம செயலாளர் ஆகியோரை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு வடமத்திய மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஆதித்ய பட்டபெந்திகே உத்தரவிட்டுள்ளார்.
'துஷ்பிரயோகத்துக்கு எதிரான குரல்' எனும் அமைப்பின் ஏற்பாட்டாளரும், மக்கள் விடுதலை முன்னணியின் வடமத்திய மாகாண சபை உறுப்பினருமான வசந்த சமரசிங்க சமர்ப்பித்திருந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
இந்த வழக்கின் பிரதிவாதிகளாக வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திசாநாயக்க, முதலமைச்சர் பேல ஜயரத்ன, மாகாண அமைச்சர்களான புஞ்சிபண்டா ரத்னாயக்க, கே.எச்.நந்தசேன, ரஞ்சித் சமரக்கோன், எச்.பி.சேமசிங்க, பிரதம செயலாளர் கே.ஏ.திலகரத்ன மற்றும் பிரதம அமைச்சின்செயலாளர்அனோமாமானெல் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
மனுதாரரின் சார்பில் மூத்த சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத்தும், பிரதிவாதிகளின் சார்பில் சட்டத்தரணிகளான சப்புமல் பண்டார, பிரேமசிறி ஹெட்டியாராச்சி மற்றும் விஜிதகுமார ஆகியோரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (த)

## ஒரே இலக்கம் கொண்ட 2 அடையாள அட்டைகள்

இரு பெண்களுக்குச் சிக்கல்

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட ஒரே இலக்கங்களைக் கொண்ட இரு அடையாள அட்டைகளினால் இரண்டு பெண்களுக்கு இடையே குழப்பகரமான நிலை ஏற்பட்டுள்ளது.
2006ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி வழங்கப்பட்ட, 877033....V என்ற இலக்கம் கொண்ட அடையாள அட்டையாலேயே இந்தச் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.இவ்விருவரும் தமது அடையாள அட்டைகளை 10 வருடங்களாகப் பயன்படுத்தியுள்ள அதேவேளை, இருவரும் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி பிறந்துள்ளனர்.
குறித்த இலக்கத்துக்குரிய அடையாள அட்டையைக் கொண்ட நொச்சியாகமப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், அரச வங்கியொன்றுக்குச் சென்று வங்கிக் கடன் ஒன்றைப் பெற முயன்றுள்ளார்.
எனினும், குறித்த அடையாள அட்டை இலக்கத்தை மற்றுமொரு பெண்ணும் பயன்படுத்துவதாகவும், அந்த பெண், ஏற்கெனவே வங்கிக்கடன் ஒன்றைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் வங்கியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மற்றைய பெண், ஹல்தொட்டு, பத்தேகமப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (த)

## கஞ்சா விற்ற இணை கைது

கம்பஹாவின் மைய பஸ் நிலையத்தின் கழிவறையிலிருந்துகொண்டு கஞ்சா விற்று வந்த கணவனும்-மனைவியும் கம்பஹா பிராந்திய குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கம்பஹா, பஹலகம பிரதேசவாசிகளான இவர்கள்இருவரும்நீண்டகாலமாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்திருப்பதாகவும், எம்பிலிப்பிட்டிய பிரதேசத்திலிருந்து கொண்டு வரப்படும் கஞ்சாவை சிறு சரைகளாக்கி விற்று வந்ததாகவும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.
இவர்கள் கைதுசெய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்த தலா பத்து கிராம் எடைகொண்ட 16 கஞ்சா சரைகள் மீட்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை கம்பஹா நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவுள்ளதாகவும் கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கல்வித்துறைப் பிரச்சினைகளைத் தீர்க்க அமைச்சர் தீவிர முயற்சி

## தீர்வுகளுக்கான திட்டங்களை வகுக்க அதிகாரிகளுக்குப் பணிப்பு

கொழும்பு, ஒக் 11
கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கல்வியமைச்சின் தற்போதைய பலவீனங்களையும் குறைபாடுகளையும் ஆராய்ந்து ஆக்கபூர்வமான திட்டங்களை ஆராய்ந்து தனக்கு அறிக்கையிடுமாறு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.
பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதி, ஆசிரியர்களின் இடமாற்றம், பல பாடசாலைகளின் பற்றாக்குறையாக இருக்கும் ஆசிரியர்களுக்கான [illegible] மேலதிக ஆசிரியர்களை [illegible] பாடநெறிகளை அறிமுகம் செய்தல் உட்பட்ட சகல செயற்பாடுகளையும் சரியாகத் திட்டமிட்டு தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குமாறு அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.
கல்வித்துறை தொடர்பான பல்வேறு பிரிவு [illegible] ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாண்டியில் இரும்புக்கடை தீயில் எரிந்து நாசம்

*50 லட்சம் பெறுமதியான பொருள்கள் நாசம்*

மட்டக்களப்பு, ஒக் 11
மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக் குப்பட்ட சித்தாண்டி முதன்மை வீதியில் அமைந்துள்ள இரும்புக் கடை ஒன்று நேற்று அதிகாலை தீயில் எரிந்து சாம் பராகியது.
மட்டக்களப்பு நகரிலிருந்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டபோதும் அவர் கள் வருவதற்கு முன்னர் கடை முற்றிலும் எரிந்துவிட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். மின்னொழுக்கே இதற் குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
கடையில் அதிகளவான வர்ண பூச்சுக் கொள்கலன்கள், தண்ணீர் தாங்கி கள், மின்சார இணைப்பு வயர்கள், பிளாஸ்டிப் பொருள்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் உட்படப் பல பொருள்கள் இருந்ததாகக் கூறப் பட்டது.



சுமார் 50 லட்சம் ரூபாவுக்கும் மேல் பெறுமதியான பொருள் கள் எரிந்து நாசமாகியுள் ளதாகக் கடை உரிமையாள ரான சங்கரப்பிள்ளை நிஸாந் தன் தெரிவித்தார்.
சம்பவம் தொடர்பாக ஏறா வூர் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுவருகின்ற னர். (து)

# புதிய தேர்தல்முறை குறித்த மு.காவின் நிலை என்ன?

*தைரியமாகச் சொல்லவேண்டும் என்கிறது முஸ்லிம் உலமா கட்சி*

திருகோணமலை, ஒக் 11
உத்தேசத் தேர்தல் திருத்தச் சட் டம் சிறுபான்மைப் பிரதிநிதித்து வத்தை வெகுவாகக் குறைக்கும் திட்டம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப் போது கூறுவது அவரது மிகவும் தாமதமான அரசியல் ஞானத் தைக்காட்டுவதாக முஸ்லிம் உலமா கட்சி தெரிவித்துள்ளது.
மஹிந்த காலத்தில் தேர்தல் திருத் தம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவாகக்கையை உயர்த் திய முஸ்லிம் காங்கிரஸ், தற்போது மூக்கால் அழுவது மக்களை ஏமாற் றும் நடவடிக்கையாகும் எனவும் அந்தக் கட்சி குறிப்பிட்டது.
அரசியல் யாப்பு திருத்தமோ, தேர்தல் முறை மாற்றமோ இப் போதைக்குத் தேவையில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் தைரியமாக அரசுக்குச் சொல்லவேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது. (து)

# இனவாதத்தை தகர்த்தெறிந்து ஒன்றுபடுவோம்

*அமைச்சர் தயாசிறி அழைப்பு*



கொழும்பு, ஒக் 11
இனவாதத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு, ஒற்றுமை எனும் ஆயுதத்தை கையில் எடுத்துச் செயற்பட அனைவரும் உறுதி பூணவேண்டும் என விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர வலியுறுத்தியுள்ளார்.
ஒரே நாடு, ஒரே தேசம் என்ற அடிப்படை யில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வேலை செய்யக்கூடிய நேரம் வந்துள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அம்பாறை சந்தாங்கேணி ஐக்கிய சதுக்க விளையாட்டு மைதானத்துக் கான அடிக் கல் நடும் வைபவம் பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் எச்.எம்.கரீஸ் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப் பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன், கிழக்குமாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல் வர், உறுப்பினர்கள், மதகுருமார்கள், பொது மக் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
அங்கு உரையாற்றிய அமைச்சர் தயாசிறி தெரிவித்த தாவது:
இந்த நாட்டில் 30 வருடங்களாக நடைபெற்ற கொடூரப் போர் இன்று முடிவுக்கு வந்திருக்கின்றது. அதன் காரணமாக இந்த நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே தேசம் என்பதன் அடிப்படையில் வாழ்ந்து வருகின்றோம்.
9 மாகாணங்களிலும் சகல வசதிகளுடனும்கூடிய பெரிய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று 25 மாவட்டங்களிலும் அவ்வாறான வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
இன்று நாங்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடன் இணைந்து இந்த நாட்டில் வேலை செய்து வருகின் றோம். அன்று நான் வடமத்திய மாகாணத்தில் முதலமைச்சராகப் போட்டியிட்டபோது அங்குள்ள முஸ்லிம் மக்கள் எனது இலக்கமான 30 க்கு அதி களவு வாக்குகளை அளித்திருந்தார்கள்.
இந்த நாட்டில் விளையாட்டுக்குத் தேசிய அணி களைத் தெரிவு செய்கின்றபோது அந்த அணிகளில் மூன்று இனங்களையும் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கெடுக்கவேண்டும். நாங்கள் அனை வரும் இலங்கையர்கள். நாட்டை பிரிப்பவர்கள் அல்ல நாட்டை பிரிப்பவர்களுக்கு எதிராகப் போராடக்கூடிய வர்கள். ஒன்று சேர்ப்பவர்களுடன் சேர்ந்து போராட வேண்டும்–என்றார். (து)

# வைத்தியசாலைகளிலிருந்து தப்பிய கைதிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக் 11
சுகவீனம் காரணமாகச் சிறைச் சாலைகளிலிருந்து வைத்திய சாலைகளுக்கு அனுப்பப்படும் கைதிகளில் தப்பிச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்ப தாகச் சிறைச்சாலைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.
வைத்தியசாலைகளில் சேர்க்கப் படும் கைதிகள் கழிவறைகளுக் குச் செல்லும்போது அவர்களுக் குப் பாதுகாப்புச் சங்கிலிகள் பிணைக்கப்படுவது வழக்கம். எனினும், பல சிறைக்காவலர்கள் இதனை உதாசீனம் செய்து கைதிகளைக் கழிவறைகளுக்கு அனுப்பும்போது சுதந்திரமாக விடு வதாலேயே பெரும் பாலான வர்கள் தப்பிச்செல்வதாகச் சிறைச் சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்திருக்கிறார்.
கடந்த வருடத்தில் மாத்திரம் இவ்வாறான 154 கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர் எனவும், இவ்வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் 73 பேர் தப்பியிருப் பதாகவும் இந்தக் கைதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த சிறைக்காவலர்களின் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக வும் அவர் தெரிவித்தார். (து)

# மாணவர் உட்பட 72 பேர் பஸ் விபத்தினால் காயம்



கொழும்பு, ஒக் 11
தலவாக்கலை – டயகம பிரதான வீதியில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் பாட சாலை மாணவர்கள் உட்பட 72 பேர் காயங்களுக்குள்ளாகியுள் ளனர் என அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.
தலவாக்கலையிலிருந்து டயகம நோக்கிச் சென்ற பஸ் மெராயா ஆகர பகுதியில் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதி விபத் துக்குள்ளானதாகத் தெரிவிக்கப் படுகிறது. பஸ்ஸில் ஏற்பட்ட இயந் திரக் கோளாறு காரணமாகவே விபத்து நேர்ந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.
காயங்களுக்குள்ளாகியவர்கள் அக்கரப்பத்தனை பிரதேச வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

## எழுத்தாளர் பரீதா காலமானார்

மட்டக்களப்பு, ஒக் 11
ஈழத்து முஸ்லிம் பெண் எழுத்தாளரான காத்தான்குடி பரீதா என்றழைக்கப்படும் மீராஸாஹிபு முஹம்மது பரீதா (வயது–59) சில நாள்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் ஞாயிறன்று கால மானார்.
இவர் எழுத்துத் துறையில் மிளிர்ந்த அதேவேளை ஆசிரியராகவும் பின்னர் ஆசிரிய ஆலோசகராகவும் பணி புரிந்தார்.
ஒரு பட்டிக்காட்டுப் பெண் பல் கலைக்கழகம் போகிறாள், அன்புத் தெய்வம், மூன்று முடிச்சு, அவள் என்ன செய்வாள், உனக்குள் [illegible] [illegible] இவரது பிரபலமான சிறுகதைகளாகும். (து)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்

9 ஆம் நாள் பிரமோற்சவ தினம்
(11.10.2016)

இரவு 7.00 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் ஸ்ரீவேங்கடேஸ்வரப்பெருமாள் திருவோணப்புறப்பாடு.

ஈழத்து தலைசிறந்த இசைக்கலைஞர்களின் பஞ்சரத்தின ஆராதனை.

மதியம் அன்னதானம்.

(C 25486)
(14,17,18)
ஆலயதர்மகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் பழைய நிலையை முயற்சியால் அடைய முடியும்

## விக்ரோறியாக் கல்லூரி பரிசளிப்பில் சரவணபவன் எம்.பி. அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 11

கல்விச் செயற்பாடுகளில் மீளவும் முதன்மை நிலைக்கு பாடசாலை வர வேண்டும். பரந்து வாழும் தமிழர்கள் மத்தியில் நல்லதொரு பெயரைத் தக்க வைத்துக் கொண்டுள்ள இந்தப் பாடசாலை, அதனைத் தொடர்ந்தும் பேணுவதற்கு நிலை நிறுத்துவதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். கல்விச் செயற்பாடுகளில் வீச்சாக இருந்த நிலையை மீளவும் அடைவதற்கு, மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சமூகப் பெரியவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் ஆத்மார்த்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது-

கல்வியுடன் தொடர்புடைய அமைச்சர் - இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் உங்கள் பாடசாலையைப் பார்வையிட்டுள்ளார். உங்கள் பாடசாலையின் தேவைகள் என்ன என்பதை நான் அவருக்கு முன்கூட்டியே தெரிவித்துள்ளேன். அந்தத் தேவைகளை விரைந்து பூர்த்திசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவரிடம் வலியுறுத்தியிருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் சகல பாடசாலைகளினதும் அழைப்புக்களை ஏற்று இராஜாங்க அமைச்சர் செல்கின்றார். யாழ்ப்பாணத்திலேயே சுற்றிச் சுழன்றடித்துக் கொண்டிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் ஓர் அமைச்சர் - இராஜாங்க அமைச்சர் உலா வருகின்றார் என்றால் அது இராதாகிருஷ்ணன் தான்.

இந்தப் பாடசாலையின் விருட்சங்களாக பெயர் சொல்லிக் கொள்வதற்கு பலர் இருக்கின்றனர். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம், இந்தப் பாடசாலையின் பெயர் இருக்கின்றது. பொறியியலாளர்கள், மருத்துவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என்று பல்துறை சார்ந்தவர்களையும் தமிழினத்துக்கு உருவாக்கிக் கொடுத்தது இந்தப் பாடசாலை.

சாதனையின் சிகரமாக இருந்த இந்தப் பாடசாலையின் பெறுபேறுகள் தற்போது கடந்த காலப் பெறுபேறுகளை விஞ்சும் அளவுக்கு இல்லை. கல்வித் திணைக்கள அதிகாரிகளும் இதனைச் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தப் பாடசாலையின் மீது கல்விப் புலம் வைத்துள்ள எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் தற்போதைய பெறுபேறுகள் அமையவில்லை என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். மீளவும் கல்வியில் உயர் நிலைக்கு வரவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் முன்னைய ஆண்டு கல்வியில் அடைந்த பெறுபேற்றைத் தகர்க்கின்ற அளவுக்கு அதை மிஞ்சுகின்ற பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பாடசாலையின் பெயர் - வளர்ச்சி தக்க வைத்துக் கொள்ளப்படும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 6 ஏ ஐத் தாண்டிய பெறுபேற்றை 15 மாணவர்கள்தான் பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இது 15 சதவீதம் என்று கல்வித் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் அவதானித்துக் கொள்ள வேண்டும். இதனை மாற்றுவதற்கு முயற்சி களை மனதார முன்னெடுக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என்று ஒவ்வொருவரும் அக்கறை கொள்ள வேண்டும். பாடசாலை ஆசிரியர்களைக் குறை கூற முடியாது. ஏனெனில் 15 மாணவர்கள் அந்தப் பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்றால் ஆசிரியர்களின் கற்பித்தலில் தவறு இருக்கின்றது என்று தெரியவில்லை. 15 மாணவர்களால் அந்தப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தால் ஏனையோரால் அது ஏன் முடியவில்லை?.

இந்த விடயங்களைச் சிந்திக்க வேண்டும். எங்கே தவறுகள் நடந்தது என்று ஆராயப்பட வேண்டும். மீளவும், பழைய நிலைக்குப் பாடசாலையின் பெறுபேறுகள் - கல்வித் தரம் திரும்ப வேண்டும்.

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் வரலாற்றில் முக்கியமானது. தமிழர்களின் அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையை புதிய அத்தியாயத்தை ஏற்படுத்திய இடம். இங்கே பல தேவைகள் இப்போது இருக்கின்றன.

சங்கானைச் சந்தை நிர்மாணத் திட்டம் தயாரித்துக் கொடுக்கப்பட்டது. அதற்கான அனுமதி மிக விரைவில் கிடைக்கும். திட்டம் செயற்படுத்தப்படும். அதே போன்று வீதிப் புனரமைப்பிலும் நான் சிறப்புக் கவனம் செலுத்துகின்றேன்.

எமது இந்தத் தொகுதியின் தேவைகள் தொடர்பில் முழுமையாக அறிக்கை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளேன். இதற்காக இந்தப் பகுதியைப் பிரதிநித்துவப் படுத்தும் சகல தரப்புக்களிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளேன். வட்டுக்கோட்டைத் தொகுதியினுள் அடங்குகின்ற சகல பிரதேசங்களினதும் தேவை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான குழு விரைவில் நியமிக்கப்படும். அதனூடாக இனங்காணப்படுகின்ற தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ற-5,ரி)



## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கிளி. வர்த்தகர்களுக்கு உதவி

தென்மராட்சி, ஒக்.11

கிளிநொச்சி சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகளுக்கு வழங்குவதற்காக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் ஒரு லட்சம் ரூபா வழங்கினர். மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் சென்ற குழு, நிதியை கிளிநொச்சி சேவைச் சந்தைத் தலைவர், செயலாளரிடம் கையளித்தது.

கடந்த மாதம் கிளிநொச்சி பொதுச் சந்தைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 100க்கும் அதிகமான கடைகள் நாசமாகின. இதனால் சுமார் 220 மில்லியன் ரூபா பெறுமதியான இழப் பு ஏற்பட்டது. (ற-9)




மலையக தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. யாழ். நாகவிகாரை முன்றலில் யாழ். மாவட்ட தொழிலாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. (ற-ரி1)



## கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் 17 வயதுடைய இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.11

கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் சந்தேகநகர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கல்லாறு பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்க தலமையிலான குழுவினரே 17 வயதுடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். 2 பெரல் கோடாவும் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, கிளிநொச்சி தருமபுரம் கல்லாறில் 18 போத்தல் கசிப்பை விற்பனைக்கு எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரை எதிர் வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4,ரி3)

## மயானத்தை அகற்றுமாறு வலியுறுத்திப் போராட்டம்



யாழ்ப்பாணம் ஒக் 11

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம மக்களில் ஒரு தொகுதியினர் தமது குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள மயானத்தை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"எமது குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள மயானம் தொடர்பில் நாம் எமது பிரிவுக்குட்பட்ட பிரதேச சபையினர் மற்றும் பிரதேச செயலகத்தினர் ஆகியோரிடம் எடுத்துக் கூறினோம். எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதனால் மாவட்டச் செயலரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

மயானத்தின் அமைவிடம் எமது குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ளதால் பெண்கள், சிறுவர்கள் எனப் பலரும் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுள்ளனர். மாணவர்கள் அந்த வழியிலே பாடசாலைக்கு பயணிக்கின்றனர். அவர்கள் மனதளவில் அதிகம் பாதிப்படைகின்றனர்.

இந்த மயானத்தைக் குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி வேறு ஒரு இடத்தில் அமைக்க வேண்டும் என்று கோருகின்றோம்" - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-4,ரி1)

## கைதடி, நாவற்குழி நூலகங்களுக்கு தேசிய விருதுகள்

தென்மராட்சி, ஓக்.11

கடந்த வருடம் வாசகர்கள், மாணவர்கள், முன்பள்ளிகள் போன்றவற்றுக்கு சிறப்பான சேவைகளை வழங்கியமைக்காக சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கைதடி பொது நூலகம், நாவற்குளி பொது நூலகம் என்பவற்றுக்கு தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

வரணி, மிருசுவில், கச்சாய் ஆகிய பொது நூலகங்கள் சிறப்பான செயற்பாட்டுக்கான சான்றிதழ்களையும் புத்தகப் பொதிகளையும் பெற்றுக் கொண்டன.

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் பொது நூலகங்களிடையே கடந்த வருடம் நடத் தப்பட்ட தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளின் பிரகாரம் இவை வழங்கப்பட்டன. (ற-9)

## பாடசாலைக்குக் காணி அன்பளிப்பு

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மேம்பாட்டுக்கென எட்டுப் பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி பொன்னம்பலத்தின் [illegible] புலம்பெயர் நாட்டிலுள்ள அவரது மனைவி வைத்திய கலாநிதி செல்வராணி பொன்னம்பலம் பாடசாலைக்கு அருகில் உள்ள எட்டுப் பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து பாட சாலை அதிபரிடம் கையளித்தார்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டதையடுத்து அங்கு இயங்கிய ஆரம்பப் பிரிவு, மீசாலை வேம்பிராய் வீதியில் தனி அலகாக 2014ஆம் ஆண்டு முதல் இயங்குகின்றது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரம் 5 புலமைப் பரிசில்

# மன்னாரில் 126 மாணவர்கள் வெட்டுப்புள்ளி தாண்டிச் சித்தி

மன்னார், ஒக். 11
2016ஆம் ஆண்டில் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் தோற்றிய 2 ஆயிரத்து 211 மாணவர்களில் 126 மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டிச் சித்தியடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் இருகல்வி வலயங்களான மன்னார் , மடு ஆகிய கல்வி வலயங்களிலும் தற்போது 140 பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் 122 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் மடு கல்வி வலயத்தில் இயங்கும் 52 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளையுடைய 39 பாடசாலைகளைச் சேர்ந்த 483 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த 88 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட 83 பாடசாலைகளின் மாண வர்கள் பரீட்சைக்குத் தோற்றினர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மொத்தம் 126 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டிய பெறுபேறுகளைப் பெற்றனர். மன்னாரில் இருந்து தோற்றிய மாணவர்களில் 109 பேரும், மடுக் கல்வி வலயத்தில் இருந்து 17 பேரும் அதில் அடங்குவர். இதே வலயங்களில் கடந்த ஆண்டில் மடுவில் 12 மாணவர்களும் மன்னாரில் 102 மாணவர்களும் சித்தியெய்திய நிலையில் இந்த ஆண்டு சித்தி வீதம் அதிகரித்துள்ளது.

மடுக் கல்வி வலயத்தில் 39 பாடசாலை மாண வர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 8 பாடசாலை மாணவர்களும் , மன்னார் கல்வி வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 83 பாட சாலை மாணவர்களில் 30 பாடசாலை மாணவர்களும் சித்தியடைந்தனர். மன்னார் மாவட்டத்தில் 84 பாடசாலைகளைச் சேர்ந்த எந்தவொரு மாணவனும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை.

(ற-10)

### மாந்தை கிழக்கில்

# ஆயிரத்து 160 பேருக்கு மாதாந்த உதவிகள்

முல்லைத்தீவு, ஒக்.11
மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 160 பேர் சமூக சேவைகள் திணைக்களத் தின் உதவிகளைப் பெறுகின்றனர். மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபா உதவிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 216 முதியவர்களும், 108 மாற்று வலுவுள்ளோரும், சிறுநீரக நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 56 பேரும், புற்றுநோய்ப் பாதிப்புக்குள்ளான 8 பேரும், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 3 பேரும், பொது சன மாதந்தக் கொடுப் பனவுகளைப் பெறும் 710 பேரும் உதவித் திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

முதியவர்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவாகத் தலா ஆயிரத்து 900 ரூபாவும், மாற்றுவலு வுள்ளோருக்கு மாதாந்தக் கொடுப்பனவாகத் தலா 3 ஆயிரம் ரூபாவும், சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானோருக்கு மாதாந்தக் கொடுப்பனவாகத் தலா 3 ஆயிரம் ரூபாவும், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படுகின்றது. சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 18 பேருக்குப் போக்குவரத்துச் செலவாக மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

இவற்றுடன் புற்று நோயால் பாதிக் கப்பட்ட 8 பேருக்கும், மாற்றுவலுவுள்ள 18 பேருக்கும் 19 மலசல கூடங்கள் கட்டு வதற்கான நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுவலுவுள்ளவர்களின் வீடுகளில் அவர்களின் போக்கு வரத்துச் சிரமத்தைப் போக்குவதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவரங்கள் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடை பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டன.

(ற-21,ரி7)



# எழுந்து நிற்போம் விழிப்புணர்வு நேற்று வடக்கின் பல இடங்களில்

யாழ்ப்பாணம், ஒக்.11
வடக்கில் வீதி விபத்துக்களில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாகவும், வீதிச் சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் நேற்று எழுந்து நிற்போம் விழிப்புணர்வுப் போராட்டம் பல இடங்களிலும் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலம் கவனவீர்ப்பு இடம்பெற்றது. யாழ். போதானா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்திருந்தது.



யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக நடைபெற்ற விழிப்புணர்வுப் போராட்டத்தில் வைத்தியர்கள், தாதியர்கள், வைத்திய சாலை ஊழியர்கள், தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பாடசாலைகள் முன்பாகவும், யாழ். நகர வர்த்தக நிலையங்கள் சிலவற்றின் முன்பாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், யாழ். மாநகர சபையினர் சபை முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் வீதிவிபத்துக்களால் காயமடைந்து யாழ். போதானா வைத்தியசாலையில் மட்டும் மூவாயிரத்தி நானூறுக்கும் மேற்பட்டவர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 64 பேர் உயிழந்தனர். இறப்பு மட்டுமன்றிக் கடும் காயமடைந்து பலர் அவையவங்களை இழந்துள்ளனர். நடப்பாண்டில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட அதிகரித்து விடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.



இதற்குக் காரணம் பெரிய வாகனங்கள், மதுபோதையில் வாகனம் செலுத்துதல் என்பனவேயாகும். இரவு 10 மணிக்குப் பிறகு வைத்திய சாலையில் வீதி விபத்துக்களால் சேர்க்கப்படுவோரில் அநேகர் மது போதையிலேயே காணப்படுகின்றனர்.

வீதி விபத்துக்கள் தொடர்பாக அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வடபகுதியில் வீதிவிபத்துக்களில் உயிரிழந்த, காயமடைந்தவர்களின் குரலாக யாழ்பாணம் எங்கும் இந்த விழிப் புணர்வு இடம்பெறுகின்றது என்று ஏற்பாட்டாளர் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் குலநாயகம் தெரிவித்தார்.

போராட்ட இறுதியில் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான மனு ஒன்று மருத்துவ சங்கத்தினரால் யாழ். மாவட்டச் செயலரிடம் கையளிக்கப் பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டதாவது:



வட பகுதியில் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன. வடக்கில் வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதிகரித்த வாகனப் பயன்பாடும், போதைப் பொருள் பாவனையும், வீதிச் சட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தா மையும் வீதி விபத்துகளுக்குக் காரணங்களாக அமைந்துள்ளன. ஒரு மணி நேர விழிப்புணர்வு நிகழ்வு மூலம் அரசிடம் சில கோரிக் கைகளை முன்வைக்கின்றோம்.

வீதிச்சட்டங்களை வட பகுதி மக்கள் மத்தியில் குறுகிய காலத்தினுள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

பொதுச்சேவை வாகனங்கள், வீதி விபத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், குறித்த வாகனமும், சாரதியும் சேவையில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

பொதுச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் வீதி சட்டங்களை மீறி வாகனத்தைச் செலுத்தும்போது, போக்குவரத்துப் பொலிஸாரைத் தொடர்புகொள்ள உரிய தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட வேண்டும்.

போதைப் பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்துவோருக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்த 4 அம்சக் கோரிக்கைகளையும் வட பகுதியில் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வலி யுறுத்தலை கவன வீர்ப்பு மூலமாகத் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது.

(ற-4,ரி7,ரி1,ரி4)

# அதிபர் விடுதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து உணவு ஒறுப்பு

## வவுனியா நெளுக்குளம் பாடசாலை பழைய மாணவர்கள் போராட்டம்

வவுனியா நெளுக்குளம் பாடசாலையின் பழைய மாணவர்கள் சுமார் 30 பேர் 5 கோரிக்கைகளை முன்வைத்து பாடசாலைக்கு முன்பாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் அமைக்கப்படும் அதிபர் விடுதி கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும், ஒதுக்கப்பட்ட நிதியைப் முழுமையாகப் பாடசாலைக்குப் பயன்படுத்த வேண்டும், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவு இடம்பெறவேண்டும், பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு இடம்பெறவேண்டும், பாடசாலை நலனுக்காகப் பாடுபடும் ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்கள் மீது அழுத்தம் பிரயோகிப்பதை நிறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கு வந்த பொலிஸார் பாடசாலை சமூகத்துடன்பேசி பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்திருந்தனர்.

பழைய மாணவர்களின் போராட்டத்தை அடுத்து வடமாகாணசபை உறுப்பினர் செ. மயூரன் அவர்களை அழைத்துக் கலந்துரையாடினார். அதிபருடனும் கலந்துரையாடினார். அதன் பின்னர் இரு தரப்பினரையும் கலந்துரையாடலுக்கு வருமாறு கோரினார். நாளை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. போராட்டம் கைவிடப்பட்டது.

(ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறை நூலகங்களுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், ஒக்.11
தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் பொது நூலகங்களுக்கு இடையே கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டிகளில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நான்கு பொது நூலகங்கள் தெரிவு செய்யப் பட்டன. அவற்றுக்கு விருதுகளும், சான்றிதழ்களும், புத்தகப் பொதிகளும் வழங்கப்பட்டன.
கடந்த ஆண்டு தேசிய வாசிப்புச் செயற்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பொது நூலகங்களின் சிறப்புச் செயற்பாட்டுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஏழாம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார் என ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் சு.சுதர்ஜன் தெரிவித்தார். (ந-9)

### துணுக்காய் பிரதேச வீட்டுத் திட்டத்தில்

# நிதி விடுவிக்கப்படாததால் திண்டாடும் பயனாளிகள்

யாழ்ப்பாணம், ஒக்.11
துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பலவற்றின் நிதி இன்னமும் வழங்கப்படவில்லை. திறைசேரி நிதியை விடுவிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.
"காலதாமதத்தால் பாதிக்கப்பட போவது நாம்தான். துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 11 குடும்பங்களுக்கு இன்னமும் ஒரு கட்ட நிதிகூட விடுவிக்கப்படவில்லை"- என்று அவர்கள் தெரிவித்தனர்.
பாதிக்கப்பட்ட பயனாளிகளில் ஒருவரான மங்கைக் குடியிருப்பைச் சேர்ந்த கு.குணசீலன் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பகுதியில் வசிக்கும் எமக்கு பிரதேச செயலகம் ஊடாக வீட்டுத் திட்டம் அனுமதிக்கப்பட்டு திட்டம் வழங்கப்பட்டது. மீள் குடியேற்ற அமைச்சின் 8 லட்சம் ரூபா வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட 11 குடும்பங்களுக்கு ஒரு கட்டக்கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை. பிரதேச செயலாளர் வழங்கிய வாக்குறுதியை நம்பி நாம் கடன்பட்டு பணியை ஆரம்பித்து அத்திபாரமும் அமைத்து விட்டோம். இதற்கு மேல் கடன் வழங்க வர்த்தகர்கள் அஞ்சுகின்றனர். எம்மிடமும் நிதியில்லை. இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்கு இரு மாத காலம் மட்டுமே உள்ளது.
அந்த இரு மாதத்திலும் மழையும் குறுக்கிட்டால் நாம் எவ்வாறு பணியை நிறைவு செய்வது? எமது நிலையைக் கருத்தில் கொண்டு எமது திட்டத்துக்கான கொடுப்பனவை பிரதேச செயலகம் உடன் வழங்க வேண்டும் - என்றார்.
"துணுக்காய் பிரதேசத்துக்கு முதலில் 61 வீடுகள் கிடைத்தன. அதற்கான பட்டியல் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான நிதி சுழற்சி முறையில் விடுவிக்கப்பட்டு பணிகள் திருப்தியாக இடம்பெறுகின்றன.
குறித்த 11 பயனாளிகளுக்கான அனுமதிகள் மாவட்டச் செயலகம் ஊடாக எமக்குக் கடந்த செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதியே கிடைத்தது. உரிய பயனாளிகளுக்கு அது குறித்து அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகளை முன்னெடுக்குமாறும் கொடுப்பனவு விடுவிக்கப்படும் எனவும் வாக்குறுதியளிக்கப்பட்டது. பயனாளிகள் பணியை ஆரம்பித்து விட்டனர். மாவட்டச் செயலகத்தில் இருந்து அதற்கான நிதி எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை. விரைவாக நிதியைக் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று பிரதேச செயலாளர் இ.பிரதீபன் தெரிவித்தார்.
எமது மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் சுமார் 100 வீடுகளுக்கான நிதி கூட இதுவரையில் அமைச்சில் இருந்து கிடைக்கவில்லை" என்று மாவட்டச் செயலர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
"எமது அமைச்சுக்கு அனுமதிக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி நிதியை இதுவரையில் திறைசேரி விடுவிக்கவில்லை. இதனாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது. நிதியினைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். விரைவில் குறித்த நிதியைப் பெற்று வழங்குவோம்" என்று மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரி வித்தார். (ந-4,101)

## நூலகங்களில் முதியோருக்கு தனிப் பிரிவு

சாவகச்சேரி, ஒக்.11
தேசிய வாசிப்பு மாதம் மற்றும் உள்ளூராட்சி மாதம், சர்வதேச முதியோர்தினம் என்பவற்றை முன்னிட்டு முதியோர்களைக் கௌரவிக்கும் வகையில் சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட நூலகங்களில் முதியோர்களுக்கென தனியான பிரிவை ஆரம்பித்தனர்.
முதியோர்களுக்கென தனியான தளபாடங்கள் போடப்பட்டு அவற்றில் புதினப் பத்திரிகைகள் போடப்பட்டுள்ளன. முதியோர்கள் கேட்கும் சஞ்சிகைகளையும் அவர்கள் அமர்ந்துள்ள மேசையில் நூலகப் பணியாளர்களால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சேவை சாவகச்சேரி நகரசபையின் மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொது நூர்லகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நகரசபைச் செய லாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (ந-9)

# சிக்கலான உறுதிகளுக்கு மாற்றீடாக கணினி மயப்படுத்தப்பட்ட உறுதிகள்

### யாழ். காணி உரித்து நிர்ணயத் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.11
பழைய சிக்கலான உறுதிகளுக்கு மாற்றீடாகப் புதிய எளிமையான கணினி மயப்படுத்தப்பட்ட உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது ஜே101 கிராம சேவையாளர் பிரிவில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.
இவ்வாறு யாழ்ப்பாணம் காணி உரித்து நிர்ணயத் திணைக்கள உதவி ஆணையாளர் க.பார்த்தீபன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
நிலசக்தி அல்லது மண்ணின் மகிமை வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தமது காணிகளின் உரித்தாண்மையை உறுதி செய்ய வேண்டும்.
இந்தத் திட்டத்தில் அரச, தனியார் காணிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது ஜே.104 பிரிவில் இந்தத் திட்டம் நிறைவடைந்துள்ளது. ஜே.114, 110 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இந்த வேலைத்திட்டம் நிறைவடைந்து. தற்போது கடற்திரள் வரைபடங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு யாழ். மாநகரசபை உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை முதன்மைப் படுத்தி 6 கிராம சேவையாளர் பிரிவுகள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளன.
காணிக்கு உரித்துடையவர்கள் இந்த நாட்டில் வசிக்காமை இந்த வேலைத்திட்டத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ளது. அந்த காணிக்குரிய அளவீடுகளை செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது. நில அளவீடு நடைபெறும்போது காணி உரித்துடையவர்கள் சரியான எல்லைகளை அடையாளம் காட்ட வேண்டும். பல காணித் துண்டங்கள் ஒன்றாகவே சேர்த்து அளக்கப்படுகின்றன. காணி பிரித்து மீள் அளவீடு மேற்கொள்ளும் போது பணம் கொடுக்க வேண்டி ஏற்படும். காணி உரித்துடையவர்கள் மற்றும் பங்குக் காணி உரியவர்கள் அளவீடு செய்யும் போது காணி உரிமையாளர்கள் நிற்பது அவசியம்.
தற்போது நில அளவீடு செய்யப்படும் காணிகளில் உரித்தாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அறிவித்தல் ஒட்டப்படுகின்றது. அந்த உரித்தாளர்கள் மிக விரைவில் நில அளவையை மேற்கொள்ளவேண்டும்.
பல காணிகளின் உரித்தாளர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பதால் இன்னமும் நில அளவை செய்யப்படாமல் பல காணிகள் உள்ளன. அவர்கள் மிக விரைவில் நேரடியாகவோ அல்லது அற்றோனித் தத்துவக்காரர் மூலமாகவோ தமது காணியின் உரித்தை தகுந்த ஆவணங்கள் மூலம் உறுதி செய்து நில அளவையை மேற்கொண்டு உரித்தாண்மைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர்களின் காணிகள் இந்தத் திட்டத்தில் எந்த விதத்திலேனும் பாதிப்புக்கு உள்ளாகும் என் றும் அரசுக்கு சொந்தமாக்கப்படும் என்றும் பயஉணர்வு கொள்ளத் தேவையில்லை.
காணிப் பிரச்சினைகள் என்று வருபர்களில் சிக்கலான வழக்குகளை உடையவர்கள் இலவச சட்ட உதவி மையத்திடம் ஆலோசனை பெறுவதற்கு நில அளவைத் திணைக்களம் ஊடாக அனுப்பப்படுவர் - என்றார். (ந-ரி)

## நெல் விதைப்பு தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக்.11
தென்மராட்சியில் பெரும் போக நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மழையை எதிர்பார்த்து நெல் விதைப்பு தாமதப்படுத்தப்பட்ட போதும் தற்போதும் வெயிலுடனான காலநிலையே நிலவுகின்றது. அதையடுத்து விவசாயிகள் புழுதி விதைப்பாக நெல் விதைப்பை ஆரம்பித்துள்ளனர். தனங்களப்பு, மறவன்புலவு, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு உள்ளிட்ட பகுதிகளில் நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ந-131)

## வறட்சியால் கமுகு மரங்கள் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் நிலவும் கடும் வறட்சியால் கமுகு மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்தக் கடும் வறட்சியால் ஒருவித பனிப்பூச்சி கமுகு மரங்களைத் தாக்குகின்றன என்று விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்தப் பனிப்பூச்சியை அதற்குரிய மருந்தை விசிறிக் கட்டுப்படுத்த முடியும். கமுகு மரங்கள் உயரம் கூடியதாகையால் அவ்வாறு மருந்தை விசிறி அந்தப் பனிப் பூச்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பருவ மழை பெய்யத் தொடங்கினால் இந்தப் பனிப் பூச்சி மழை நீரில் கழுவி அதன் தாக்கம் குறைந்து விடும். - என்று அவர் குறிப்பிட்டார்.
கடுமையான வறட்சி, வெப்பம் போன்றவற்றால் கமுகு மரங்களின் காய்க்கும் தன்மையும் குறைந்து காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-17)

# கண்டாவளையில் ஒரே கிராமத்துக்கு 250 வீடுகள்

கிளிநொச்சி, ஒக்.11
கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 250 வீடுகள் ஒரே கிராமத்துக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன.
இவ்வாறு கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பரந்தன், சிவபுரத்தில் 340 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவிருந்தன. எமக்கு இந்த ஆண்டு 250 வீடுகளே ஒதுக்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான வீடுகளுக்குத் தேவையுள்ளது. இந்தக் கிராமத்தின் முக்கியத்துவம் கருதி கிடைத்த அனைத்து வீடுகளும் இந்தக் கிராம மக்களுக்குப் பகிரப்பட்டன.
அனைத்து வீடுகளும் ஒரே கிராமத்துக்குப் பகிரப்பட்டதால் மூலப் பொருள், பணியாளர் பற்றாக்குறை ஏற்படாதவாறு அதிக கவனத்துடன் மேற்பார்வைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பயனாளிகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.
வழங்கப்பட்ட வீடுகளில் 30 வீடுகளின் கட்டுமானங்கள் முடிவுறும் நிலையை அடைந்துள்ளன. சுமார் 100 வீடுகள் கூரை அமைப்பதற்குத் தயார் நிலையில் உள்ளன. ஏனைய வீடுகளின் சுவர் அமைப்புப் பணிகள் நிறைவுற்று லிண்டர் அமைப்பு நிலையை எட்டியுள்ளன.
இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து வீடுகளின் கட்டுமானங்களும் நிறைவு பெறும். இதனை ஒரு நிகழ்வாக முன்னெடுக்கலாம் என்று ஆலோசிக்கப்படுகின்றது - என்றார். (ந-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசுத் தலைவராகும் தகுதி கோத்தாவுக்கு இருக்கிறதா?

மக்கள் ஆட்சியில் (ஜனநாயகம்) யார் வேண்டுமானாலும் அரசுத் தலைவர் ஆகலாம். பணக்காரன் முதல் ஏழை வரை, படித்தவர் முதல் பாமரர் வரை எந்தவொரு மனிதனும் அரசுத் தலைவர் ஆகமுடியும். ஆனாலும், மனிதாபிமானம் மற்றும் மனித நாகரிகம் கருதி, குற்றவாளிகள் மக்கள் பிரதிநிதிகளாவதையும் அரசுத் தலைவர் ஆவதையும் சட்டங்களைக் கொண்டு மனித இனம் தடுத்தே வந்திருக்கிறது. மக்கள் ஆட்சி நடைபெறும் அனேகமான நாடுகளிலும் தண்டனை பெற்ற குற்றவாளிகள் தேர்தல்களில் போட்டியிடுவதுகூடத் தடுக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு பின்னணியிலேயே, முன்னாள் பாதுகாப்புச் செயலரும் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய தெரிவித்திருக்கும் கருத்து மிக முக்கியமாக ஆராயப்படவேண்டியது. அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனைத்துத் தகுதிகளும் தனக்கு இருக்கின்றன என்றிருக்கிறார் அவர்.

தனது சகோதரரும் முன்னாள் அரசுத் தலைவருமான மகிந்த அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால், தான் அந்த இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமானவராக இருப்பார் என்ற ரீதியில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை என்ற நாட்டின் ஒரு குடிமகன் என்ற வகையிலும் அதனது பாதுகாப்புத்துறையில் பணியாற்றிய ஒருவர் என்ற வகையிலும் கோத்தபாய கூறுவது சரியானதுதான். அவருக்கு அரசுத்தலைவராவதற்கான அடிப்படைத் தகுதி இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கோத்தபாய ராஜபக்ச என்பவர் அப்படிப்பட்ட ஒரு சாதாரண குடிமகன் மட்டுமா என்றால், இல்லை.

அவர் கடந்த காலங்களில் பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றியவர் என்ற ரீதியில் மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவற்றுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். அதாவது இறுதிப் போரின்போது ஆயிரம் ஆயிரமாகத் தமிழர்கள் வன்னியில் கொன்றொழிக்கப்பட்டபோது, (இந்த எண்ணிக்கை 40 ஆயிரம் என்கிறது ஐ.நா. நியமித்த வல்லுநர் குழு அறிக்கை ஒன்று, ஒரு லட்சத்து 40 ஆயிரம் என்கிறார்கள் மனித உரிமை ஆர்வலர்கள்) நிகழ்ந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க் குற்றங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்.

பன்னாட்டுச் சட்டங்களின்படி போர்க் குற்றங்களைச் செய்தவர்கள் மட்டுமே குற்றவாளிகள் இல்லை. குற்றவாளிகள் அந்தக் குற்றங்களைச் செய்வதற்கு உத்தரவிட்டவர்களும் குற்றவாளிகளே. பொறுப்பில் இருந்தும் தமது கடமையைச் சரிவர நிறைவேற்றிக் குற்றங்களைத் தடுக்கத் தவறியவர்களும் குற்றவாளிகளே. "கட்டளைப் பொறுப்புக்கூறல்" (Command responsibility) என்ற வகைப்படுத்தல் மூலம் போர்க்குற்றமாகக் கருதப்படும் இதன் கீழ் எதிர்காலத்தில் குற்றஞ்சாட்டப்படக்கூடியவர் கோத்தபாய ராஜபக்ச.

நீதியான, நேர்மையான போர்க்குற்ற விசாரணை ஒன்று இலங்கையிலோ வெளிநாட்டிலோ நடைபெற்று குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் மகிந்த ராஜபக்ச மட்டுமல்ல கோத்தபாயவும் போர்க் குற்றவாளி என அறிவிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அப்படி போர்க் குற்றவாளியாகக்கூடிய ஒரு நபர் எந்தவொரு நாட்டினதும் அரசுத் தலைவராவதற்கான ஆகக் குறைந்த தகுதியைக்கூடக் கொண்டவர் அல்லர். அப்படிப்பட்ட ஒருவரிடம் நாட்டை ஒப்படைப்பது நாட்டில் உள்ள அனைவரும் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பானது.

எனவே மகிந்த, கோத்தபாய போன்றவர்களுக்கு இத்தகைய சிந்தனைகள் எழுவதைத் தடுப்பதற்கும் அவர்களைப் போன்றவர்கள் மீண்டும் அரசுத் தலைவர்கள் ஆவதைத் தடுப்பதற்கும் போர்க்குற்ற விசாரணை ஆயம் ஒன்றை இந்த அரசு உடனடியாக அமைப்பதே சிறந்தது. இல்லையேல் மிக மோசமான விளைவுகளையே அது எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

# வடக்கு முதல்வரது ஆடம்பரப் புரட்சி

**ஞாயிறு லங்காதீபவின் ஆசிரிய தலையங்கம்**

வடக்குக் குறித்த பேச்சு மீண்டும் அரசியலரங்கில் அடிபட ஆரம்பித்துள்ளது. அது ஆரோக்கியமான தொன்றல்ல. என்னதான் நடக்கப் போகிறது என்ற அச்சம் நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினத்தவர்களது மனங்களில் தோற்றம் பெற்றுள்ளது. அது நீட்சியான இயற்கையே. நெருப்புக் கொள்ளியால் காயப்பட்டவன், சந்திர ஒளிக்கும் அஞ்சுவான் என்றதொரு முதுமொழி இந்தவேளையில் நினைவுக்கு வருகிறது.

மூன்று தசாப்தகாலமாக நீண்ட கொடூரப் போரால், இந்த நாட்டின் சகல பொதுமக்களும், இனம், மதம், குலம், கோத்திரம், ஆண் பெண் என்ற பேதமோ வயதானவர், இளையோர் என்ற பேதமோ இன்றி அசாதாரண ரீதியில் துன்பத்தை அனுபவித்ததை மறக்கும் அளவுக்கு காலம் பெரிய அளவில் கடந்து விடவில்லை. தந்தை, தாய் எனப் பெற்றோர் இருவருமாக பயணமொன்றை மேற்கொள்ள வீட்டிலிருந்து ஒன்றாகப் புறப்பட்டுச் செல்வதைத் தவிர்த்ததொரு காலகட்டம் நிலவியதுண்டு. இருவரும் ஒரேவேளையில் உயிரிழக்க நேரிட்டால் பிள்ளைகளை எவர்தான் காப்பாற்றி வளர்ப்பது என்ற சந்தேகம் நிலவியமையே அதற்கான காரணம். சாவு என்பது அந்தக் காலகட்டத்தில் அந்த அளவுக்குச் சாதாரணமான ஒன்றாக அமைந்திருந்தது. எந்த வேளையில் உயிரிழக்க நேரிடும் என்பதைஎவராலும் அனுமானிக்க இயலாத பொல்லாத காலகட்டம் அது. போர் வடக்கு -கிழக்குப் பகுதிகளில் கடைசிப் பாதுகாப்பு காவலரண்களை அண்மித்த பகுதிகளில் என்றல்லாது, நாட்டின் ஒட்டு மொத்தப் பகுதிகளிலும் இடம்பெற்றே வந்தது. மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் பலர் உயிரிழக்க நேர்ந்தது. நிட்டப்புவையில் பஸ்ஸொன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்துப் பெரும் நாசத்தை ஏற்படுத்தியது. நாட்டின் உள்ளகப் பகுதிகளிலும்கூட இத்தகைய குண்டு வெடிப்புச் சம்பவங்களும் தாக்குதல்களும் அடிக்கடி இடம்பெற்ற பயங்கரமான காலகட்டமது.

கடந்து போன காலத்தை நினைவுபடுத்தி அதனூடாக மகிழ்வதற்காக நாம் இதனை மேற்கொள்ளவில்லை பழையவற்றை ஞாபகப் படுத்துவதுபுதைகுழியைத்தோண்டுவதையொத்தது என மேற்குலக அரசியல் விமர்சகரொருவர் கூறியுள்ளமையை நாம் அறிவோம். எமது நாட்டின் சில பிரமுகர்கள் இந்த கடந்த கால நினைவுகளை மறந்து போயுள்ளனர் எனத் தோன்றுகிறது. இதனாலேயே இருள் படிந்த அந்த கடந்த காலச் சம்பவங்களை நினைவூட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

எமது இந்தக் குறிப்புக்கான தீவனத்தை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் ஆரம்பித்துள்ள அரசியல் செயற்பாடுகள் வழங்கி வைக்கின்றன. அவை மேற்குறித்த கடந்த கால நிகழ்வுகளை அசைபோட வைக்கின்றன. அவரது தலைமையில் உருவான தமிழ் மக்கள் பேரவை மூலம் அண்மையில் எழுக தமிழ் என்ற தலைப்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணல், வடக்கையும் கிழக்கையும் இணைத்து சமஷ்டி ஆட்சி முறையொன்றை நிறுவுதல் மற்றும் நாட்டின் வட பகுதியில் தமிழர்களது கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் பௌத்த விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகள் நிறுவுவதை நிறுத்தச் செய்தல் என்பவை குறித்த அந்த ஆர்ப்பாட்டத்தின் முக்கிய மூன்று கோரிக்கைகளாகும். இவற்றுக்கு மேலதிகமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், காணாமல்போனோர் குறித்து அவர்களைக் கண்டுபிடித்தல், தமிழ் மக்களுக்குச் சொந்தமான, அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை விடுவித்தல் என்பவை அந்த ஆர்ப்பாட்டக்காரர்களது கோரிக்கைகளாக அமைந்திருந்தன.

> போர் என்றாலே இழப்புத்தான் என்பதை மக்கள் அனுபவ மூலமாக உணர்ந்தனர். அவ்வாறானால் பிரபாகரனால் செய்ய இயலாததை விக்னேஸ்வரன் வேறொரு வழியில் நிறைவேற்ற முயல்கிறாரா?

சில தசாப்த காலங்களுக்குப் பின் நோக்கிப் பார்த்தோமானால், பிரபாகரனும் அவரது குழுவினரும் வடக்கில் தமது விடுதலைப் பேராட்டத்தை இதே விதத்தில் தான் ஆரம்பித்ததை உணர்ந்து கொள்ள இயலும். கடையடைப்பு, கறுப்புக் கொடி பறக்கவிடல், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், முழு அடைப்பு போன்ற விதங்களில் ஆரம்பிக்கப்பட்ட அந்தச் செயற்பாடுகள், குறுகியதொரு கால இடைவெளிக்குள் குருதி ஆறு ஓடும் வகையிலான தாக்குதல்கள், தீவைப்புக்கள் குண்டுத்தாக்குதல்கள் என தீவிரநிலை கண்டன. உண்மையாகக் கூறுவதானால் பிரபாகரனது நடவடிக்கைகளால் பெரிய அளவில் துயரடைந்தவர்கள் தமிழ் மக்களே எனக் கூறுவது தவறல்ல. கடைசியில் அவர்களால் எதனை வெற்றியீட்ட முடிந்தது? இழப்புக்களை மட்டுமே ஈட்டமுடிந்தது. ஏனைய வெற்றிகள் யாவும் பேச்சுக்கள் மூலமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டவையே. போர் என்றாலே இழப்புத்தான் என்பதை மக்கள் அனுபவ மூலமாக உணர்ந்தனர். அவ்வாறானால் பிரபாகரனால் செய்ய இயலாததை விக்னேஸ்வரன் வேறொரு வழியில் நிறைவேற்ற முயல்கிறாரா? ஆனால் ஒன்றை மட்டும் சொல்லியாக வேண்டும். பிரபாகரனையும் விக்னேஸ்வரனையும் ஒப்பிடுதல் நியாயமாகாது. வடக்கின் முதலமைச்சர், முன்னாள் நீதியரசரா் படித்தவர், அனுபவம் மிக்கவர், புத்திஜீவி என்பது எமது கணிப்பு.

எழுக தமிழ் என்னும்போது, தமிழ் மக்களுக்குத் தீமை விளைவித்த அரசு தற்போது அதிகாரத்தில் இல்லை என்பதை நாம் நினைவில் இருத்தவேண்டும். இன்றைய ஆட்சியாளர்கள் பேசுவதும்செயற்படுவதும்நாட்டு மக்கள் மத்தியில் நல்லிணக் கத்தை உருவாக்குவதற்குத்தான். உண்மையில் கூறுவதானால் சிங்கள மக்களது சந்தேகங்களுக்கு மத்தியிலே இன்றைய ஆட்சியாளர்கள் அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களவர்கள் அணிதிரள வேண்டுமென இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்?

நடந்து முடிந்த போரால் விக்னேஸ்வரன் எந்த வகையிலும் பாதிப்புறவில்லை. அவர் தென்னிலங்கையில் ஆடம்பர வாழ்வு வாழ்ந்தார். அதேபோன்று அவரது பயனற்ற முயற்சியாலும் தமிழ் மக்களுக்கு எவ்வித நற்பயனும் விளையப்போவதில்லை. மேலும் பொறுப்புடன் செயற்படாது விட்டால், தமிழ் புலம் பெயர் தரப்புக்களை மேலும் வளரச் செய்யும் பாவத்துக்கு நாம் அனைவரும் பொறுப்பாளிகளாக நேரிடும் என்பதை சிங்கள அரசியல் தலைவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

*தமிழில்: வீ.எஸ்.ரீ.*

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா- பாகிஸ்தான் முரண்பாடுகளால் கலங்கி நிற்கும் தெற்காசியா

சேரலாதன்





இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போர் ஒன்று மூளுமானால், அது தெற்காசியப் பிராந்திய அமைதிக்குப் பெரும் சவாலாக அமைந்துவிடும். இந்தியாவில் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். பாகிஸ்தான் முழுக்க முழுக்க முஸ்லிம் மக்களைக் கொண்ட நாடு. மத ரீதியாகப் பிளவுபட்டுள்ள இந்த இரண்டு நாடுகளும் அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பரம வைரிகளாகவே நடந்து கொள்கின்றன. காஷ்மீர் பிரச்சினையை இதற்கொரு காரணமாகக் கூறினாலும், அடிப்படையில் வேறு காரணங்களும் இல்லாமலில்லை.

1971 ஆம் ஆண்டு இந்தியாவின் அப்போதைய பிரதமரான இந்திராகாந்தி எடுத்த அதிரடி நடவடிக்கை காரணமாக பாகிஸ்தான் பிளவுபட்டது. பங்களாதேஷ் என்ற புதிய நாடு உருவானது. இது பாகிஸ்தானால் எளிதில் மறந்து விடக்கூடிய ஒரு காரியம் அல்ல. தனது நாட்டிலிருந்து பெரும் பகுதி நிலம் பிரிக்கப்பட்டமையானது, பாகிஸ்தானுக்கு என்றுமே மறக்க முடியாததொரு துயரச் சம்பவமாக அமைந்து விட்டது. மேலும், இந்தியாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் அடிக்கடி மோதிக் கொள்வதும், முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுவதும் பாகிஸ்தானுக்கு உவப்பாக இருந்ததில்லை. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போன்று காஷ்மீர் பிரச்சினை உருவாகி இரண்டு நாடுகளின் நிம்மதியையும் குலைத்து விட்டது. இந்திய இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களைத் துன்புறுத்துவதாக அடிக்கடி செய்திகள் வருவதுண்டு. ஆனால், இந்திய மத்திய அரசு இது தொடர்பாக அலட்டிக் கொள்வதில்லை. இராணுவத்தினரின் செயல்களை நியாயப்படுத்துவதிலேயே அது ஈடுபட்டு வருகின்றது. இதுவும் பாகிஸ்தானைச் சீற்றமுறச் செய்து விட்டது.

### இராணுவ முகாம் மீது தாக்குதல்

அண்மையில் காஷ்மீரின் மலைப் பகுதியில் உள்ள ஊரி என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்திய இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் இந்திய மக்களிடையே பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது. பாகிஸ்தான் மீது உடனடியாகப் போர் தொடுக்க வேண்டுமென்ற அழுத்தங்களும் இந்திய அரசின் மீது மேற்கொள்ளப்பட்டன. இதனால் பிரதமர் மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, பாகிஸ்தானுக்கு எதிராக எதையாவது செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. இதையடுத்து, பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இந்திய விமானப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து திடீர்த் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதில் சுமார் 80 தீவிரவாதிகளும், பாகிஸ்தான் இராணுவத்தினர் சிலரும் உயிரிழந்ததாகவும், பலர் காயங்களுக்கு உள்ளானதாகவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து பாகிஸ்தானும் உடனடியாகப் பதிலடி வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதுவரை அப்படியொன்றும் இடம்பெறவில்லை. ஆனால், இந்தியாவுக்குப் பதிலடி வழங்க வேண்டுமென்ற நெருக்கடி பாகிஸ்தானிலும் தோன்றியுள்ளது. இதை ஆமோதிப்பதைப் போன்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்தியா–பாகிஸ்தான் மீது போர் தொடுக்குமாயின் அணுகுண்டுகளை வீசி அந்த நாட்டை அழித்து விடுவோமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இந்தியாவிடமும் அணுஆயுதங்கள் உள்ளதை அவர் மறந்துவிட்டார் போலும்.

1945 ஆம் ஆண்டு முதலாவதும் இறுதியுமான அணுகுண்டுத் தாக்குதல் ஜப்பான் மீது அமெரிக்காவால் நடத்தப்பட்டது. இதில் இலட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் அணுக்கதிர்களின் பாதிப்புக்கு உள்ளாகினர். இதன் தாக்கம் இன்று கூட ஜப்பானில் தொடர்கின்றது. தற்போதுள்ள நிலையில், அணுவாயுதப்போர் ஒன்று மூளுமானால், அந்தப் பாதிப்புக்களை எண்ணிக் கூடப்பார்க்க முடியாதுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகள் அங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தைக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறு நடந்துவிட்டால் அது முழு உலகின் அழிவுக்கே வழி கோலிவிடும்.

இதேவேளை- இந்தியாவும், பாகிஸ்தானும் போரில் ஈடுபடும் போது எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சீனா, பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்படும். ஏற்கனவே இந்தியாவும், சீனாவும் தமது எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாத நிலையில் முரண்பட்டு நிற்கின்றன. அத்துடன் இந்தியாவின் நிலப் பகுதியில் கணிசமான பரப்பளவை சீனா தன்வசம் வைத்துக் கொண்டுள்ளது. ஆகவே, இந்தியா பாகிஸ்தானை மட்டுமல்ல, சீனாவையும் சமாளிக்க வேண்டியதொரு அவல நிலைக்குள் தள்ளப்பட்டுவிடும். போர் ஆரம்பிக்குமாயின் இலங்கை கூட மதில் மேல் பூனை போன்றதொரு நிலையிலேயே இருக்க முடியும். ஏனென்றால், அதனால் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளமுடியாது. அதேபோன்று பாகிஸ்தானையும் புறக்கணித்து விட முடியாது. இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றபோது இந்தியாவும்– பாகிஸ்தானும் செய்த உதவிகளை இலங்கையால் எளிதில் மறந்துவிட முடியாது.

### சங்கடங்களுக்கு உள்ளாகும் சார்க் நாடுகள்

சார்க் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் எட்டு நாடுகளில் இந்தியாவும், பாகிஸ்தானும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஏனைய நாடுகளான பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான், இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகியவை தமது ஆதரவை எவருக்குத் தெரிவிப்பது என்பதில் சங்கடங்களையே எதிர்கொள்ளப் போகின்றன. ஆகவே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் ஒன்று ஏற்படுமாயின், அது தெற்காசியாவில் பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தியே தீரும்.

## புத்தூர்-கந்தரோடை வீதி புனரமைக்கப்படமாட்டாதா?

புத்தூரிலிருந்து சுன்னாகம் ஊடாக கந்தரோடை செல்லும் வீதி பொதுமக்களின் பாவனைக்கு மிகவும் இன்றியமையாததொரு வீதியாகும்.

நிலாவரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள். சுன்னாகம் சந்தைக்குப் போக்குவரவு செய்யும் விவசாயிகள், வர்த்தகர்கள், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குப் போக்குவரவு செய்யும் மாணவர்கள், சுன்னாகம் தொடருந்து நிலையத்துக்குச் செல்லும் பிரயாணிகள், மின்சார சபைக்குச் செல்லும் பொதுமக்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலநூறு பேர் அன்றாடம் பாவிக்கும் மிகவும் முக்கியமான பாவனைக்குரிய வீதியாகும் இது. எல்லோருமே இந்த வீதி பாவனைக்கு ஏற்றவிதத்தில் இல்லாததால் சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

வீதி பார்ப்பதற்குத் தார் மூடி அழகாக இருக்கின்றது. ஆனால் பிரயாணம் செய்யமுடியாத நிலையில் குண்டும் குழியுமாகவுள்ளது. இந்த வீதியால் செல்லும் முச்சக்கரவண்டிகள் (ஆட்டோ) சில்லுகள் கழன்று விடுமோ? எனவும் சைக்கிள் சில்லுகள் முறிந்து விடுமோ, மோட்டார் கார்கள் மோட்டார்கள் வில்லுத் தகடு உடைந்து விடுமோ சில்லுக் கழன்று விடுமோ என ஏக்கத்துடனேயே பிரயாணம் செய்ய வேண்டியநிலையில் உள்ளன.

குறிப்பாக மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து பிரயாணம் செய்தவர்கள் நிலத்தில் வீழ்ந்து காயப்பட்டதாகவும் அறியக்கிடக்கின்றது.

இந்த வீதியைப் பராமரிக்கும் அதிகாரிகளோ அல்லது ஏனைய அரச அதிகாரிகள் எவருமோ ஒருதடவையாவது இந்த வீதியால் பிரயாணம் செய்யவில்லைப் போலும். இதுவிடயம் பல தடவைகள் பத்திரிகையில் வாசகர் திருமுகப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது திரு முகங்களை இந்த வீதியின் பக்கம் திரும்பாதது ஏனோ? தயவுசெய்து இனியாவது விடிவு கிடைக்குமோ? என வழிப் போக்கர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சண்முகம். சுன்னாகம் .

## இசைமேதைகளே மனச்சாட்சிக்கு மதிப்பளியுங்கள்

தள்ளாடும் வயதுகளில் இங்கு வந்து இசைநிகழ்வுகளை நடத்தும் அயல் நாட்டு உடன் பிறப்புக்களோ! உங்களுக்கு ஒரு பணிவான விண்ணப்பம். ஆயிரமாயிரம் பாடல்களை இசையமைத்துப் பாடி விருதுகள் பல பெற்ற உலகப் புகழ்பெற்ற நீங்கள் கடந்த காலங்களில் எங்கள் மக்கள் அனுபவித்த சோக வரலாறுகள் குறித்து ஒரு பாடலையாவது பாடியுள்ளீர்களா? இராகங்கள் பதினாறு உருவான வரலாறுகளை உலகுக்கு எடுத்தியம்பிய நீங்கள் அந்தப் பதினாறில் முகாரியிலாவது எங்களது குருதி வரலாற்றை பதிவு செய்திருக்கிறீர்களா?

உங்கள் இயலுமையின் சான்றுகளையெல்லாம் உங்கள் நாட்டிலேயே கறந்து கொடுத்துவிட்டு, இன்று தள்ளாடும் வயதில் குரல் நடுங்கும் வயதில் வெறும் சக்கையை மட்டும் யாழ்ப்பாண மக்களுக்கு திணிக்க வருகின்றீர்களே! நொந்து நொடிந்துபோயுள்ள எங்கள் மக்களிடம் பணத்தை ஆயிரமாயிரமாக வசூலிப்பதற்காகவா?

இனியாவது உங்கள் பாடல்களில் எங்கள் சோக வரலாறுகளையும் உள்ளடக்குங்கள். எங்கள் மக்களிடமிருந்து அமோக வரவேற்புக் கிடைக்கும். வெறும் சக்கைபோடு, போடுவதற்காக மட்டும் எங்கள் யாழ். மண்ணுக்கு வந்து எங்கள் மக்களின் பொருளாதாரத்தை உறிஞ்சாதீர்கள். உங்கள் மகத்தான இசை நிகழ்வுகள் புண்பட்ட எங்கள் மக்களின் மனங்களை பண்படுத்தவேண்டும். அப்போது மட்டும்தான் உங்களை எங்கள் மக்களால் உண்மையான இசைமேதைகளாக ஏற்றுக்கொள்ள முடியும்.

விஸ்வாஸ்.

வாசகர் திருமுகப் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3,600 பேர் கொலை, 732,000 பேர் சரண் றொட்றிக்கோ டுடேர்தேயின் 100 நாள்கள்

மணிலா, ஒக். 11

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே பதவியேற்ற 100 நாள்களில் போதைப்பொருள் கடத்தற்காரர்களுக்கு எதிராக அவர் முன்னெடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன. இதன்படி 3 ஆயிரத்து 600 போதைப்பொருள் கடத்தற்காரர்கள் கொல்லப்பட்டனர். 22 ஆயிரத்து 500 பேர் கைது செய்யப்பட்டனர். 7 லட்சத்து 32 ஆயிரம் பேர் சரணடைந்தனர் எனத் தகவல்கள் வெளியாகின.

போதைப் பொருள் கடத்தற்காரர்களினதும், சூத்திரதாரிகளினதும் சாம்ராச்சியமாக பிலிப்பைன்ஸ் விளங்கியது. அந்த நாட்டின் எதிர்காலம் போதையால் கேள்விக்குறியானது. இந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலின் போட்டியாளர்களில் ஒருவரான டுடேர்தே, போதைப் பொருள் பாவனை பிலிப்பைன்ஸை விட்டு முற்றாக இல்லாமற் செய்யப்படும் என்று வாக்குறுதி வழங்கி தேல்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியா னார். அவரது திட்டம் வெறும் பேச்சளவில் நின்றுவிடவில்லை. பதவியேற்ற ஒரு மணிநேரத்திலேயே, "போதைப்பொருள் கடத்தற்காரர்கள், சூத்திரதாரிகள், பயன்படுத்துவோர் என அத்தனை பேரையும் சுட்டுத்தள்ளுங்கள்" என்று கட்டளை பிறப்பித்தார். அன்றிலிருந்து அவரின் பதவிக் காலத்தின் முதல் நூறு நாள்கள் வரை, போதைப்பொருளுக்கு எதிராக டுடேர்தே முன்னெடுத்த திட்டங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.



இதன்படி 3 ஆயிரத்து 600 கடத்தற்காரர்கள் கொல்லப்பட்டனர். 22 ஆயிரத்து 500 போதைப் பொருள் விற்பனையாளர்கள் கைதுசெய்யப்பட்டனர். போதைப்பொருள் கடத்தற்காரர்கள், சூத்திரதாரிகள், பாவனையாளர்கள் என மொத்தம் 7 லட்சத்து 32 ஆயிரம் பேர் சரணடைந்தனர். 23 ஆயிரத்து 500 ரோந்து நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. போதைப் பொருள்கள் பதுக்கும் இடங்கள் என சந்தேகிக்கப்படும் 1.6 மில்லியன் கட்டடங்கள் சோதனையிடப் பட்டன.

டுடேர்தே பதவி ஏற்று 100 தினங்களில் இடம்பெற்ற இந்த நடவடிக்கைகள் அதிர்ச்சிக்குரியன என பன்னாட்டு மன்னிப்புச் சபை தெரிவித்தது. இந்த நிலையில் மேலும் 6 மாதங்களுக்கு இந்த நடவடிக்கை நீடிக்கும் என பிலிப்பைன்ஸ் அறிவித்துள்ளமை பன்னாட்டு அரங்கில் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. (ம-ரி4)



## ட்ரம்ப் தேர்தலில் வெற்றிபெற்றால் சிறையில் தள்ளப்படுவார் ஹிலாரி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெற்றால் ஹிலாரி கிளிங்டன் சிறையில் தள்ளப்படுவார் என டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக அறிவித்தார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் முழக்கங்கள் சூடுபிடித்துள்ளன. இந்த இருவருக்கும் இடையிலான இரண்டாவது நேரடி விவாதம் வோஷிங்டனில் நேற்று நடைபெற்றது. குறித்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

பெண்களைப் பற்றி தரக்குறைவாக விமர்சித்த டொனால்ட் ட்ரம்ப்பை ஹிலாரி கடுமையாகக் குற்றம்சாட்டினார். அவர் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருக்கையில் ட்ரம்ப், பல தடவைகள் குறுக்கிட்டார். ட்ரம்பின் இடையூறுகளையும் விமர்சித்த ஹிலாரி, இவ்வளவு உணர்ச்சிவசப்படும் நபரை நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யத்தான் வேண்டுமா என மக்களிடம் கேள்வி எழுப்பினார். கிலாரியின் கேள்விக்குப் பதிலளித்த ட்ரம்ப், "அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டால் நீங்கள் நிச்சயம் சிறைக்குச் செல்வீர்கள்" எனப் பதில் வழங்கினார். ட்ரம்ப் மீதான பாலியல் சர்ச்சைகள் தொடர்பாக ஹிலாரியும், ஹிலாரி கிளிங்டன் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் மோசடிகள் தொடர்பாக ட்ரம்பும் கடுமையாக விவாதித்தனர். (ம-ரி4)

## வாக்களித்தார் பராக் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், அந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதியான பராக் ஒபாமா முன்கூட்டியே தனது வாக்கைப் பதிவுசெய்தார்.

அமெரிக்காவின் சில மாகாணங்களில், தேர்தல் நடைபெறும் நாளில் மட்டுமல்லாமல், முன்கூட்டியே வாக்காளர்கள் தமது வாக்கைப் பதிவுசெய்ய சில நடைமுறைகள் உள்ளன. 14 மாகாணங்களில் முன்கூட்டியே நேரில் சென்று வாக்களிக்கும் வசதியும், 26 மாகாணங்களில் முன்கூட்டியே அஞ்சல் மூலம் வாக்களிக்கும் ஏற்பாடுகளும் உள்ளன.

ஒபாமா தனது கட்சியான, ஜனநாயகக் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக தனது சொந்த மாநிலமான சிக்காக்கோவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்தார். ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு மற்றொரு நிகழ்ச்சிக்குச் செல்லும் வழியில் திடீரெனத் தேர்தல் வாக்குப் பதிவு மையத்துக்கு சென்ற அவர், தான் முன்கூட்டியே வாக்களிக்கப் போகிறார் எனத் தெரிவித்து தனது வாக்கைப் பதிவு செய்தார். "எவருக்கு வாக்களித்தீர்கள்" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு சிரிப்பையே பதிலாக வழங்கினாராம். தனது கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனுக்கு வாக்களித்திருப்பார் ஒபாமா என்பது பொதுவான கணிப்பாக உள்ளது. (ம-ரி4)

## மத்தியூ சூறாவளியின் தா… மிகச் சிறப்பாகக் கையாண்…



வொஷிங்டன், ஒக். 11

ஹைட்டி, கியூபா போன்ற நாடுகளைத் தாக்கிய மத்தியூ சூறாவளியை மிகச் சிறப்பாகக் கையாண்டது அமெரிக்கா. இதனால் ஹைட்டியில் ஏற்பட்டதைவிட மிகமிகக் குறைவான உரியிழப்புக்களே அமெரிக்காவில் ஏற்பட்டன.

கரீபியன் தீவுகளுக்குச் சொந்தமான கடற்பரப்பில் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் உருவான மத்தியூ சூறாவளி, படிப்படியாகப் பலம்பெற்று, ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் ஹைட்டியையும், ஒக்ரோபர் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் கியூபாவின் சில பகுதிகளையும் தாக்கியது. ஹைட்டியில் 1000 பேர் இறந்தனர். கிட்டத்தட்ட 4 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். கியூபாவின் சில பகுதிகளே தாக்கத்துக்கு உட்பட்டன.

இதனையடுத்து மத்தியூ சூறாவளியைக் கடுமையாகக் கண்காணித்த அமெரிக்க ஆய்வு மையம், குறித்த சூறாவளி புளோரிடா, ஜோர்ஜியா, வட கரோலினா பகுதிகளைத் தாக்கும் என்று உறுதிபட எச்சரிக்கை விடுத்தது. இதையடுத்து முன்னேற்பாடு

களை துரித கதி…
அரசு. மூன்று பகு…
லட்சம் மக்கள் வெ…
தங்க வைக்கப்ப…
உணவுகள் வழங்…
மின்சாரம் துண்டி…
செய்யப்பட்டன. அ…
னார் ஒபாமா. இர…
புப்படையினர் மு…
பணிக்கப்பட்டனர்.…
இரவு புளோரிடா, …
களை ஹைட்டியை…
யூ தாண்டிச் சென்…
லியன் பொருளா…
சூறாவளி இன்னும்…
மணிக்கு 75 கி…
துள்ளது.

ஹைட்டியைப் வி…
வாய்ப்பு இருந்த…
பாட்டால் அது …
ஊடகங்கள் செய்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழிவடைகிறது அதிசயம்

பீஜிங், ஒக். 11
உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரின் ஒருதொகுதி கடந்த வாரத்தின் இறுதிப்பகுதியில் உடைந்து விழுந்தது.
சாங்சி மாகாணத்தில் உள்ள நுளைவாயில் பகுதியிலேயே குறித்த சேதம் இடம்பெற்றது. சீனாவில் ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக இந்தச் சேதம் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.
சீனப்பெருஞ்சுவரின் பல கிலோ மீற்றர் பகுதிகள் படிப்படியாகச் சிதைவடைந்து வருவதனால் அவற்றைப் புனரமைக்க, சீன அரசு நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (ம-ரி4)

# செல்லப் பிராணியாகக் கரடி



மொஸ்கோ, ஒக். 11
ரஷ்யாவில் குடும்பம் ஒன்று தமது செல்லப் பிராணியாகக் கரடியை வளர்ப்பது உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.
ஸ்ரீபன் எனப்படும் இந்தக் கரடி, 7 அடி உயரத்தில், 300 கிலோ எடையுடன் காணப்படுகிறது. குறித்த கரடி பிறந்து 3 மாதக் குட்டியாக இருந்த போது குடும்பத்தினரால் தத்தெடுக்கப்பட்டது. தற்போது 23 வருடங்களாக குறித்த குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறது. மீன்கள், பழங்கள், மரக்கறிகள் என தினமும் 55 கிலோ உணவு ஸ்ரீபனுக்குத் தேவைப்படுகிறது. ஸ்ரீபனை வைத்து திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன எனவும் அவற்றின் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு கரடியைப் பராமரிப்பதாகவும் அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ம-ரி4)

# ...ாக்கத்தை ...ண்டது அமெ.



...தியில் முன்னெடுத்தது அமெரிக்க ...பகுதிகளிலிருமிருந்து கிட்டத்தட்ட 15 ...வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் ...பட்டனர். அவர்களுக்கான உலர் ...ங்கப்பட்டன. 16 லட்சம் மக்களுக்கு ...டிக்கப்பட்டு மாற்றுவழிகள் ஏற்பாடு ... அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி ...இராணுவச் சிப்பாய்கள், தீயணைப் ...முன்னெச்சரிக்கையாகச் செயற்படப் ...ர். திட்டமிட்டபடி கடந்த சனிக்கிழமை ...ா, ஜோர்ஜியா, வடகரோலினா பகுதி ...யை தாக்கிய அதே வேகத்தில் மத்தி ...ன்றது. 10 பேர் இறந்தனர். 6 பில் ...ாதாரச் சேதம் ஏற்பட்டது. மத்தியூ ...னும் முடிவுக்கு வரவில்லை. ஆனால் ...கிலோ மீற்றர் வேகமாக வலுவிழந்

...விட அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட ...தபோதிலும் அரசின் துரிதச் செயற் ... தவிர்க்கப்பட்டதாக அமெரிக்க ...ய்தி வெளியிட்டன. (ம-ரி4)

# விரதத்தால் சிறுமி சாவு

ஹைதராபாத், ஒக். 11
இந்தியாவின் ஹைதராபாத்தில் சிறுமி ஒருவர் அதிக நாள்கள் விரதம் இருந்ததால் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.
ஆராதனா என்ற குறித்த சிறுமியின் (வயது - 13) தந்தை நகைக் கடை உரிமையாளர். அவரது தனது வியாபாரம் வீழ்ச்சியடைந்ததையடுத்து ஜோதிடர் ஒருவரிடம் சென்றுள்ளார். ஆராதனா 68 நாள்கள் விரதம் இருந்தால் வியாபாரம் எழுச்சியடையும் என்று ஜோதிடர் தெரிவித்தார்.
இதனையடுத்து ஒருவேளை நீருடன் 68 நாள்கள் பெற்றோரின் பலவந்தத்தால் குறித்த சிறுமி விரதம் இருந்தார். இதனாலேயே அவரது உடல்நிலை மோசமடைந்து உயிரிழந்தார் என பொலிஸார் தமது விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர்.
குறித்த விடயம் தொடர்பாகத் தமது மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
இருப்பினும் ஆராதனா கடவுள் பக்தி உடைய பிள்ளை எனவும், நீண்ட காலமாக அவருக்கு விரதம் இருக்கும் பழக்கம் உள்ளது என்றும் அவரது அயல் வீட்டார்கள் இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். (ம-ரி4)





அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் திரைப்படங்கள், கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் போன்று ஆடை அணியும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பலவித உருவங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தனர். மக்கள் பலரும் அவ்வாறு வேட மிட்டவர்களுடன் நின்று ஒளிப்படம் எடுத்துக்கொண்டனர். (ம-ரி4)

# மக்கள் கிளர்ச்சிகளின் எதிரொலி எத்தியோப்பியாவில் அவசரநிலை

அடிஸ் அபாபா, ஒக். 11
எதியோப்பியாவில், அரசுக்கு எதிராக இடம்பெற்றுவரும் மக்கள் கிளர்ச்சிகளின் எதிரொலியாக அங்கு அடுத்த ஆறு மாதத்துக்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த நிலை நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வருவதாக எத்தியோப்பிய பிரதமர் ஹெய்லிமரியம் தெரிவித்தார்.
ஒரோமியர்கள் என்ற பழங்குடியினர், எத்தியோப்பியாவின் [illegible] ஆட்சி முறையில் அவர்கள் ஒடுக்கப்பட்டிருப்பதுடன், அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒரோமிய இனத்தவரின் விவசாய நிலங்களை அரசு அபகரித்ததால் அங்கு போராட்டங்கள் இடம்பெற்றன. காலப்போக்கில் அரசுக்கு எதிரான இந்தப் போராட்டங்கள் தீவிரமடைந்து அங்கு பதற்ற நிலை வலுவடைந்தது. ஒரோமிய இனத்தவர்களுக்கு ஆதரவாகவும், ஏனைய விடயங்களுக்காகவும் அரசுக்கு எதிராக நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தின... முதல் அடுத்த 6 மாத காலப்ப... வரை அவசர நிலையை எத்... யோப்பிய அரசு அறிவித்தது.
அவசரநிலைப் பிரகடனத்தா... ஆர்ப்பாட்டங்களின் மூலம் ஏ... படும் உயிரிழப்புக்களும், அ... சொத்துக்களுக்கு ஏற்படும் சே... மும் தவிர்க்கப்படும் என எத்... யோப்பிய பிரதமர் ஹெய்லி ம... யம் மேலும் தெரிவித்தார்.
தற்போது ஆளும்கட்சியாக இரு... கும் கட்சி, கடந்த 25 வருடங்கள... தேர்தல்கள் இல்லாமல் தனது ஆ... சியைத் தக்கவைத்து வருகின்றன... குறிப்பிடத்தக்கது. (ம-ரி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் மாத




# ராசி பலன்

## சிம்மம்



மற்றவர்களுக்காகத் தன்னை மாற்றிக் கொள்ளாத சிம்ம ராசிக்காரர்களே உங்களின் பூர்வ புண்யாதிபதி குரு 2ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் மனநிம்மதி கிடைக்கும்.

உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். பூர்வீக சொத்தில் மாற்றம் செய்வீர்கள். பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடிவடையும். பிள்ளைப் பாக்கியம் கிட்டும்.

புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். மகனுக்கு அயல்நாட்டில் வேலைக் கிடைக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். 24ஆம் திகதி வரை யோகாதிபதி செவ்வாய் 5இல் நிற்பதால் கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்புக் காட்ட வேண்டாம். சகோதர வகையில் மனத் தாங்கல் வரும். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்துப் போகும்.

16ஆம் திகதி வரை ராசிநாதன் சூரியன் 2இல் அமர்ந்திருப்பதால் கண் வலி, பல் வலி வந்து போகும். யதார்த்தமாகப் பேசி சிக்கிக் கொள்வீர்கள். 17ஆம் தேதி முதல் சூரியன் 3இல் அமர்ந்திருப்பதால், அரசால் அனுகூலம் உண்டு. புதனும், சுக்கிரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் பணவரவு உண்டு. பெரிய பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீடு கட்டும் பணியில் இருந்த தேக்க நிலைமாறும். பண உதவியும் கிடைக்கும்.

ராசிக்குள் ராகுவும், 7இல் கேதுவும் நிற்பதால் கணவன்–மனைவிக்குள் ஒளிவு, மறைவில்லாமல் எல்லா விடயங்களையும் பகிர்ந்துக் கொள்வது நல்லது. மனைவிக்கு முதுகு, மூட்டு வலி வந்து நீங்கும். அவ்வப்போது உங்களுக்கும் தலைச்சுற்றல், நாக்கில் வறட்சி, மூச்சுத் திணறல், செரிமானக் கோளாறு வந்துப் போகும். அர்த்தமட்டுச் சனி தொடர்வதால் எவரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். தாயாருடன் வீண் விவாதம் வரும்.

**பெண்களுக்கு**

கூடுதல் மொழி கற்றுக்கொள்ள முயற்சி செய்வீர்கள். சிலருக்குத் திருமணம் கூடி வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு இலாபம் உண்டாகும். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் உங்களுடைய தொலை நோக்குச் சிந்தனைக்குப் பாராட்டுக்கள் கிடைக்கும். கலைத்துறையினரே! மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்கங்களை கற்றுத் தெளிவீர்கள். நாலும் தெரிந்த நல்லவர்களின் வழிகாட்டுதலால் இலக்கைத் தொடும் மாதமிது.

# கேதாரகௌரி

## விரத ஆரம்பம் இன்று

திருமதி மலர்விழி கனகசபை

இந்த ஆண்டுக்குரிய கேதார கௌரி விரத ஆரம்பம் இன்றாகும். இந்த விரதம் கோயில்களிலும் வீடுகளிலும் மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகின்றது.

புரட்டாதி மாதத்தில் வளர்பிறையில் வரும் அட்டமித் திதி முதலாகத் தொடங்கி, அமாவாசை வரும் வரையில் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பது முறை. இந்த முறை தசமித் திதியில் இந்த விரதம் ஆரம்பமாகின்றது. உலகிலே வசிக்கின்ற இந்துமத மக்களில் பெரும்பாலானோரால் இந்த விரதம் முறையாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அம்பிகையான உமாதேவியானவள் பரமேஸ்வரனை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும். அவர் இடப்பாகத்தில் ஐக்கியம் பெறவேண்டும் என்பதற்காகத் திருக்கேதாரம்என்றதிருத்தலத்தைச்சென்றடைந்தார். அங்கு கௌதம முனிவரைச் சந்தித்து தன் வருகையைப் பற்றிக் கூற, அவர் அப்போது உமாதேவியாருக்கு சொல்லும் முகமாக எமக்கு உபதேசித்ததே கேதார கௌரி விரதமாகும்.

நன்றாக இழைத்து தயார் செய்யப்பட்ட 21 இழைகள் கொண்ட சரடை (நூலை) சங்கல்பத்தோடு (வேண்டுதல் நிறைவேற வேண்டும்) இடக்கையில் கட்டிக் கொள்ளல்வேண்டும். புண்ணிய தீர்த்தத்தில், கேணியில் குளித்து, இயலுமானவரை சிவன்கோயில் சென்று வழிபட வேண்டும். இயலாதவர்கள் மற்ற கோயில்களிலும் வழிபடலாம். சூரியன் மறைந்த பின் இரவில் மட்டும் ஒருவேளை உண்ண வேண்டும். தூங்கும்போதுகூட அவசிந்தனை இல்லாமல், சிவசிந்தனையோடு தூங்கவேண்டும். இதுவே நடைமுறை.

இப்படி விரதமிருந்து தேய்பிறைச் சதுர்த்தசி அன்று கோயிலுக்குச் சென்று பூக்களால் அலங்காரம் செய்யவேண்டும். கோயிலில் ஓர் குறித்த இடத்தில் (யோக மண்டபம்) ஒரு மரைக்கால் அளவு செந் நெல்லை சதுரமாகப் பரப்பி, அதன் நடுவே மந்திர பூர்வமாகப் பிரணவ எழுத்தை எழுதி அதன் நடுவில் பூரண கும்பம் வைக்க வேண்டும். கும்பத்தில் தர்ப்பையை முறைப்படி சாத்தி சிவபெருமானை ஆவாகனம் செய்ய வேண்டும். பின்பு பக்தியுடன் முறையாகப் பூசை செய்து, அம்பிகையின் பாடல்களைப்பாடி வணங்க வேண்டும்.



பூசையின்போது நெய்விளக்கு ஏற்றுவது சிறப்பு. இப்படி அன்றைய தினம் பூசை முடிந்த பிறகு மறுநாள் முன்னர் கையில் கட்டிக் கொண்ட சரடை (நூலை) அவிழ்த்து விட்டு– பரமேஸ்வரனை வணங்கவேண்டும். கௌதம முனிவர் உபதேசித்த இந்த கேதாரகௌரி விரதத்தை அம்பிகை உமா தேவியானவள் முறையாகக் கடைப்பிடித்துப் பரமேஸ்வரனின் இடப பாகத்தைப் பெற்றாா.

அத்துடன் தான் கடைப்பிடித்த இந்த கேதாரகௌரி விரதத்தை எவர் கடைப்பிடித்தாலும், அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் தந்து, முடிவில் சிவன் திருவடிப்பேற்றையும் அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று பரமேஸ்வரரிடம் நமக்காக வேண்டிக் கொண்டார்.

அம்பிகையானவள் குழந்தைக்காகத் தாய் பத்தியம் இருப்பது போல, எம் மக்களுக்காகச் செய்து வழிகாட்டிய விரதம் இதுவாகும். பூசை அன்று சாயங்காலமோ அல்லது மறுநாள் காலையிலோ இயன்றதை நிவேதனம் செய்து தூபம் கர்ப்பூரம் காட்டி அஸ்மாத் பிம்பாத் ஸ்ரீகேதாரேஸ்வரம் யதாஸ் தானம் ப்ரதிஸ்டாபயாம் மோய புனராகமனாயச என்று வடக்கு முகமாக கேதாரேஸ்வரரை நகர்த்தி வைக்கவும்.

கௌரி பூசை விவாகம் ஆக வேண்டிய இளம் கன்னிகைகள் தமக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை பண்ணி, குத்து விளக்கில் செய்யவேண்டிய பூசையாகும். இந்தப் பூசையைப் பன்னிரண்டு தினங்களோ அல்லது இருபத் திரண்டு தினங்களோ அல்லது நாற்பத்தைந்து தினங்களோ தவறாமல் செய்தால் நல்ல பயனை அடையலாம்.

இந்த விரதத்தை இந்து மக்களாகிய நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் முறையாகக் கடைப்பிடித்து, சகல செல்வங்களையும் சகல சௌபாக்கியங்களையும் அடைய பரமேஸ்வரரின் திருப்பாதங்களைப் பணிந்து இந்த மண்ணிலே பிறந்த அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பிரார்த்திப்போமாக!

*உதவிக் கல்விப் பணிப்பாளர்*
*(அழகியல்) வேலணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் குழந்தைகளான உலகின் மாற்றாற்றலுடையோர்

உடல், உள ரீதியான பாதிப்புக்கு உள்ளானவர்கள் எம்மத்தியில் எம்முள் ஒருவவராக வாழ்வதற்கு, நாமே தடையாக இருப்பதுதான் வேதனையானவிடயம். ஓர் ஐந்தறிவு விலங்குக்கு இருக்கும் பண்பு கூட பகுத்தறிவோடு ஆறறிவுடைய எமக்கு இல்லாமல் போவது ஏன்? ஒரே வயிற்றில் பிறந்து வலுவிழந்து பிறப்பதனால் புறந்தள்ளும் மனப்பாங்கை எமது குடும்ப அங்கத்தவர்களுக்குள்ளேயே காணமுடிகின்றது.

அ.அஜந்தன்

எமது சனத்தொகையின் ஒரு குறிப்பிட்ட சத வீதத்தினர் விசேட தேவையுடையவர்கள். அதாவது ஊன முற்றோர், வலுவிழந்தோர் என்று அழைக்கப்படுபவர்கள். இவர்களை இந்த இரு வார்த்தைகளும் புண்படுத்தாத வகையிலேயே மாற்றாற்றல் உடையோர், விசேட தேவையுடையோர் என்ற சொற்பதங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. ஆனால், எம்மில் பல பேர் இன்றுவரை இவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவும் புண்படுத்தி இன்புறுபவர்களாகவுமே வாழ்கின்றனர்.

## மாற்றாற்றலுடையோர் பொறுப்பல்ல

மாற்றாற்றலுடையோர் தமக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்கு எந்தவிதத்திலும் பொறுப்பானவர்கள் அல்லர். பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளாலும் போர், இயற்கை இடர், விபத்து, போசாக்கு குறைபாடு மற்றும் இடையில் ஏற்படும் கடுமையான நோய்களாலுமே இவர்கள் வலுவிழக்க நேரிடுகிறது. இதற்கு நாம் சார்ந்த சமூகமும் பொறுப்புள்ளவர்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும். பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்த சந்ததிகளாக இருந்த போதிலும், இன்னமும் எமக்குள் தூக்கி எறியப்படவேண்டிய துர்குணங்களும் வளர்ந்து கொண்டுதான் உள்ளன. மாணவர்கள் தொடக்கம் அதிகாரிகள் வரை தம்முடன் வாழ்கின்ற அல்லது பணி புரிகின்ற மாற்றாற்றலுள்ளோரை புறம் தள்ளுவதும் ஏளனமாக நடத்துவதும் மனித குலத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கின்றது.

உடல், உள ரீதியான பாதிப்புக்கு உள்ளானவர்கள் எம்மத்தியில் எம்முள் ஒருவராக வாழ்வதற்கு, நாமே தடையாக இருப்பது தான் வேதனையான விடயம். ஓர் ஐந்தறிவு விலங்குக்கு இருக்கும் பண்புகூட பகுத்தறிவோடு ஆறறிவுடைய எமக்கு இல்லாமல் போவது ஏன்? ஒரே வயிற்றில் பிறந்து வலுவிழந்து பிறப்பதனால் புறந்தள்ளும் மனப்பாங்கை எமது குடும்ப அங்கத்தவர்களுக்குள்ளேயே காணமுடிகின்றது. தனது குடும்பத்தில் மாற்றாற்றலுள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்பதை வெளியில் தெரியப்படுத்துவதையே அவமானமாகக் கருதுவதும், தங்களையும் அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்து விடுவார்களோ என்ற ஏக்கமும்தான் இதற்குக் காரணம். இந்த நிலைக்கு குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமல்ல விழிப்புணர்வற்ற சமூகமும் காரணமாகி விடுகிறது. தனது உறவுகளைவிடவும் சமூக அந்தஸ்த்தைப் பெரிதாகக் கருதும் தாழ்ந்த மனப்பாங்குள்ளவர்கள் சமூகத்தின் திருப்திக்காக மாற்றாற்றலுள்ள தமது உறவுகளையே ஓரம் கட்டும் நிலை எமது சமூகத்தின் ஆரோக்கிய மற்ற செயல் என்று தான் சொல்லவேண்டும். இவர்களில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களும் இவர்களின் பெற்றோர்களுமே.

## பெற்றோரின் தவிப்பு

பொதுவாக பெற்றோர்கள் தமக்கு இப்படி ஒரு குழந்தை கிடைத்துவிட்டாலே உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டு விடுகின்றனர். சாதாரணமாகவே இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வாக உள்ள நிலையில், மருத்துவச் செலவென்பது வாழ்க்கைச்செலவின் ஒருபெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது. அதுவும்விசேட தேவையுடையபிள்ளைகளின் மருத்துவச் செலவென்பது ஒரு தொடர்ச்சியான செலவாகவே அமைந்துவிடும். அதிலும் அதிகமானவர்கள் அடிக்கடி கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றுவர நேரிடுவதால் பல சந்தர்ப்பங்களில் அதற்கான செலவை ஈடுசெய்ய முடியாமல், மருத்துவச் செயற்பாடுகளை இடை நிறுத்துபவர்களும் உண்டு. இந்தப் பிள்ளைகளின் உடல் நலத்துக்கும் அவர்கள் பாவிக்கும் மருந்துக்கும் சத்துள்ள உணவை உட்கொள்வதும் அவசியமாவதால் அதனை வாங்குவதற்கும் அதிகம் சிரமப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அப்பால், இந்தப் பெற்றோர்களில் பலர் தமது வாழ்வையே தமது குழந்தைகளுக்காக அர்ப்பணித்துச் செயற்படுகின்றனர்.

அநேகமான விசேட தேவையுடைய பிள்ளைகள் பெற்றோரில் முற்றும் தங்கி வாழ்பவர்களாகவே உள்ள னர். இதனால் பெற்றோர்கள் தமது சந்தோசம், பொழுது போக்கு, கொண்டாட்டங்கள் என்பவற்றிலிருந்து ஒதுங்கி வாழ்கின்றனர். இவற்றைவிட, விழிப்புணர்வற்ற சமூகம் இந்தக் குழந்தைகளையும் பெற்றோரையும் சமூகக் கட்டமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக உள்ளது. விசேட தேவையுடைய பிள்ளைகள் குடும்பம், சமூகம் மற்றும் பாடசாலைகளில் இழிவுபடுத்தப்படும் பொழுது, அந்தக் குழந்தைகளைவிட உளரீதியாக அதிகம் பாதிக்கப்படுவது பெற்றோர்களே. மற்றவர்கள் முன்னிலையில் இயலாமையால் தவித்துக் கொண் டிருக்கும் குழந்தையை விட்டுக் கொடுக்க முடியாதவர்களாக அவர்கள் படும் துன்பத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு அழைப்புவிடுக்கும் பொழுது கூட, பலபடித்தவர்கள் இந்தக் குழந்தையை தமது நிகழ்விக்கு அழைத்துவந்தால் நண்பர்கள், உறவினர்கள், தம்மையும் நிகழ்வையும் குறைத்து எடைபோட்டு விடுவர் என்ற தவறான எண்ணத்தில் நாசூக்காக அந்தக் குழந்தையை அழைத்துவர வேண்டாம் என்று கூறியும் இருக்கிறார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் அல்லது சகோதரர்களே தமது இயலாத அந்தக் குழந்தையோடு பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதை விரும்புவதில்லை. அதனால் வீட்டிலே அவர்களை நிறுத்தி வைத்து விட்டு, நிகழ்வுகளில் கலந்து கொள் பவர்களும் உண்டு. அல்லது தாமும் அந்த நிகழ்வைப் புறக்கணிப்பவர்களும் உண்டு. இவ்வாறான பொறுப்பற்ற சமூகத்தில் குறைபாடுடன் பிறந்த குழந்தைகள் இறைவனின் குழந்தைகள் அல்லது சமூகத்தின் குழந்தைகளாகப் பார்ப்பது அவசியமாகிறது. சிறுவர்கள் என்ற முறையில் அவர்கள் விசேடதேவைக்கு உட்பட்டவர்களாக இருப்பினும், தமக்குரிய உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். கல்வி, கலை, கலாசாரத்தில் பங்கு பற்றும் உரிமைகளையும் புறக்கணிப்பிலிருந்து முழுமையான பாதுகாப்பையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

அதேபோல் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் இயலாமையின் தன்மையை நன்கு உணர்ந்தவர்களாக இருப்பதுடன், அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் பெற்றிருக்க வேண்டும். சாதாரணகுழந்தைகளுடன் இவர்களையும் ஒப்பிட்டுப்பார்ப்பது பெற்றோரின் இயல்பு. இதனால் ஏனையயோரைப்போல அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு தீராத வலியாக மாறிவிடுகிறது. எனவேதான் தங்கள் பிள்ளைகளின் திறன் இயலுமை போன்றவற்றில் தெளிவான அறிவு பெற்றோர்களுக்கு தேவை. அப்படி அவர்களின் திறன்களை தெரிந்து வைத்திருப்பதால், அவர்களின் அந்தக் திறனை வளர்ப்பதன் மூலமாக எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடிவதோடு இயலுமையை தெரிந்து கொள்வதால் அதைவிட அதிகமான எதிர்பார்ப்பு இல்லாமல் போவதால், பிள்ளையின் செயல்களில் திருப்தி காணவும் முடியும். சமூகத்தின் பார்வை உங்கள் பிள்ளைகள் மீது தவறாக இருப்பதாகவே எப்பொழுதும் நினைத்து வேதனைப்படாமல், உங்கள் பிள்ளைசமூகம் மெச்சும் வகையில் மாற்றிக் காட்டுங்கள்.

## அதிசயக் குழந்தை

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஆஸ்திரேலியாவில் பிறந்த ஓர் அதிசயக் குழந்தையின் வாழ்க்கை வரலாற்றை மீட்டிப் பார்ப்பது இந்தக் கட்டுரையில் இலக்கை அடைய ஏதுவாக அமையும் என நம்புகிறேன். கருத்தரித்த நாள்களிலிருந்து தமக்குப் பிறக்கப்போகும். குழந்தையைப் பற்றிப் பல்வேறு கற்பனைகளில் திளைத்திருந்தனர். மிகுந்த ஆவலுடன் எல்லாப் பெற்றோருக்கும் இருக்கக்கூடிய மகிழ்ச்சிவெள்ளத்தில் அவர்கள்மிதந்துகொண்டிருந்தனர். பிரசவித்த குழந்தையை அவனது தந்தையிடம் காட்டிய பொழுது அவர் அந்தப்பிரசவ அறையைவிட்டு வெளியேறி வாந்தியெடுத்தார். தாயிடம் காட்டி இதுதான் உங்கள் பிள்ளை என்று கூறியபொழுது இந்தப் பிள்ளையை என் முன்னே கொண்டுவரவேண்டாம். தூரக் கொண்டு செல்லுங்கள் என்று துரத்தினார். நான்கு மாதங்கள் பிள்ளையைத் தொடாமலேயே அழுதுபுலம்பினார் தாயார். அதற்குக்காரணம் தங்களுடன் ஓடி ஆடி விளையாட ஒருவாரிசை எதிர்பார்த்திருந்த பெற்றோருக்குப் பிறந்ததோ இரு கைகளும், இரு கால்களும் இல்லாத ஒருபாதிக் குழந்தை. அந்தக் குழந்தைதான் உலகால் அறியப்பட்ட நம்பிக்கையின் சின்னம். நிக் வியூசிக் ஆவார்.

தமது குழந்தை கடவுளால் கொடுக்கப்பட்ட குழந்தை என்பதை உணர்ந்து தமது வாழ்வில் ஓர் உறுதியான நம்பிக்கையோடு நிக்கை வளர்த்தெடுப்பது என்ற வைராக்கியத்தை தமக்குள் வரவழைத்துக் கொண்டனர்.

தற்பொழுது 24 நாடுகளில் இவரது நம்பிக்கைக் கருத்தமர்வுகளைக் காண்பதற்கு, மக்கள் காத்துக் கிடக்கின்றனர். எனவேதான் எமது சமூகத்தில் வலுவிழந்து வாழ்ந்தாலும் மனவலிமை இன்றி வாழ்வது எமது இருப்பையே நிர்மூலமாக்கிவிடும். உடல், ஊனம் கடவுளின் செயலாகவே இருந்தாலும், மனதை ஊனமாக்காமல் பார்ப்பது முழுக்க முழுக்க எமது பொறுப்பே ஆகும் என்ற உண்மையைபுரிந்து கொண்டு, உங்கள் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் கவனம் செலுத்துங்கள். இவ்வாறு மாற்றாற்றலுடைய பெரியவர்களையும் இந்தச் சமூகம் ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். ஏற்றமுற வாழ்வதற்கு ஒத்தாசைபுரிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1138 - சிரியாவின் அலெப்போவை மோசமான நில நடுக்கம் தாக்கியது.

1797 - பிரான்சியப் புரட்சியின்போது, ஐக்கிய ராச்சியத்தின் றோயல் கடற்படைக்கும், நெதர்லாந்து றோயல் கடற்படைக்கும் இடையில் நடந்த போரில் தீர்க்கமான வெற்றியை பிரித்தானியா பெற்றுக் கொண்டது.

1852 - ஆஸ்திரேலியாவின் பழமை வாய்ந்த பல்கலைக்கழகமான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள்.

1906 - ஜப்பானிய மாணவர்கள் இன ரீதியாகப் பிரிக்கப்பட்ட பாடசாலைகளிலேயே கல்வியைக் கற்க வேண்டும் என்ற சான் பிரான்சிஸ்கோ பொதுப் பாடசாலைச் சபையின் அறிவிப்பு அமெரிக்கா மற்றும் ஜப்பானிடையே இராஜ தந்திர நெருக்கடிக்கு வித்திட்டது.

1941 - மெசிடோனியா தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.

1944 - முன்னாள் டன்னு ருவா அல்லது ருவான் மக்கள் குடியரசு ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது.

1984 - விண்ணில் நடந்த முதல் அமெரிக்க பெண்மணியானார் விண்வெளி வீராங்களை கத்ரீன் டி சுலிவான்.

1986 - ஐரோப்பாவில் நடுத்தூர ஏவுகணைகளை நிறுத்துவது தொடர்பாகக் கலந்துரையாட அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனும் சோவியத் தலைவர் மிக்கைல் கொப்பர்சேவும் ஐஸ் லாந்தில் சந்தித்தனர்.

1992 - படையினர் தரப்பில் உயிரிழப்பு அதிகம் என ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் ரணில்.
- இலங்கையில் ஐந்திலொரு பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக யுனிசெப் அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

2007- புலோலியில் கிளைமோர் தாக்குதலில் படையினர் 2 பேர் உயிரிழப்பு. மூவருக்குக் காயம்.
- காணாமல் போனோரை மீட்டுத் தருமாறு ஆர்பரிடம் கதறியழுதனர் உறவினர்கள். பாதிப்புற்றோர் ஐ.நா. அலுவலகம் முன் திரண்டனர்.
- அமைதிப் பேச்சுக்கான வழி இன்றும் திறந்தேயுள்ளதாக நோர்வே விசேட பிரதிநிதி நம்பிக்கை வெளியீடு.
- இணுவில் இந்துக் கல்லூரி தனது 143 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

2013 - சிசிலி நீரிணையில் குடியேற்ற வாசிகளை ஏற்றிச் சென்ற படகு மூழ்கியதில் 34 பேர் வரை உயிரிழந்தனர்.

# பகிடிக்கும் பொய் சொல்லாதீர்

கற்பகபுரம் தோட்டங்கள், வயல்கள் நிறைந்த கிராமம். அங்குள்ளவர்களில் அதிகமானோர் விவசாயிகளாவர். நிலங்களுக்கு இயற்கைப் பசளையைப் பாவிப்பவர்கள் சிலர் தமது நிலங்களில் பட்டிகளை அமைத்து ஆடு, மாடுகளை அடைத்து அவற்றின் மூலம் தமது நிலத்தைப் பண்படுத்துவர். அந்த ஊரில் ஆறுமுகம் என்பவரிடம் மாடுகளும் ஆடுகளும் நிறைய இருந்ததால் இவற்றை வேறு வயல்களிலுள்ள பட்டிகளில் அடைத்துப் பணம் சம்பாதித்து வந்தார். ஊரின் எல்லையில் இருந்த சிறு காடுகளில் இருந்துவந்து சில சமயம் ஓநாய்கள், நரிகள் என்பவை இவரது பட்டிகளைத் தாக்குவதுமுண்டு. பட்டிகளின் தடுப்பு வேலிகள் மிகவும் பலம் வாய்ந்தவையாக இருப் பதனாலும் இவரது காவல்பணி சிறப்பாக இருப்பதனாலும் ஓநாய்களால் மந்தைகளை அபகரிக்க முடிவதில்லை. மேலும் சுற்றுப் புற



விவசாயிகளின் ஒத்துழைப்பும் இவருக்கு ஒரு பலமாக இருந்தது.

ஒரு நாள் திடீரென ஆறுமுகத்துக்கு கடும் காய்ச்சலாக இருந்தது. எழுந்து நடக்கவே முடியவில்லை. தனது மகனான முரளியை அழைத்து அன்று பட்டிக்குக் காவலிருக்குமாறு கூறினார். முரளியும் தகப்பனது பெரிய கோலையும் சாப்பாடு, தண்ணீர்ப் பை ஆகியவற்றையும் தூக்கிக் கொண்டு காவல்காக்கச் சென்றான். அவன் இளைஞனாக இருந்தாலும் குறும்புத்தனங்கள் செய்வதும், வேடிக்கையாக ஏய்க்காட்டி ஏமாற்றுவதும் அவனுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. பகிடிக்குப் பொய் சொல்வதென்றால் அவனுக்கு மிகுந்த விருப்பம்.

ஒருநாள் பட்டிக்குக் காவல் இருந்தவனுக்குப் பசித்ததனால் உணவுப் பொதியைப் பிரித்து உண்டு பசியாறினான். அப்போது அவனது குயுக்திக்குணம் தலைகாட்டவே ஐயோ ஓநாய், ஐயோ ஓநாய், ஓநாய் என்று குரலெடுத்துக் கத்தினான். பட்டியை ஓநாய் தாக்குகின்றது போலும் என்று எண்ணி சற்று தூரத்தில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளெல்லாம் தமது கையில் இருந்த மண்வெட்டிகளுடன் ஓடி வந்தனர். "ஓநாய் வந்தால் உரத்துக் கத்தினால் உதவிக்கு ஆள்கள் வருவார்கள் என்று அப்பா சொன்னவர். உண்மையாய் இருக்குமோ பார்ப்போம் என்று தான் கத்தி னேன். இனி ஓநாய் வந்தால் இப்படியே கத்துவேன். அப்போ வாங்கோ இப்போ போட்டு வாங்கோ" என நளினமாகக் கூறினான். வந்த விவசாயிகளும், "இப்படியா பகிடி விளையாட்டு விளையாடுவது மடைப் பயலே" என ஏசிக் கொண்டு சென்றுவிட்டனர்.

மாலை மங்கிய மைம்மல் பொழுதிருக்கும் ஆடு, மாடுகள் எல்லாம் மிரண்டு கத்தின. ஓநாய் ஒன்று அப்போது தான் பட்டியைச் சேதமாக்க முயன்று கொண்டிருந்தது. இதனைக் கண்டு விட்டுத்தான் மந்தைகள் கத்தியிருக்க வேண்டும். பக்கத்திலிருந்த பெரிய கோலையும் தூக்கிக்கொண்டு அந்தப் பக்கமாக விரைந்தான்.

பெரிய ஓநாய் ஒன்று ஆக்ரோசமாக வெறியுடன் பட்டியின் தடுப்புவேலியைச் சேதப்படுத்தி உள்ளே நுழைய முயன்று கொண்டிருந்தது. "ஐயோ ஓநாய், ஓடி வாருங்கோ, ஐயோ ஓநாய்" என்று குரலெடுத்துக் கத்தினான். இவன் கத்திய சத்தம் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளுக்குக் கேட்டது. ஆனால் இவன் தம்மை ஏய்க்காட்டவே, வம்புக்குக் கத்துகிறான் என்று நினைத்து அவர்கள் தம் வேலையைக் கவனித்துக் கொண்டனர்.

பட்டியின் வேலியைப் பிய்த்துக் கொண் டிருந்த ஓநாய் மீது இவன் தனது கோலால் கடுமையாகத் தாக்கினாலும், இவன் தனி ஒருவனாகத்தானே நிற்கிறான் என்பதைக் கண்டு கொண்ட ஓநாய் அடியையும் வாங்கிக் கொண்டு இவன் மீது பாய்ந்து தனது கூரிய கால் நகங்களால் பிறாண்டி கடித்துக் காயப்படுத்தி விட்டு இவனது அவலக்குரல் கேட்டு மற்றவர்கள் வந்தாலும் என்று எண்ணி ஓடி விட்டது. நீண்ட நேரமாக இவனது அலறல் குரல் கேட்டு பொறுக்க முடியாமல் வந்தவர்கள் "நீ முன்னர் கத்தியது போல் பகிடிக்குத்தான் கத்து கிறாயாக்கும் என நினைத்தோம்" எனத் தெரிவித்து அவனைத் தூக்கிச் சென்றனர். தனது பகிடி விளையாட்டு தனக்கே வினையானதை எண்ணி மனம் திருந்தினான் முரளி.

- ப.மாலா.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# அமைதியாய் வாழ்ந்திடலாம்

அன்னை மண்ணே நம் சொந்தம் - அதை
ஆக்கிட வேண்டும் நலமே நாம்
இன்பமாய் நாம் வாழ
ஈசன் கருணை வேண்டும்
உணவு உடை உறையுள் வேண்டும்
ஊக்கமாய் அதற்கு உழைத்திட வேண்டும்
எழுதப் படிக்கத் தெரிந்திடணும்
ஏற்றத்தை நாம் பெற்றிடனும்
ஐக்கியமாக இருந்திடணும்
ஒன்றே இனம் என நாம் நினைத்தால்
ஓங்கி என்றும் இருந்திடலாம்
ஔவையின் வழியில் நாம் நடப்பின்
அஃதே அமைதியாய்
என்றும் வாழ்ந்திடலாம்

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனிதனும்

சமீபத்தில் உலகின் பல்வேறு இடங்களைப் புயல்கள் தாக்கியுள்ளன. அமெரிக்கா, கரிபியன் நாடுகள், சீனா, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா எனப் பல்வேறு திசைகளிலும் நாடுகளிலும் சூறாவளிகள் தாக்கியுள்ளன. தற்போது நாம் எதிர்கொள்ளவுள்ள காலம் மழைகாலமாகும். இருந்தபோதும், காலம் தப்பி இடம்பெறும் இவ்வாறான இயற்கை இடர்களுக்குக் காரணம் மனிதச் செயற்பாடுகளே ஆகும்.

புவியியல் வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில் மழை இருக்கவில்லை. தண்ணீராக, திடமான பனியாக, நீராவியாக இருந்தது. ஊற்றும் உறைவுமான சுற்றோட்டம் இருந்தது. டைனோசர் வாழ்ந்த காலத்தில் பெரிய விண்கல்லொன்று பூமியை மோதியதில், பூமி 23 அரைப்பாகையில் சரிந்ததை நாம் அறிவோம். குறித்த பாகைச் சரிவுக்குப் பின்னரே புவியல் வரலாற்றில் மழை என்ற அத்தியாயம் ஆரம்பமானது. இவை எல்லாம் பல கோடி மில்லியன் ஆண்டு காலங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளாகும்.

தட்ப வெப்ப நிலை, காந்தப்புலம், புவியீர்ப்பு என்பன புவி அமைவிடச்சரிவினால் மாற்றம் பெற மழை உருவானது. புவியின் இயங்கு நிலைக்குக் காரணம் நீர் ஆகும். நீர் அற்ற சூழலில் எந்த உயிரியாலும் உயிர்வாழ இயலாது. அதிகரித்த சனத்தொகை புவியின் நீராதாரத்தைச் சுரண்ட ஆரம்பித்தது. விவசாயம், நகரவிருத்தி, குடிதண்ணீர், சுத்திகரிப்பு அனைத்துக்கும் தண்ணீர் தேவையானது. அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இயற்கை வளங்களைச் சிதைப்பனவாக மாறின. இந்த மாற்றத்தின் உச்ச விளைவு தான் நாம் எதிர்கொள்ளுகின்ற காலநிலை மாற்றமாகும். கால நிலை என்பது விவசாயத்தின் அச்சாணி ஆகும். உணவு உற்பத்தி இல்லாவிட்டால் மனித இனமே அழிந்துவிடும். எதியோப்பியா, சோமாலியா போன்ற பகுதிகள் இதற்கு உதாரணமாகக் காணப்படுகின்றன. அதிகரித்த வறட்சி மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளிவிட்டது.

தெற்காசிய நாடுகளில் வசிக்கும் எமக்கு, கோடை காலங்களில் மழைப் பொழிவு குறைந்து, மாரி காலத்தில் கட்டுக்கடங்காத மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. இதனால், முளைநிலைப் பயிர்கள் அழுகும் வாய்ப்பும் ஏற்பட்டுவிடுகின்றது. மேற்கு நாடுகளில் அளவுக்கு அதிகமான பனிப் பொழிவும், புயலும் மையம் கொண்டுள்ளன. அபிவிருத்தி, அபிவிருத்தி என அனைத்து இயற்கை வளங்களையும் முடக்க ஆரம்பித்து விட்டோம். நகரமயமாதலினால் மழை நீர் வடிந்து, கீழுள்ள நீர் நிரப்புக் கலங்களைச் சென்றடையும் செயல் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. இலவசமாகக் கிடைக்கின்ற தூய மழை நீரைச் சேமிக்கும் ஆற்றலையும் நாம் இழந்து விட்டோம். மண் அகத்துறிஞ்ச வேண்டிய நீர் கடலுக்குத் திசை திருப்பப்படுகின்றது. இறுதியில் அரசியல் பிறழ்வுகளுக்கும் தண்ணீர் காரணமாக அமைந்து விட்டது.

இயற்கையின் ஆதாரமின்றி எம்மால் இயங்க முடியாது என்பதை நாம் உணர வேண்டும். பிளாஸ்ரிக், இரசாயனப் பாவனைகளை இயன்ற அளவு தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களும் அறிமுகப்படுத்தப்படும்போது அதன் விளைவுகளை ஆராயாததன் விளைவுகள்தான் இவை. இதனால் தற்போது ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களும் அதன் பின்விளைவுகளும் நன்கு ஆராயப்படுகின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், மனித இனத்தின் திறனாக பிளாஸ்ரிக்கை உக்கவைக்கும் பக்ரீரியாவைக் கண்டு பிடித்ததைக் குறிப்பிடலாம். பல தசாப்த சவாலுக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது. அவ்வாறே ஓசோன் படலத்தின் பாதிப்பையும் குறிப்பிடலாம். தவறிழைத்த நாம் ஒருவாறு எம்மைத்திருத்திக் கொள்ளவும், இயற்கையைக் குணமாக்கவும் ஆரம்பித்து விட்டோம். ஆனால் இந்த நடவடிக்கை அனைத்தும் மேற்கு நாடுகளால்தான் முன்னெடுக்கப்படுகின்றன. நம்மவர்களுக்கு இவை தொடர்பான அறிவு இன்னமும் விரிவான அளவில் சென்றடையவில்லை என்பது வருத்தத்திற்குரியது.




இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற புயல் அமெரிக்காவை வல்லரசு என நிரூபித்துள்ளது. ஹைட்டியில் 900 பேர் உயிரிழந்த நிலையில், அதனைவிட மிக வலுவான புயல் அமெரிக்காவைத் தாக்கிய போதும், 10 பேர் மட்டுமே உயிரிழந்தனர். ஆனாலும் இந்த எண்ணிக்கையைப் பூச்சிய மட்டத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பது அவர்களது நோக்கமாகும். அமெரிக்காவின் முன்னேற்பாடும், ஆலோசனைகளும், அழிவைக் குறைத்தன.

இத்தகைய திறன்கள் இன்னமும் வளர்ந்துவரும் நாடுகளில் ஏற்படுத்தப்படவில்லை. எதுவாக இருந்தாலும் தம்மை வளர்க்க நினைத்துத் தவறான பாதைகளைத் தெரிவு செய்து அழிவில் மாட்டிக் கொண்ட மனித இனம், தற்போது சற்று சுதாகரித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டது.



# வேண்டாமே பிளாஸ்ரிக்குகள்

பளையூர் பா.பாலாஜினி

உருவாகும் நகராக்கங்களைத் தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது சனத்தொகை. இதற்கு ஏற்ற வகையில் பல்வேறு பொருள்கள் துரிதமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அன்றாடப் பயன்பாட்டுக்குத் தேவையான பொருள்களும் இதில் பாதிப் பங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. பிளாஸ்ரிக்குகளாலும், பொலித்தீன்களாலும். கலர்கலராகப் பல வித வர்ணங்களில் அவை உற்பத்தி செய்யப்பட்டுக் காணப்படுகின்றன. அத்துடன் பொருள்களைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கும் இவை பொருத்தமானதாகக் காணப்படுவதனால் இவை எல்லோராலும் விரும்பப்படுகின்றன. இன்றைய உலகில் போக்குவரத்துகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அத்தகைய போக்குவரத்துக்களின்போது பொருள்களை எடுத்துச் செல்ல இவை உற்ற துணை புரிகின்றன என்றால் அதை எவராலும் மறுத்துவிடமுடியாது.

### தீமைகளே அதிகம்

ஆனால் இந்த அளவுக்கு உபயோகமாக இருக்கின்ற இந்தப் பொலித்தீன்களும், பிளாஸ்ரிக்குகளும் நன்மையை விட அதிகளவிளான தீமையைத் தருகின்றன என்பது எவராலும் மறுத்துவிட முடியாத ஒன்று. இந்த பிளாஸ்ரிக்குகள் எவ்வாறு நமக்குத் தீங்கு விளைவிக்கின்றன என்பதை நீங்கள் என்றாவது சிந்தித்தீர்களா? அவ்வாறு சிந்தத்துத் தெரிந்து கொண்டாலும் அதைத் தடுப்பதைப்பற்றி யோசித்தீர்களா? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தப் பிளாஸ்ரிக்குகளுக்கென்றே சில சிறப்பியல்புகள் உள்ளன. இவை என்றுமே அழிந்துவிடாதவை. அதாவது உருகி உருமாற்றம்அடையுமே தவிர ஒரு போதும் முழுமையாகச் சூழலில் இருந்து அழிந்து விட மாட்டாதது. இதனால்தான் அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்துமாறு சூழல் ஆய்வாளர்கள் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகின்றனர்.

இந்தப் பொலித்தீன்களையும், பிளாஸ்ரிக்குகளையும் நாம் பயன்படுத்துகின்ற போது நாளடைவில் அவை ஈய்ந்து, நிறம் மாறி, துண்டங்களாகிவிடுகின்றன. எடுத்துக்காட்டாக உணவுப் பொருள்கள் சிலவற்றை நீண்டகாலமாக பிளாஸ்ரிக் கொள்கலன்களில் போட்டுவைப்பதனால் அவை உணவுடன் கலந்த விடுகின்றன.

மேலும் இவ்வாறான பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை கடலிலே வீசுவதனால் அவை கடல் மீன்களுக்கு உணவாகி கடலின் உயிரின சமநிலையையே அடியோடு அழித்துவிடுகின்றன. பிலிப்பைன்ஸின் அண்மையிலுள்ள பசுபிக் சமுத்திர கடற் பகுதியில் பிளாஸ்ரிக் கழிவுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய தீவுக்கூட்டமாக கடலில் மிதந்து கொண்டிருக்கின்றன. இதனால் எவ்வளவு பெரிய விளைவுகளை நாம் சந்திக்க வேண்டி வரும் என்பதை எவருமே சிந்திப்பதில்லை.

இது மட்டுமல்ல இன்னும்நிறைய ஆபத்துக்கள் இதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றை வீசக்கூடாது என்பதற்காக எரிக்கிறோம். அல்லது புதைக்கிறோம்.

இவற்றைப் புதைப்பதனால் இவை மண்ணினுள்ளே உருமாறாது உக்காது அப்படியே இருக்கின்றன. மண்ணினுள்ளே நீர் ஊடுபுகாது இவை தடை செய்கின்றன. இதனால் நிலத்தடி நீர் குறைவடைந்து செல்கின்றது. எங்களுக்கு மட்டுமல்ல நம் எதிர்கால சந்தியினருக்கும் தேவையான ஒன்றுதான் இந்த நிலத்தடி நீர். இதனையே அழிக்கின்ற பிளாஸ்ரிக்கினுடைய பயன்பாடு நிச்சயம் நமக்குத் தேவையா?

மேலும் இதனை எரிப்பதனால் இவற்றிலிருந்து வெளியாகின்ற தீங்கான வாயுக்கள் மேலே சென்று எம் புவிக் காப்பின் உற்ற துணைவனான ஓசோனை அழிக்கின்றன. அந்தக் கட்டமைப்பில் துவாரத்தைத் ஏற்படுத்துகின்றன. அந்தக் கட்டமைப்பு அழிவதனால் அதிக வெப்பத்தைத் தருகின்ற புற ஊதாக் கதிர்கள் பூமியில் வந்து எமக்குத் தொற்று நோய்களையும், கண்நோய்களையும் ஏற்படுத்துகின்றன. பனிப்பாறைகள் உருகிக் கடலின் நிர் மட்டம் உயர்வதைக் கூட இவை தூண்டிவிடும்.

இத்தகைய பாதிப்புகளைத் தருகின்ற இவற்றினுடைய பயன்பாட்டைக் குறைப்பதற்கும் இவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனதான். ஆனாலும் யாருமே இதைப்பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இவற்றினுடைய பயன்பாட்டை முற்றாக நிறுத்த எம்மால் முடியாதுதான். ஆனால் பயன்பாட்டைக் குறைத்து தீமைகளை இலகுவாக்க நிச்சயமாக எம்மால் முடியும்.

### இயற்கைப் பொருள்களின் பாவனை

பிளாஸ்ரிக்குகள், பொலித்தீன் போன்றன பயன்பாட்டுக்கு வருவதற்கு முன் நாம் எதைப் பயன்படுத்தினோம்? வேறு இயற்கைப் பொருள்களைத் தானே! ஆனால் இன்று ஏன் அதை நம்மால் பயன்படுத்த முடியவில்லை. பனை ஓலையாலும், தென்னை ஓலையாலும் பயன்படுத்தி செய்யப்பட்ட கைப்பைகளையும், பிற பொருள்களையும் பயன்படுத்தினால் அது நமது கௌரவத்துக்கு குறைச்சலாக அமைந்துவிடுமா? ஆனால் சூழலுக்கு நேயமானது அவை தானே. நாம் எல்லோரும்எதைப்பயன்படுத்துகின்றோமோ எதைச் சொல்கின்றோமோ, அவை தானே நமது நாகரிகமாக மாறுகின்றது. ஆகவே நிச்சயம் நாம் எல்லோருமாக இணைந்து சர்வதேச ரீதியில் முயற்சிப்போமேயானால் நிச்சயம் வெற்றியைத் தரக் கூடியதாக இருக்கும். அதை விட பிளாஸ்ரிக் கழிவுகளை எரிக்காது மீள்சுழற்சிக்கு பயன்படுத்துகின்ற முறையும் இப்போது வலியுறுத்தப்படுகின்றது. இது நிச்சயமாகவே நன்மையைத் தருகின்ற செயற்பாடுதான். இவ்வாறு இவை மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படுவதனால் இவற்றின் மூலம் ஏற்படுகின்ற பாதிப்பினைக் கணிசமான அளவு குறைக்க முடியும்.

எனவே எல்லோரும் இதை நன்குணர்ந்து பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும். நாம் மட்டுமல்லாது எமது எதிர்கால சந்ததியினருக்கும் இதைப் பற்றிய அறிவை நாம் முழுமையாக வழங்க வேண்டும். அப்போதுதான் பிளாஸ்ரிக்கின் தீயவிளைவுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.
சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 1 | | 2 | | |
| | | 2 | | | | | 7 | 8 |
| 7 | | 8 | | | | | | |
| 4 | | 9 | | | | | | |
| 3 | 5 | | | | | | | 7 |
| | | | | | 6 | 1 | | |
| | | 4 | 8 | 5 | | | | 2 |
| | | | | | 3 | | | 4 |
| | | | | 4 | 2 | 6 | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 5 | 8 | 9 | 6 | 2 | 4 |
| 4 | 8 | 6 | 7 | 3 | 2 | 1 | 9 | 5 |
| 5 | 9 | 2 | 1 | 4 | 6 | 3 | 8 | 7 |
| 9 | 2 | 8 | 4 | 6 | 7 | 5 | 3 | 1 |
| 6 | 4 | 5 | 3 | 9 | 1 | 2 | 7 | 8 |
| 3 | 7 | 1 | 2 | 5 | 8 | 9 | 4 | 6 |
| 2 | 5 | 4 | 8 | 1 | 3 | 7 | 6 | 9 |
| 8 | 6 | 3 | 9 | 7 | 5 | 4 | 1 | 2 |
| 7 | 1 | 9 | 6 | 2 | 4 | 8 | 5 | 3 |

ஒன்றுமில்லையுங்கோ ஆயுத பூசைக்கு வண்டி கழுவனும் அதான்...



டாக்டர்: யோவ், உன் மனைவியை நாய் கடிச்சிடுச்சே, முதல் உதவி என்ன செஞ்ச...



அந்த நாய்க்கு ஒரு பிரியாணி வாங்கி போட்டேன் டாக்டர்!!

விளம்பரங்களில் வரும் அம்மா மட்டும் தான் முத்தமிட்டு தலைகோதி குழந்தைக்கு ஹார்லிக்ஸ் தருவாங்க போல...



பக்கத்து வீட்டில் எல்லாம் சனியனே! இதை சீக்கிரம் குடிச்சு தொலையேன்ற சவுண்டு தான் வருது...

சௌமியா
தவறையும் நாமே செய்து விட்டு நாமே கோபப் படுவது எல்லாம் திமிரின் உச்சக்கட்டம்...



# தயாரிப்பாளராகும் தமன்னா

நடிகை தமன்னா பட தயாரிப்பு நிறுவனம் தொடங்கும் முயற்சியில் இறங்கி உள்ளார். பிரபுதேவாவுடன் இணைந்து தமன்னா நடித்துள்ள தேவி படம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளில் வெளியாகி உள்ளது. அத்தோடு, பிரபுதேவாவுடன் தமன்னா நெருக்கமாக இருப்பதாக செய்தி வெளியாகி இருக்கிறது.
இந்த நிலையில் தமன்னா பட தயாரிப்பு நிறுவனம் தொடங்கும் முயற்சியில் இறங்கி இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. பிரபுதேவாவுடன் சேர்ந்து இந்த தயாரிப்பு நிறுவனத்தை தொடங்குகிறார் என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** திறமையை வெளிப்படுத்தி, நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி திருப்தியளிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு, பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

**இடபம்:** உங்களிடம் சிலர் சுயநல எண்ணத்துடன் பழகுவர். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில், வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும். பணவரவு சீராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது. பெண்களுக்கு சகோதரர்களின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** கடந்த கால இனிய நிகழ்வுகளை எண்ணி மகிழ்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாட்டால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** உறவினர்களின் வழிகாட்டுதல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உடல்நலத்துக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**துலாம்:** குடும்ப விடயத்தை மற்றவரிடம் பேச வேண்டாம். தொழிலில், மந்தநிலை நிலவும். ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத் தேவை அனைத்தும் முழுமையாகும். ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள், கல்வியில் சிறந்து விளங்குவர்.

**தனுசு:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளில் பரபரப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் ஓரளவே இருக்கும். முதலீட்டை அதிகப்படுத்த, கடன் வாங்க நேரிடலாம். பெண்கள், நகை பணம், இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**மீனம்:** நண்பர்களின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்துடன், விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**முருகேசு:** அலாவூதீனின் அற்புத விளக்கு கண்டுபிடிச்சுட்டேன்
**மனைவி:** வாவ்... சந்தோசம்... என்ன விருப்பம் நிறைவேற கேட்டீங்க?
**முருகேசு:** என்னோட மனைவிகிட்டே இப்போ இருக்கிற மூளை திறனை, பத்து மடங்கா "பெருக்கனும்" என்று கேட்டேன்...!
**மனைவி:** ஐ லவ் யூ டியர்.. எப்போ நிறைவேறும்னு சொன்னாப்ல?
**முருகேசு:** அதுதான் முடியாதாம், பூஜியத்தை எப்படி "பெருக்கினாலும்" பூஜியம்தான் வரும் என்று சொல்லிட்டு போயிடுச்சு...!?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரோம மேற்
பரப்பைக் கொண்ட பேஸ்கள்
அறிமுகமாகியுள்ளன. வழமையான கனவடிவத் தோல் பேஸ்களைப் போன்று, தோலுக்கு பதிலாக உரோம மேற் பரப்பினால் உருவாக்கப்பட்டுள்ளன. தனித்துவமான இந்த அமைப்புடன் பிரத்தியேக வர்ணங்களில் கிடைக்கின்றன. இது 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 600 | 600 |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 500 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 700 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 350 | 400 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 500 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 800 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 400 | – |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 300 | 300 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 500 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 250 | – |
| ஓட்டி | 300 | 250 | 200 | – | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 150 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 150 | 200 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | மந்திகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 50 | 50 | 60 | 60 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 100 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 100 | 90 | 120 | 100 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 120 | 140 | 120 | 200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 30 | 100 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 50 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 120 | 60 | 80 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 40 | 35–40 | 40 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 400 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 80 | 80 | 200 | 80 | 100 |

## நாளை

**புரட்டாதி-26**

புதன்கிழமை -12.10.2016
திதி: ஏகாதசி பி.ப. 05.22
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.04.39
ராகுகாலம்:12.02-01.32 வரை
சுபநேரம்: 04.32-06.02 வரை
ஏகாதசி விரதம்

## மருத்துவக் குணங்கள் நிறைந்த கறிவேப்பிலை

கறிவேப்பிலையில் நிறைய உயிர்ச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால், பதார்த்தங்களில் மிதக்கும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்துவிடக்கூடாது. ஆகாரத்துடன் அதையும் சேர்த்து மென்று விழுங்கிவிட வேண்டும்.

இந்தக் கறிவேப்பிலை பல வியாதிகளையும் தீர்க்கிறது. கறிவேப்பிலை உடலுக்குப் பலம் உண்டாக்கக்கூடியது. பசியைத் தூண்டும் சக்தி வாய்ந்தது.

பித்தத்தைத் தணித்து உடல் சூட்டை ஆற்றும். அதோடு கறி வேப்பிலை மனதுக்கு உற்சாகத்தையும்கொடுக்க வல்லது. குமட்டல், சீதபேதியால் உண்டான வயிற்று உளைச்சல், நாள்பட்ட காய்ச்சல் ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். பித்தத்தைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகின்றது.

வாந்தி, நாக்கு ருசியற்றுப் போதல், வயிற்றோட்டம், சாப்பிட்டவுடன் மலங் கழிக்கும் உணர்வு, பசியற்ற நிலை, சளி ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். கண்கள் ஒளி பெறவும், முடி நரைக்காமலிருக்கவும், மேனி எழில் பெறவும் கறிவேப்பிலை உதவுகின்றது.

கறிவேப்பிலைச் சாறு குருதியில் உள்ள வெள்ளை அணுக்களைப் பலப்படுத்துகிறது. பத்திய உணவு சாப்பிடுபவர்கள் கறிவேப்பிலைத் துவையலை சேர்த்துக்கொள்வது நல்லது.

(தொடரும்)





## தேங்காய்த் தோசை

**செய்முறை**

அரிசி, உளுந்து, வெந்தயத்தை ஒரு மணி நேரம் ஊறவைக்கவும்.

பின் ஊற வைத்ததை அரைக்கும்போது தேங்காயைச் சேர்த்து அரைத்து உப்புச் சேர்த்துக் கலக்கி வைக்கவும்.

இரவு ஊறவைத்து இரவே அரைத்தால் காலையில் சுடுவதற்கு தயாராக இருக்கும்.

மா புளித்த பின் தோசையாக வார்க்கலாம்.

விரும்பிய சம்பல் எது வேண்டுமானாலும் செய்து இதனுடன் சாப்பிடலாம்.

தினமும் சாப்பிடும் தோசைகளில் இது ஒரு வித்தியாசமான தோசையாக இருக்கும்.

**தேவையான பொருள்கள்**

- பச்சரிசி - 1 கப்
- புழுங்கலரிசி - ½ கப்
- உளுந்து - ½ கப்
- வெந்தயம் - தேவையான அளவு
- தேங்காய் - 1 மூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ் பொனான்சா சீட்டிழுப்பின் மாதாந்த வெற்றியாளர் தெரிவு



மொபிடெல் நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டுக்கான காஷ் பொனான்சா சீட்டிழுப்புத் திட்டத்தின் மூலம் மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்து இலட்சக்கணக்கான பரிசுகள் வழங்கப்பட்டுவருகின்றது. இம்முறை மாதாந்த சீட்டிழுப்பின் வெற்றியாளராக எப்பாவலை பிரதேசத்தைச் சேர்ந்த எச்.ஜே.எஸ். செனவிரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் கடந்த காலங்களில் அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த, ஷானிகா ஸ்ரீமாலி, வாரியபொலவைச் சேர்ந்த, ஜே.எம்.துஷார ஜயலத், பலல்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம். ரோஷான பிரியதர்ன மற்றும் நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி. ஆர்.எம்.பீ.பி.பி. குமாரி, தனமல்வில பிரதேசத்தை சேர்ந்த திருமதி பீ.ஏ.குசுமாவதி, பதுரிய ஸ்ரீதிஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.டி. நிமால் ஜயசிங்க மற்றும் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த விஜித் ரோட்ரிகோ ஆகியோர் கடந்த சீட்டிழுப்பில் மொன்டெரோ ரக கார்களை வெற்றி பெற்றிருந்தனர்.

இம்முறை காஷ் பொனான்சா களியாட்டம் மற்றும் இசை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு விழாவும் கட்டுநாயக்க அவரியவத்தை சுதந்திர வர்த்தக வலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மாபெரும் சீட்டிழுப்பின் வெற்றியாளரான எச்.ஜே.எஸ் செனவிரத்ன, மிட்சுபிசி மொன்டெரோ ரக மோட்டார் வாகனத்தை இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைவர் அஞ்சலோ மெத்யூஸிடமிருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் 2016ஆம் ஆண்டில் மேலும் 4 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வினையொட்டி அன்றைய தினம் வருகை தந்திருந்த வாடிக்கையாளர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் அன்றைய தினம் பல்வேறு களியாட்ட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இது வரை 8 வெற்றியாளர்கள் மொன் டெரோ ரக வாகனத்தினைப் பரிசாகப் பெற்றுள்ளதுடன் காஷ் பொனான்சா 2016 பரிசளிப்புத் திட்டத்தின் மூலம் இதுவரை 2335 இலட்சம் ரூபா பெறுமதி மிக்க பணப்பரிசுகள் 451,408 மொபிடெல் வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (த)

வணிகம்

## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

கடந்த மாதம் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 499 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளனர். இது கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தைக் காட்டிலும் 3.6 சதவீத அதிகரிப்பு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்தே அதிக அளவான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இரண்டாம் இடத்தில் சீனர்கள் உள்ளனர். (த)

## செலான் வங்கி அனுசரணையில் வாகனக் கண்காட்சி கொழும்பில்

இலங்கையின் மாபெரும் மோட்டார் வாகனக் கண்காட்சியான கொழும்பு மோட்டார் ஷோ 2016 உடன் பிரதான மற்றும் பிரத்தியேக வங்கி அனுசரணையாளராக செலான் வங்கி, இரண்டாவது ஆண்டாக இணைந்துள்ளது.

கொழும்பு மோட்டார்ஷோ இம்மாதம் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் நளின் கருணாரத்ன மற்றும் வாடிக்கையாளர் நிதிப்பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் டெல்வின் பெரேரா ஆகியோர் கொழும்பு மோட்டார் ஷோவுக்கான பிரதான அனுசரணைப் பலகையை கையளித்தனர். (த)

## எயார்டெல் லங்கா எம் காஷுடன் இணைவு

எயார்டெல் லங்கா, எம் காஷ் மொபிடெல் சேவையான எஸ்.எல்.ரியுடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. எம் காஷ் சேவையின் மூலம் சிக்கனமான, பிரச்சினைகளற்ற விதத்தில், எயார்டெல் பாவனையாளர்கள் தங்களது பிற்கொடுப்பனவு அலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தவென அதன் விநியோக வலையமைப்பை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

இந்தப் புதிய சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் சகல எயார்டெல் லங்கா வாடிக்கையாளர்கள் முற்கொடுப்பனவு ரொப்–அப்களைச் செய்யும் சந்தர்ப்பத்தைப் பெறுவதோடு, அவர்களின் பிற்கொடுப்பனவு குரல்வழி மற்றும் தரவுக் கட்டணங்களை இலங்கையின் சகல பகுதிகளிலும் 12,000க்கும் அதிகமான நிலையங்களைக் கொண்டுள்ள எம் காஷ் வலையமைப்பின் மூலம் செலுத்தும் சந்தர்ப்பத்தையும் பெறுவார்கள்.

இதன் பயனாக எயார்டெல் லங்காவின் விநியோக வலையமைப்பு 60,000 நிலையங்களுக்கு மேல் அதிகரிப்பதனால், நாட்டின் சகல பகுதிகளிலும் எயார்டெல் சேவைகளை வாடிக்கையாளர்கள் இலகுவில் பெறுவதற்கு வாய்ப்புக்கிடைத்துள்ளது. எம் காஷ் வசதிகளை உபயோகிக்கும் எயார்டெல் வாடிக்கையாளர்கள் எந்தவொரு மொபிடெல் கிளைக்கு அல்லது எஸ்.எல்.ரி ரெலிஷொப்கள், சிங்கர் மெகா அல்லது நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள எந்தவொரு எம் காஷ் சில்லறை விற்பனை நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் தங்களது பிற்கொடுப்பனவுக் கட்டணங்களைச் செலுத்தும் வசதியையும், முற்கொடுப்பனவு ரொப் – அப்களை வாங்கும் வசதியையும் பெறுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. (த)

# நுட்பம்




## முகப்புத்தகத்தில் என்க்ரிப்ன் வசதி

ப்ரைவஸி அமைப்புகளிடம் இருந்து பெரும் வரவேற்பைப் பெற்ற வட்ஸ் அப்பின் என்க்ரிப்ன் வசதி தற்போது முகப்புத்தகத்திலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து பேஸ்புக் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது–

இந்த வசதியைப் பெறுவதற்கு பயனர்கள், செற்றிங்ஸ் பகுதிக்குச் சென்று இரகசிய உரையாடல்கள் என்ற வசதியைக் க்ளிக் செய்யவேண்டும்.

அதே நேரம் எல்லாக் குறுஞ்செய்திகளும் தானாக குறியீடு வடிவிற்கு மாறிவிடும். வட்ஸ் அப்பைப் போல் அல்லாது முகப்புத்தகத்தில் ஒவ்வொரு புதிய குறுஞ் செய்திக்கும் பயனர்கள் என்க்ரிப்ன் வசதியை இயக்கச் செய்யவேண்டும்.

பயனர்கள் மெசஞ்சரின் மேம்படுத்தப்பட்ட பதிப்பைப் பதிவிறக்க வேண்டும். அதில் புதுக் குறுஞ்செய்திக்கான திரையின் வலது மேல் ஓரத்தில் தோன்றும் சீக்ரெட் வசதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கு அனுப்புநர், பெறுநர் என இருவருமே மெசஞ்சரின் மேம்படுத்தப்பட்ட பதிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.




## 5ஜி சோதனையில் சீனா

ஐந்தாம் தலைமுறைக்கான தொலைத் தொடர்பு சேவையான 5ஜி சேவையை வழங்குவதற்கான சோதனை முயற்சிகளை, சீனா மேற்கொண்டுள்ளது.

சீனாவில் உள்ள 100 முக்கிய பெருநகரங்களில் இந்த 5ஜி சேவையை தொடங்குவதற்கான கோபுரங்கள் மற்றும் தொலைத் தொடர்ப் பரிமாற்ற கட்டுப்பாட்டு மையங்களை அமைக்கும் சோதனை ரீதியான முதல்கட்ட முயற்சியில் சீனா தற்போது களமிறங்கியுள்ளது என்று அந்த நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போதைய நிலவரப்படி சீனாவில் உள்ள சுமார் 130 கோடி மக்கள் கைபேசிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களில் 30 சதவீதம் பேர் 4ஜி சேவை இணைப்புகளை பெற்றுள்ளனர்.

வினாடிக்கு ஒரு ஜிபி வேகத்தில் செயலாற்றும் இந்த 4ஜி இணைப்பைவிட அதிக வேகம் கொண்டதும் வினாடிக்கு 20 ஜிகா பைட்ஸ் வரை வேகமாக இயங்கக்கூடியதுமான 5ஜி இணைப்பை தங்கள் நாட்டு மக்களுக்கு விரைவாக அறிமுகப்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது.

குறித்த திட்டம் 2020ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்த உலகின் மிகப்பெரிய தொலைத்தொடர்புத்துறைச் சந்தையாக விளங்கிவரும் சீனா தீவிரம் காட்டி வருகின்றது.

### பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE — 10/10/2016 — www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | -19.84 | 6,562.50 | 6,582.34 |
| S&P SL20 | -3.25 | 3,661.23 | 3,664.48 |
| வியாபாரப்புரள்வு | | 336,323,040 | 387,337,568 |
| உள்நாடு:- கொள்வனவு | | 244,295,808 | 343,187,872 |
| விற்பனை | | 236,593,312 | 287,346,976 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 92,027,240 | 44,149,696 |
| விற்பனை | | 99,729,728 | 99,990,600 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | | | | |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 157.5 | 303,787 | 47,894,360 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 858.1 | 53,352 | 46,147,368 |
| லைகெம் டெவெலொப்மென்ட்ஸ் | LDEV.N | 4.8 | 6,337,908 | 28,349,877 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 62 | 447,295 | 27,670,579 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 53 | 325,343 | 17,235,177 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 27.1 | 494,044 | 13,356,064 |
| செலான் டெவெலப்மென்ட்ஸ் | CSD.N | 15.6 | 830,440 | 12,712,735 |
| சம்பத் வங்கி | SAMP.N | 268.2 | 34,625 | 9,280,709 |
| பீப்பில் இன்சூரன்ஸ் | PINS.N | 19.2 | 378,729 | 7,271,627 |
| ஏசியா அஸெட் பைனான்ஸ் | AAF.N | 1.7 | 3,874,730 | 6,201,468 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்

யூனியன் கெமிக்கல்ஸ் (UCAR) - பங்கு ஒன்றிற்கு Rs. 8.00

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் (JKH) - பங்கு ஒன்றிற்கு Rs. 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 215 |
| விலை உழைப்பு | 13.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூ.100 மில். இழப்பீடு கேட்கிறார் நாமல்

கொழும்பு, ஒக். 11

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்தார்.

2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ரக்பி விளையாட்டுப் போட்டிக்காக கிறிஸ்நிறுவனம் வழங்கிய 70 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்தார் எனத் தன் மீது பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தித் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தே நாமல் ராஜபக்ச இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கிறிஸ் தனியார் நிறுவனத்திடமிருந்து ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்கெனக் கூறிப் பெற்றுக்கொண்ட 70 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நாமல் ராஜபக்ச, யூலை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

எந்தவித அடிப்படையும் இன்றித் தன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதுடன், தன்னைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்ததால் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதுடன், அரசியல் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளதாக நாமல் ராஜபக்ச நேற்றுத் தாக்கல் செய்த மான நஷ்ட வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணை மற்றும் விளக்கமறியல் காரணமாக உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள நாமல் ராஜபக்ச, பொலிஸ் நிதி மோசடி பிரிவின் பரிசோதகர் ஆர்.ஏ.கே. பிரேமரத்ன மற்றும் உதவிப் பரிசோதகர் சாந்த லால் ஆகியோரிடம் 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி வழக்குப் பதிவு செய்துள்ளார். (த)

# பேயிடம் அடி வாங்கிய எம்.பி

நுவரெலியாவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வுவிடுதியில் தங்கியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, தன்னை பேய் தாக்கியதாகத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் தூக்கத்திலிருந்து எழுந்து கழிவறைக்குச் சென்றபோது, என்னைப் பின்தொடர்ந்த ஓர் உருவம் என் மீது கடுமையாகத் தாக்கியது. இதனால் கீழே வீழ்ந்த நான் சுதாகரித்து எழுந்து பார்த்தபோது, பூட்டிய அந்த அறைக்குள் எவரும் இருக்கவில்லை. இது நிச்சயமாகப் பேய்தான் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். கீழே வீழ்ந்ததால் அவரின் தலையில் காயமும் ஏற்பட்டது. (வ-21)

தொடர்ச்சிகள்

## குளவி...

மணியளவில் தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்றது. தெல்லிப்பழையைச் சேர்ந்த தர்மலிங்கம் மகேஸ்வரன் (வயது - 37) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

தெல்லிப்பழைப் பகுதியில் பனை ஓலை வெட்டுவதற்காக ஒரு பனை மரத்தில் ஏறி அதில் ஓலையை வெட்டிவிட்டு, மற்றொரு மரத்தில் ஏறி ஓலையை வெட்டும் போது, ஓலையில் இருந்த கருங்குளவிக்கூடு கலைந்து அதில் இருந்து வெளிவந்த குழவி அந்தக் குடும்பத்தலைவரைக் கொட்டியது. இதனால் அவர் பனை மரத்திலிருந்து கீழே விழுந்தார். பலத்த காயமடைந்த அவர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலன்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,ரி7)

## ஐ.நா. அதிகாரிகள்...

பகுதிகளுக்கும் சென்று சிறுபான்மையினத்தவர்கள் எதிர்நோக்கும் இனம், மதம், மொழிசார்ந்த பிரச்சினைகள் குறித்து நேரடியாகக் கண்காணிப்பார் என்று ஐ.நாவின் கொழும்பு அலுவலகம் தெரிவித்தது.

இலங்கையில் ஆராயப்படும் விடயங்கள் குறித்த தகவல்களையும் ரீட்டா ஐசேக் நடியா சேகரிப்பார். பத்து நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் ஐ.நாவின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர், அரசதரப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சிவில் சமூகத்தினர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோரை த்துக் கலந்துரையாடுவார். இந்தப் பயணத்தின் போது அவதானிக்கப்படும் தகவல்களை 2017 மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் அவர் அறிக்கையாக முன்வைப்பார் என்று ஐ.நாவின் கொழும்பு அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. இதே வேளை, கொழும்புக்கு நேற்று வந்தடைந்த ஐ.நாவின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசேக் நடியாவை அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர வரவேற்று பேச்சுக்களை நடத்தினார்.

இலங்கையில் சமூகங்களுக்கிடையே காணப்படுகின்ற பெரியளவிலான சவால்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே எனது பயணத்தின் நோக்கம் என்று ஐ. நாவின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசேக் நடியா தெரிவித்தார். (வ-5,21)

# பஸ் சில்லுக்குள் சிக்கி வயோதிபர் பரிதாபச் சாவு

திருகோணமலை, ஒக். 11

திருகோணமலை - புத்தளம் பிரதான வீதியில் பஸ்ஸில் பயணித்த வயோதிபர் ஒருவர் பஸ்ஸிலிருந்து இறங்கும் போது கால் இடறி விழுந்து சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கால் இடறி விழுந்த முதியவர் பஸ்ஸின் பின் சில்லுக்குள் சிக்குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும், பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ளதாகவும் ஹொரவப் பொத்தானப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## மரண அறிவித்தல்கள்

### அன்ரனி மரியகொண்சகா



பிறப்பு:08.07.1944
இறப்பு:09.10.2016

யாழ்.டேவிட் வீதியைப் பிறப்பிடமாகவும். நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி மரியகொண்சகா 09.10.2016 ஞாயிற்றுக்கிழமை இறை பதம் எய்தினார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.10.2016) செவ்வாய்க்கிழமை இல.05, சென்பீற்றர்ஸ் வீதி, நவாலி கிழக்கில் உள்ள அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறுதிக்கிரியை களுக்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05, சென்.பீற்றர்ஸ் லேன்,
நவாலிகிழக்கு, மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்

077 408 1769

### விசுவலிங்கம் பாலசுப்பிரமணியம் (பாலா)

(ஓய்வு பெற்ற நூலகப் பொறுப்பாளர், சமாதான நீதிவான்)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிட மாகவும் ஆசிரியர் வீதி, பெரியரசடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பாலசுப்பிரமணியம் கடந்த (04.10.2016) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் தங்கமுத்து தம்பதியரின் அன்புமகனும், கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும், வசந்தநாயகியின் பாசமிகு கணவரும், கௌதமியின் பாசமிகு தந்தையும், சந்திரபாகுவின் அன்பு மாமனும், அஸ்வினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2016) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல.
0061 469360792,
0061402703064

தகவல்:
உறவினர்.

### குமாரவேலு ஆறுமுகநாதன்

(முன்னாள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் - நீர்வேலி)



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு ஆறுமுகநாதன் நேற்று (10.10.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புத் தம்பியும், தர்சீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - முல்லைத்தீவு), விமலனி ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்குமாரின் (கல்வி சாரா உத்தியோகத்தர், கோப்பாய் ஆசிரிய கலா சாலை) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: செ. செந்தில்குமார்(மருமகன்)
077 361 8944, 077 6027107
பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மகேஸ்வரி நவரத்தினம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி நவரத்தினம் நேற்று (10.10.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2016) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சமாதிக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

### முருகேசு கோபாலபிள்ளை



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கோபாலபிள்ளை நேற்று (10.10.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடராசா, மங்கையற்கரசி, சண்முகலிங்கம் மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சிவபாக்கியம், பராசக்தி, புனிதவதி மற்றும் விசாலாட்சி ஆகியோரின் மைத்துனரும் ஞானேஸ்வரி, ஞானசேகரம் ஆகியோரின் அன்புத்தந்தையும் இராமநாதன், விஜயகுமாரி ஆகியோரின் அன்புமாமனும் துஸ்யந்தன், துசிகரன், துசிதா, தஜீவன், கபூரன், தனுசன், விதுசன் ஆகியோரின் அன்புப்பேரனும் திருக்ட்ஷனின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் (புளியங்கூடல் சந்தி) மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் சந்தி.

தகவல்
குடும்பத்தினர்
077 0655959

### திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்

மலர்வு
09.11.1945

உதிர்வு
09.10.2016



யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினி தேவி கனகரத்தினம் (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - பகவதி தம்பதியரின் அன்புமகளும் பிரபல வீட்டு வர்ண ஒப்பந்தக்காரர் கலாபூஷணம் கனகரத்தினம் அவர்களின் அன்புமனைவியும் பிரியலதா (இத்தாலி) வின் அன்புத்தாயும் ஜேஸ்மனின் (இத்தாலி) அன்பு மாமியும் சற்குணேஸ்வரி, சிவசோதிமலர், ஜெயராஜா (டென்மார்க்), கமலதாஸ், குமாரதாஸ் (பிரான்ஸ்), பாரதிதாசன், ஸ்ரீரங்கதாஸ் (கனடா), ஸ்ரீரங்கமலர், ரஞ்சிதமலர், ரூபதாஸ் (கனடா), ரட்ணமாலா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கேமலதா (ஜேர்மனி), ரூபலதா, சுவர்ணலதா, ரட்ணமதன் (பிரான்ஸ்), ரட்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயும் இன்பராணி, செல்வராணி, சுகுணாதேவி, குலமதி, அருந்தவநாயகி, தவமலர், பிரேமலதா, மீரா, சத்தியா, விக்னேஸ்வரன், தங்கராஜா, மதிதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரவியராசா (ஜேர்மனி), ரவிச்சந்திரன், சகாயமோகன், சுதா, றெஜினா ஆகியோரின் அத்தையும் சுவீற்றி, றெபேக்கா, எப்சிபா, றெஷோன், செறோமி, செறோனிக்கா, றொஷான், ஹரீஸ், ஹரீன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (12.10.2016) புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் கொழும்புத்துறை வசந்தபுரம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி முன் வீதி.
நாயன்மார்கட்டு.
077 8303949

தகவல்:
இ. கனகரத்தினம்
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

எமது Canadian International நிறுவனமானது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கவுள்ளது. இவ் அலுவலகத்துக்கான பதவி வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது.

தகைமை:
O/L, A/L மேற்கல்வி தகைமை
தொடர்பு: 077 2986763,
077 077 1377
076 706 7679



**கற்றால் மட்டும் போதுமா ?**
**கற்றதுக்கேற்ற வேலை வேண்டாமா ?**

**உங்கள் மனம் விரும்பும் தனியார் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள இன்றே தொடர்பு கொள்ளவும்.**

**WINSTAR JOB BANK**

**இவ்வருடம் எம்மூலமாக 100 இற்கும் அதிகமானோர் விரும்பும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளனர்.**

* ACCOUNTANT * NURSE * CALL CENTRE EXECUTIVE
*EXECUTIVES * CASHIER * RECEPTIONIST
*DRIVER * CARPENTERS *PHARMACIST
*RECOVERY OFFICERS * SALES BOY/GIRLS
*SOFTWARE MARKETING

நீங்கள் பல காலம் தேடிக்கிடைக்காத வேலைவாய்ப்பினை சில காலங்களில் தேடிப் பெற்றுக்கொள்ள புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக்கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.
(பதிவுக்கட்டணம் உண்டு)

WINSTAR JOB BANK
# 106 தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021 3202789
T.P: 076 5450539
fb : winstarjobbank, web : www.winstarjaffna.com


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை இராசலிங்கம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை இராசலிங்கம் நேற்று (10.10.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் (ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், மனோரஞ்சிதம் (ரதி), சர்வலிங்கம் (ரவி), நகுலேஸ்வரி (ரஜனி), விஜயா(வதனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளானந்தம், பத்மநாதன், ஜெகநாதன், ஜெகதாம்பிகை, காலஞ்சென்ற அற்புதநாதன் மற்றும் மீனாம்பிகை, கதிரமலைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரட்ணசிங்கம், பாமினி, கவீந்திரன், கந்தையா ஆகியோரின் மாமியும், Dr. தர்சன், ஜனுஷன், கீர்த்திகன், விதுஷா, இந்துஜன், நிரூஜன், சாருஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளை[illegible] வீதி, ஈச்சமோட்டை,
(ரதி) 021 221 7144

தகவல்:
குடும்பத்தினர்.

## மானிய உர படிவங்களை கையளிக்குமாறு அறிவிப்பு

தென்மராட்சி, ஒக்.11

கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் மானிய உர விநியோகப் படிவங்கள் பெற்று இதுவரை ஒப்படைக்காத தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகப் படிவங்களை கையளிக்க வேண்டும் என்று தனங்களப்பு கமக்கார அமைப்பின் தலைவர் விசாகப்பெருமாள் சதானந்தன் தெரிவித்தார்.

இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரத்துக்குப் பதிலாக பணம் வழங்கப்படவுள்ளது. கடந்த மாதம் கமநல சேவைகள் நிலையங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மானிய உரத்துக்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டன.

(ந-9)


## பதவிக்கான தேடல்

நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது American நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.

* வயதெல்லை 18-30 * அனுபவம் அவசியமற்றது
* மேற்பார்வையாளர்கள், விற்பனைப்பிரதிநிதிகள்,
* தங்குமிடம் , உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 076 666 8385, 077 230 2795


## துயர் பகிர்கின்றோம்



சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்

**விசுவலிங்கம் பாலசுப்பிரமணியம்**

(ஆசிரியர் வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரி)

அவர்கள் 04.10.2016 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

மத்தியஸ்தர் சபை, சாவகச்சேரிப் பிரதேசம்.


**புறொயிலர் கோழிக்குஞ்சு**

புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
076 3488645



**பணிப்பெண் தேவை**

வெள்ளவத்தையில் வசிக்கும் கௌரவமான சிறிய குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.
தொடர்பு கொள்ளவும்
T.P : 077 5651122



**கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

இல. 30, கிருஸ்ணபிள்ளை வீதி.
ஈச்சமோட்டை, யாழ்.
விஜயதசமி வகுப்புக்கள் ஆரம்பம்:
(11.10.2016)
ஓர்கன், வயலின், வாய்ப்பாட்டு,
புல்லாங்குழல், ஹார்மோனியம்.


## ஓய்வூதியர் தின விழா நாளை

யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் ஓய்வூதியர் தினவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-11)

## பொன்காந்தன் மீது போத்தலால் குத்து

கிளிநொச்சி, ஒக். 11

ரெலோ அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கவிஞர் பொன்காந்தன் கண்ணாடிப் போத்தலால் குத்தப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

பொன் காந்தனுக்கும் அயல் வீட்டாருக்கும் இடையில் நீண்டகாலமாக காணிப் பிணக்கு ஒன்று இருந்துள்ளது. இந்தப் பிணக்கினால் இரு தரப்பினருக்குமிடையே நேற்றைய தினம் வாக்குவாதம் இடம்பெற்றது. இது சிறிது நேரத்தில் கைகலப்பாக மாறியுள்ளது. இந்த கைகலப்பின்போதே உடைக்கப்பட்ட கண்ணாடிப் போத்தலால் கவிஞர் பொன் காந்தன் தாக்கப்பட்டார். சம்பவத் தில் காயமடைந்த அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-21)


## தவறிவிட்டது

SPB யின் இசை நிகழ்ச்சியின் போது Huawei Honor 3c Mobile Phone தொலைந்து விட்டது (மரூன் நிற மேலுறை) எனக்கு அவசியமான சங்கீத DATA கள் அதில் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 391 2098, 021 221 3013



**வீடு வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலி கலாசாலை வீதியில், ஐந்துஅறையுடன், 100 அடி நீளம் மற்றும் 50 அடி அகலமுடைய (களஞ்சிய சாலைக்கு பயன்படுத்தக்கூடிய) வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு - 071 1575509, 077 4451916



**RoomS & கடை வாடகைக்கு**

நல்லூர் வடக்கில் (கல்வியங்காடு) சகல வசதிகளுடன் (தனிவழிப்பாதை, பல்கணி, கார் parking உட்பட) பெரிய இரண்டு அறைகள் உடன் வாடகைக்கு உண்டு.
கீழ்மாடி கடையும் அதேஇடத்தில் வாடகைக்கு இருக்கின்றது.
தொடர்பு - மதி - 077 3296035,
077 5541389



**வாடகைக்கு**

யாழ் மருத்துவ பீடத்துக்கு மிக அண்மையில் 05 மாணவர்களிற்கான அறைகள் வாடகைக்கு உண்டு. மாணவர்களுக்கு மட்டும்.
தொடர்பு: 077 21 89874


## கௌரவ வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

வடமாகாணசபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு பற்றிய அறிவித்தல்

வடமாகாணசபையின் அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். தியாகேந்திரன் அவர்களின் தலைமையில் மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு 03.10.2016 இல் இருந்து செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணைக்குழுவானது இல. 63, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வடமாகாணசபையின் பிரதம செயலாளரின் அலுவலகத்திலிருந்து தனது அலுவல்களை மேற்கொள்ளும். முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைகளும் விசாரணை நடாத்தும் முறைமைகளும் மற்றும் நேர அட்டவணைகளும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான அறிவித்தல் விரைவில் குழுவினால் வெளியிடப்படும். இக்குழு நியமனத்திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு இயங்கும்.

வடக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் பணிப்பிற்கிணங்க இவ்வறிவித்தல் விடப்படுகின்றது.

முதலமைச்சர் அலுவலகம்.
ஏ9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
2016.10.10

திருமதி. வி. கேதீஸ்வரன்
முதலமைச்சரின் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்ஜென்ரினாவை சுருட்டியது தெ.கொரியா

உலகக்கிண்ண கபடித் தொடரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் தென் கொரியாவிடம் வீழ்ந்தது ஆர்ஜென்ரினா.

இந்தியாவின் அகமதாபாத்தில் தொடர் நடை பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஆர்ஜென்ரினாவை எதிர்த்து தென்கொரியா மோதியது.

68:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தென்கொரியா வெற்றிபெற்றது. தென்கொரியா தனது அடுத்த ஆட்டத்தில் பங்களாதேஷை நாளை மறுதினமும், ஆர்ஜென்ரினா தனது அடுத்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை நாளையும் எதிர்கொள்ளுகின்றன. (ம)



## ஞானமுருகன், கரவைச்சுடர் அணிகளுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 11

மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன், கரவைச்சுடர் அணிகள் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.

மனோகராவின் மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. ஞானமுருகன் அணியின் சுமன் பதிவுசெய்த கோலால் அந்த அணி முதல் பாதியின் முடிவில்; 1:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் கோலெதுவும் பதிவாகவில்லை. முடிவில் வெற்றிபெற்றது ஞானமுருகன்.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் கரவைச்சுடர் அணியை எதிர்த்து பொற்பதி சென். பீற்றர் அணி மோதியது. கரவைச்சுடர் அணியின் குபேந்திரன் 12ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்ய 20ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் சென். பீற்றர் அணியின் சுகந்தன். இரண்டாம் பாதியில் கோல்கள் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேறியது கரவைச்சுடர். (ம-108-422)



# மூன்றாவது டெஸ்டிலும் இந்தியா பிடி இறுக்கம்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின்படி இந்திய அணி வெற்றியின் விளிம்பில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 557-5 என்ற நிலையிலிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தினார் கோக்லி. அவர் 211 ஓட்டங்களையும், ரகானே 188 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 51ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக போல்ட், பட்டேல் இருவரும் தலா இரு இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 28-0 என்ற நிலையில் இருந்தது. குப்தில் 17 ஓட்டங்களுடனும், லாதம் 6 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். இந்தியாவின் ஆடுகளங்களில் இந்தியாவின் பந்துவீச்சாளர்களின் திறமைகளைக் கேள்விக்கு உட்படுத்தும் விதத்தில் இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. நியூசிலாந்து 100 ஓட்டங்களைத் தாண்டிய பிற்பாடும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. இருவரும் அரைச்சதம் கடந்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 118 ஆக இருந்த போது 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். வில்லியம்சனை 8 ஓட்டங்களுடனும், ரெய்லர், ரோஞ்சி இருவரையும் ஓட்டமெதனையும் பெறவிடாதும் ஆட்டமிழக்கச் செய்து நியூசிலாந்தின் மத்திய வரிசையைத் தகர்த்தார் அஸ்வின். அவர் குப்திலை ரண்அவுட்டும் செய்தார்.

நீஸ்ஹம் ஒரு முனையில் நிலைத்து நின்றார். மறுமுனையில் வற்லிங், சான்நெர் இருவரும் குறுகிய இணைப்பாட்டங்களை வழங்கிச் சென்றனர். லாதமும் அஸ்வினிடம் எல்.பி.டபிள்யு. ஆனார். முடிவில் 299 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது நியூசிலாந்து. பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக அஸ்வின் 6 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 258 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்தது இந்தியா. அந்த அணி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்துச் சென்றார் கம்பீர். நாள் முடிவில் இந்தியா இலக்குச் சரிவில்லாமல் 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முரளி விஜய் 11 ஓட்டங்களுடனும் புஜாரா ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

# யாழ். பல்கலை. சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில் யாழ். பல்கலையே சம்பியனானது.

யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக் கழக அணி 49.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனந்தனன் 55 ஓட்டங்களையும், ருக்மன் 49 ஓட்டங்களையும், டிலக்சன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் மயூரன், அலன்ராஜ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் ஜெரிக், கிருபாகரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 42.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து, 45 ஓட்டங்களால் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது. அதிகபட்சமாக ஜேம்ஸ் 32 ஓட்டங்களையும், ஜெரிக் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குருகுலசூரிய 4 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த குருகுலசூரிய, தொடராட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் யாழ். பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஜெனந்தனன், சிறந்த களத்தடுப்பாளராக சென்றலைட்ஸ் அணியைச் சேர்ந்த ஜெரிக்துசாந் ஆகியோர் தெரிவாகினர்.

(ம-422)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஒக். 11

**கழுகுகளின் கால்பந்தாட்டம்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன.

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிமை பிற்பகல் 3.30மணிக்கு இம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து அம்பாள் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-422-23-108)

## ஜப்பான் தொடரில் கிர்ஜியோஸ் சம்பியன்



ஜப்பான் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவில் கிண்ணம் வென்றார் ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்ஜியோஸ். இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் 15 ஆவது நிலை வீரரான ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்ஜியோஸை எதிர்த்து பெல்ஜியத்தின் டேவிட் கொபின் மோதினார்.

ஆட்டத்தின் முதல் செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் கிர்ஜியோஸ். ஆனால் சரிவிலிருந்து மீண்ட அவர் அடுத்த இரு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று ஜப்பான் தொடரில் மகுடம் சூடினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமிறங்க முன்னரே ஓட்டம்பெற்றது நியூசி.

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி, களமிறங்கும் முன்பே 5 ஓட்டங்கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. கிரிக்கெட் வரலாற்றில் ஓர் அரிய நிகழ்வாகவும் இது பதிவானது.

இந்தூரில் ஆட்டம் நடைபெற்று வருகிறது. இந்திய அணி துடுப்பெடுத்தாடும்போது, ஜடேயா ஆடுகளத்துக்கு நடுவாகவும், குறுக்காகவும் ஓடினார். நடுவர் ஆடுகளத்தை சேதப்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை செய்த பின்னரும், அவர் அவ்வாறு செயற்பட்டதால், இந்திய அணிக்கான அபராதமாக 5 ஓட்டங்கள் நியூசிலாந்துக்கு இலவசமாக வழங் கப்பட்டன. இதனால் நியூசிலாந்து அணி களமிறங்கும்போதே 5 ஓட்டங்களுடன் களமிறங்கியது. (ம)





# சீன ரென்னிஸ் தொடர்: ஆன்டி முர்ரே சம்பியன்

சீன ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே.

பீஜிங் நகரில் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள வீரரான முர்ரேயை எதிர்த்து பல்கேரிய வீரர் டிமிட்ரோவ் மோதினார்.

முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து, இரண்டாவது செற்றையும் 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானார்.

முர்ரேக்கு இது 40ஆவது பன்னாட்டு மதிப்புப் பெற்ற கிண்ணமாகும். ரியோ டி ஜெனிரோ நகரில் அண்மையில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும் முர்ரேயே சம்பியனாகியிருந்தார். (ம)

# தெ.ஆபிரிக்காவை சமாளிக்குமா ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது. அந்த அணியின் முழுக்கவனமும் ஆஸ்திரேலியாவை 5:0 என்று வழித்துத் துடைப்பதிலேயே உள்ளது. அதற்கேற்ப தென்னாபிரிக்காவின் வீரர்கள் அத்தனை பேரும் சிறந்த திறனில் உள்ளனர். நேர் மாறாக ஆஸியின் வீரர்கள் திறனிழந்து தவிக்கின்றனர். இந்த நிலையில் நாளைய ஆட்டத்திலும் ஆஸியின் வெற்றி சந்தேகம் எனக் கருதப்படுகிறது. உலகச் சம்பியனாக வலம்வரும் ஆஸ்திரேலியாவை தென்னாபிரிக்கா 5:0 என்று வழித்துத் துடைத்தால் அது ஆஸ்திரேலியாவுக்கு மிகப்பெரும் கௌரவச் சிக்கலாகக் கருதப்படும். மொத்தத்தில் தென்னாபிரிக்காவை ஆஸ்திரேலியா எவ்வாறு சமாளிக்கப் போகிறது பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (ம)

# உலகச் சம்பியனாக வர ரஸ்பேர்க்குக்கு வாய்ப்பு

நடப்பு வருட கார்பந்தயத் தொடரில் தான் சம்பியனாவதைக் கிட்டத்தட்ட உறுதிசெய்தார் ஜேர்மன் வீரர் ரஸ்பேர்க்.

நடப்பு வருடத்துக்கான கார்பந்தயத் தொடர் வழக்கம் போல 21 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. 17 ஆவது சுற்று ஜப்பானின் ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒட்டுமொத்த சுற்றுக்களின் அடிப்படையில் முன்னிலையில் இருக்கும் ரஸ்பேர்க், இந்தச் சுற்றையும் கைப்பற்றினார். இதனால் அவர் உலகச் சம்பியனாவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகக் கருதப்படுகிறது.

முடிவடைந்த 17 சுற்றுக்களின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ள ரஸ்பேர்க்குக்கும், இரண்டாவது இடத்திலுள்ள கமில்டனுக்கும் இடையில் 33 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. எனவே மீதமிருக்கும் நான்கு சுற்றுக்களிலும் கமில்டன் வெற்றிபெற்று, ரஸ்பேர்க் இரண்டாம் இடத்தைப் பெற்றாலும், ரஸ்பேர்க்கே உலகச் சம்பியனாக வாய்ப்பு அதிகம். (ம)




# அபராதங்கள் குவியலாம்

இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ், இங்கிலாந்து வீரர்கள் சிலர் தமக்குள் நீண்டதும் தவிர்க்கப்பட வேண்டியதுமான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அவர்களுக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை அபராதம் விதிக்கலாம் என்று கருதப்படுகிறது.




முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 8 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 204 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

இங்கிலாந்து துடுப்பெடுத்தாடியபோது பட்லருக்கும் பங்களாதேஷ் வீரர்களான ஸ்டோக்ஸுக்கும் ரமீம் இக்பாலுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. நடுவர்கள் தலையிட்டும் உடனடியாக தீர்த்து வைக்க இயலாத அளவுக்கு குறித்த வாக்குவாதங்கள் சென்றன. ஆட்டம் முடிந்த பிற்பாடு பட்லர், தனது உரையில், ஒரு வீரர் ஆட்டமிழந்தால் அதனைக் கொண்டாட எதிரணியினருக்கு முழுச் சுதந்திரமும், தகுதியும் உள்ளது. ஆனால், ஆட்டமிழந்த வீரரை பெயர் சொல்லி அழைத்தோ அல்லது அவருக்கு முன்னால் நின்றோ ஆர்ப்பரிப் புக்களில் ஈடுபட இயலாது. பங்களாதேஷ் வீரர்கள் எமக்கு எதிராக அதையே செய்தனர் என்று தெரிவித்தார்.

இந்த விவகாரம் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டால், இரு தரப்பினருக்கும் அபராதங்கள் விதிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)

# கபடி உலகக்கிண்ணம் இன்றைய மோதல்கள்

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஈரானை எதிர்த்து கென்யாவும், 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து பங்களாதேஷும் மோதவுள்ளன. (ம)




# அமெரிக்காவை அடக்கியது ஜப்பான்

கபடி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டமொன்றில் அமெரிக்காவை வீழ்த்தியது ஜப்பான்.

இந்தியாவின் அகமதாபாத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் ஒன்றில் அமெரிக்காவை எதிர்த்து ஜப்பான் மோதியது. ஆரம்பம் முதலே அமெரிக்காவால் ஜப்பானுக்கு ஈடுகொடுக்க இயலவில்லை. முதல் பாதியின் முடிவில் 26:9 என்று ஆதிக்கம் செலுத்திய ஜப்பான், தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து முடிவில் [illegible] என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. ஜப்பான் தனது அடுத்த ஆட்டத்தில் போலந்தை நாளை எதிர்கொள்கிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வின் அசத்தல்

மிகக் குறைந்த இன்னிங்ஸில் 20 தடவைகள் ஐந்து இலக்குகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற வரலாற்று அடைவை எட்டினார் அஸ்வின்.
நடைபெற்றுவரும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் இன்னிங்ஸில் அஸ்வின் 6 இலக்குகளைக் கைப்பற்ற நியூசிலாந்து 299 ஓட்டங்களில் சுருண்டது. இந்த ஐந்து இலக்குகளையும் சேர்த்து, பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 39 ஆட்டங்களில் கலந்துகொண்ட அஸ்வின், 20 தடவைகள் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றினார்.
இங்கிலாந்தின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான பேர்ண்ஸ் 25 ஆட்டங்களில் 20 தடவைகள் ஐந்து இலக்குகளை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். ஆஸ்திரேலியாவின் முன்னாள் பந்து வீச்சாளர் கிரிம்மெட் 37 ஆட்டங்களில் 20 தடவைகள் ஐந்து இலக்குகளை வீழ்த்தி இரண்டாவது இடத்தில் உள்ளார். (ம)



# சீன ரென்னிஸ் கிண்ணத்தை தக்கவைத்தார் ரட்வன்ஸ்கா

சீன ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தைத் தக்கவைத்தார் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்கா.
பீஜிங் நகரில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. கடந்த வருடம் சீன ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்ற ரட்வன்ஸ்காவை எதிர்த்து இங்கிலாந்து வீராங்கனை கோன்டா மோதினார். ரட்வன்ஸ்கா கிண்ணத்தை தக்கவைப்பார் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக நிலவியது. அதற்கேற்ப சிறந்த ஆட்டத்தை வெளிப் படுத்திய ரட்வன்ஸ்கா முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றி முன்னிலை பெற்றார். அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார்.
இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றதன் மூலம் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறும் வாய்ப்பை கோன்டா பெற்றார். இதன்மூலம் கடந்த 32 ஆண்டுகளின் பின்னர் பன்னாட்டுத்தரப் படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறும் வீராங்கனை என்ற வாய்ப்பை அவர் பெற்றார். (ம)

## ஞானவைரவர் சம்பியன்

கரணவாய், ஒக். 11
அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத் துடுப்பாட்டத் தொடரில் ஞானவைரவர் அணி சம்பியனானது.
யூனியன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. அச்சுவேலி முரசொலி அணியும், ஞானவைரவர் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய முரசொலி அணி 9 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய ஞானவைரவர் அணி 9.5 பந்துப் பரிமாற்றங்களில் 5இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. (ம-108)

## சமபோசா கிண்ணத்துக்கான தேசியமட்ட கால்பந்தாட்டம்



கொழும்பு, ஒக். 11
பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட இருபால் அணிகளுக்கும் இடையிலான சமபோசாக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் நடை பெறவுள்ளது.
பொலனறுவை மாவட்டத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை தொடரின் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மாவட்டமட்டத்தில்முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள், தொடரில் கலந்து கொள்கின்றன. (ம-23)

## 71 ஆவது நிமிடத்தில் களமிறங்கினார் எடிசன்



கொழும்பு, ஒக். 11
இலங்கை கால்பந்தாட்ட அணிக்கும் கம்போடியா கால்பந்தாட்ட அணிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்தாட்டத்தில் இலங்கை அணியில் இடம் பிடித்திருந்த தமிழ் வீரர் எடிசன், 71 ஆவது நிமிடத்தில் களமிறங்கினார்.
இலங்கைத் தேசிய அணியில் இரு தமிழ் வீரர்கள் இடம்பெற்றிருந்தனர். ஒருவர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஞானரூபன், மற்றவர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எடிசன். உபாதை காரணமாக ஞானரூபன் களமிறங்கவில்லை. எடிசன் முழு உடற்தகுதியுடன் இருந்த போதிலும் அவர் முதல் பாதியின் முடிவு வரை களமிறக்கப்படவில்லை. இரண்டாம் பாதியில் 71 ஆவது நிமிடத்தில் களமிறங்கினார். (ம-23)

## காளியம்பாள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 11
அராலி திருமகள் சனசமூக நிலையமும் அராலி திருமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் தாவடி காளியம்பாள் அணி சம்பியனானது.
திருமகளின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து சாவாற்கட்டு மகாத்மா அணி மோதியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய காளியம்பாள் அணி, முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. சிறந்த வீரனாக காளியம்பாள் அணியின் அகிலன் தெரிவானர். சிறந்த கோல் காப்பாளராக சாவற்கட்டு மகாத்மா அணியின் மயூரன் தெரிவானர். (ம-23)



## கம்போடியாவிடம் இலங்கை சரண்

கொழும்பு, ஒக். 11
கம்போடியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்தாட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் கம்போடியா அணி அபார வெற்றி பெற்றது. (ம-23)

வீடு தேவை
விருந்தினர் விடுதிக்கு பொருத்தமான வீடுகள் தேவை.
அவை
* இணைந்த குளியல் அறைகள்
* போதுமான வாகனத்தரிப்பிடம்
* சிறந்த அளவிலான பாதையுடன் வீடுகள் விரும்பத்தக்கது.
T.P :071 4115002

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
DELF A1, A2,B1பரீட்சைகளில் 100 % சித்தி. 1145 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.10.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 24.10.16 Mon @ 3.30pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்..
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
முழுவதும் 1000 கிளைகள்.
சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
மொழிபெயர்ப்புக்கள்:
வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
கனடா, சுவிற்சர்லாந்து...
AF இல் படிக்கிறார்கள்
ஆரம்பம்: 13.11.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

தனு பிறிண்டேர்ஸ்
போட்டோக் கொப்பி (ஒருபக்கம்) 2/=
கலர் பிறிண்ட் 20/=
தருமபுரம், கிளிநொச்சி. தொ.பே: 0778115361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.